விலை ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

27°c - 24°c
ஓரளவு
மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 064 வள்ளுவர் ஆண்டு 2047 தை 15, வெள்ளிக்கிழமை 29.01.2016

### சிக்கா வைரஸ் குறித்து எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, ஜன.29
சிக்கா (Zika) வைரஸ் தொற்று பரவும் நாடுகளுக்கு பயணிக்கும் இலங்கை சுற்றுலாப் பயணிகளை அவதானத்துடன் செயற்படுமாறு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு.
குறித்த வைரஸ் தொற்று இலங்கையில் இதுவரையில் கண்டறியப்படவில்லை என அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவின் விசேட மருத்துவ வல்லுநர் ஆனந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.
எனினும் பக். 26

# தமிழரின் அச்சம் நீங்கும் வகையில் புதிய அரசமைப்பு

## உருவாக்க வேண்டும் என்கிறார் ஜயம்பதி விக்கிரமரட்ண எம்.பி.



கொழும்பு, ஜனவரி 29
தங்களிடம் உள்ளவையும் இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது. இதனால் அவர்கள் சமஷ்டி நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். எனவே பெரும்பான்மை இனத்தவர்கள் ஒன்றிணைந்து, தமிழர்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும் என அரசமைப்பு நிபுணரும் பக். 28

### ஜெனிவாத் தீர்மானம் குறித்து ரணில்-மைத்திரி-மங்கள பேச்சு

கொழும்பு, ஜன. 29
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தைச் செயற்படுத்துவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் நேற்றுமுன்தினம் முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.
போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தை நிறுவுதல், சர்வதேசப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைப் பக். 27

### இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார் யோசித

கடற்படைச் சட்டங்களை மீறியமைக்காக

கொழும்பு, ஜன. 29
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான, லெப்.யோசித ராஜபக்ச, கடற்படைச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் கீழ், இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.
கடற்படைச் சட்டங்களை மீறி, தனது பதவியை துஷ்பிரயோகம் பக். 26

முச்சந்தி முரளி



சொல்லில மட்டுமல்ல செயலிலையும் வேணும் பாருங்கோ...

### ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் நிதியுதவி

கொழும்பு, ஜன. 29
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அடுத்த ஆண்டு ஒரு பில்லியன் டொலர் நிதியுதவி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது. கடந்த காலங்களை விட அதிகமான நிதியுதவியாக இது அமையும் என்று தெரி பக். 26

### யாழ். குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு இரணைமடுத் திட்டமே ஒரே தீர்வு

கிளிநொச்சி விவசாயிகளுக்கு இது குறித்து தேவையற்ற அச்சம் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜன. 29
சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு இரணைமடுக் குளத்திலிருந்தான குடிதண்ணீர் விநியோகமே மிக இலகுவான திட்டம். ஆனால் இந்தத் திட்டம் தொடர்பில் கிளிநொச்சி விவசாயிகளிடத்தில் தேவையற்ற - இனம் புரியாத பீதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் பக். 28

### சுன்னாகம் பிரதேசக் கிணற்று நீர் மக்கள் பாவனைக்கு உகந்ததல்ல

அறிக்கைகள் இதனை மறைத்துவிட்டன என்கிறார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, ஜன. 29
சுன்னாகம் பிரதேசக் கிணற்று நீர் பாவனைக்கு உகந்தது அல்ல என்று தெரிவித்திருக்கும் அமைச்சர் ஹக்கீம், அதனை மறுத்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.
2016 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
சுன்னாகம் அனல் மின்நிலையத் தி பக். 26

## காணாமற்போனோரின் உறவுகள் சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பர்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

கிளிநொச்சி, ஜன. 29
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தின நிகழ்வை, முற்று முழுதாகப் புறக்கணிக்கப்போவதாக வடக்கு - கிழக்கு மாகாண காணாமற்போனோரின் உறவினர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் புறக்கணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.
வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த காணாமற்போனோரின் குடும்பங்களின் சந்திப்பு, கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவு மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.
இந்தச் சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே இந்தச் சங்கத்தைச் சேர்ந்த பக். 29

### தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் அரசு

சோமானந்த தேரர் கோரிக்கை



கொழும்பு, ஜன. 29
தமிழ் அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வை அல்லது விடுதலையை அரசு வழங்கவேண்டும் என்று தியகடுவாவே சோமா பக். 27

### காணாமற்போனோர் தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆராய்வு

யாழ்ப்பாணத் தாயின் அவலத்தை எடுத்துக் கூறினார் சமந்தா பவர்



யாழ்ப்பாணம், ஜன. 29
ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முறைசாராக் கூட்டத்தில் இலங்கையில் காணாமற்போனோர் தொடர்பான விவகாரம் குறித்துப் பேசப்பட்டுள்ளது. காணாமற்போனோர் தொடர்பாக பொறுப்புக் பக். 29

### சர்வதேச நீதிமன்றத்துக்கு ஒருபோதும் உடன்படோம்

பிரதமர் ரணில் திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 29
போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நீதி விசாரணையை மேற்கொள்வதற்குச் சர்வதேச நீதிமன்றமொன்றுக்கு அரசு ஒருபோதும் உடன்படாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் சபையில் உறுதிபடத் தெரி வித்தார்.
இதேவேளை, இந்த விசாரணைகளில் இலங்கையர் அல்லாத வெளிநாட்டவர் எவரேனும் பங்குகொள்வதாயின் அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் பக். 29

### 'சிங்க லே' பின்னணியில் மகிந்த குழு

கொழும்பு, ஜன. 29
நாட்டில் அண்மைக்காலமாகப் பரவியுள்ள சிங்க லே உள்ளிட்ட இனவாத செயற்பாடுகளுக்குப் பக். 29

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
JITF 2016
இன்று ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் அனுமதியின்றி கல் அகழ்வோரைக் கைது செய்க

*ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உத்தரவு*

ஒட்டுசுட்டான் பகுதியில் அனுமதியின்றிக் கல் அகழ்வோரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெறும் கல் அகழ்வால் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது என்றும் இது குறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் வாவெட்டிமலைப் பகுதியில்எவரின்நேரடிக்கண்காணிப்பும் இன்றி கடந்த 5 வருடங்களுக்கு மேலாகக் கிரவல் கல் அகழ்வு நடைபெற்று வருகின்றது. அகழப்படும் கற்கள் இந்த மாவட்டத்தின் பயன்பட்டுக்கு இல்லாது வேறு இடங்களுக்கே கொண்டு செல்லப்படுகின்றன. நூறு அடியைத் தாண்டியும் கல் அகழப்படுதால் எதிர்காலத்தில் இந்தப் பகுதியை அண்டிய பிரதேசங்களில் மண் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளது என்று பொது மக்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த பகுதியில் கல் அகழ்வுக்கான அனுமதி மாவட்ட நிர்வாகங்களிடம் பெறப்படாமல் தென்னிலங்கையில் உள்ள திணைக்களங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்றது என்றும் கூறப்பட்டது. இது தொடர்பில் 2014ஆம் அண்டு வடக்கு முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன், குறித்த இடத்துக்கு நேரடியாகச் சென்றும் அவர் பார்வையிட்டிருந்தார். எனினும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்தநிலையில் தற்போது குறித்த பகுதியில் இருந்து கிரவல் கற்களை அனுமதியின்றிக் கொண்டு செல்ல முற்பட்டால், அனுமதியின்றி அகழ்ந்தால் உடன் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸார் மற்றும் பிரதேச செயலர்களுக்கு ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் பணித்துள்ளனர். (ற-101,21)

## ரூபா 2 ஆயிரம் கொடுக்க ரூ.200க்கு பெற்றோல் நிரப்பியவர் சிக்கினார்

*புதுக்குடியிருப்பு எரிபொருள் நிலையம் ஒன்றில் சம்பவம்*

முல்லைத்தீவு, ஜன.29

2 ஆயிரம் ரூபாவுக்குப் பெற்றோல் நிரப்புமாறு கூறியபோது இரு நூறு ரூபாவுக்குப் பெற்றோல் நிரப்பிய எரிபொருள் நிலையப் பணியாளர் முல்லைத்தீவு மாவட் டத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினரிடம் வசமாக மாட்டி கொண்டார். இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வாரம் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் ஒருவர் தனது இல்லத்திலிருந்து காரில் மாகாண சபை அமர்வுக்காக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துள்ளார். அவர் புதுக்குடியிருப்பிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் காரை நிறுத்திக் காரில் இருந்தவாறு 2 ஆயிரம் ரூபாவுக்குப் பெற்றோல் நிரப்புமாறு எரிபொருள் நிரப்பும் ஊழியரிடம் கூறியுள்ளார்.

எரிபொருள் நிரப்பப்பட்டவுடன் 2 ஆயிரம்ரூபாபணத்தைக்கொடுத்துவிட்டுக் குறித்த நேரத்துக்குள் யாழ். செல்ல வேண்டும் என்பதால் புறப்பட்டார். ஆனால் காரின் பெற்றோல் அளவைக் காட்டும் மானியில் பெற்றோல் நிரப்பியமைக்கான மாற்றம் ஏதும் தெரியவில்லை.

இதையடுத்து தனது உறவினர் ஒருவருக்குத் தொலைபேசி மூலம் இது குறித்துத் தெரிவித்துள்ளார். அதன்பின்னர் இருவரும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலை யத்தின் முகாமையாளருக்கு தொலைபேசி மூலம் இது குறித்துக் கூறியுள்ளனர்.

அதையடுத்து முகாமையாளர் குறித்தபணியாளரை அழைத்து விசாரித்துள்ளார். இதன்போது பதற்றத்தில் 2 ஆயிரம் ரூபாவுக்குப்பதிலாக இருநூறு ரூபாவுக்கு பெற்றோல் நிரப்பப்பட்டு விட்டது என்று தெரிவித்து மிகுதிப் பணத்தைக் கொடுத்துள்ளார்.

இதுகுறித்துஎரிபொருள் நிலைய முகாமையாளரிடம் கேட்டபோது, இந்தச் சம்பவம் உண்மை என்றார்.

காரில் வந்தவர் மாகாண சபை உறுப்பினரா என்பது தெரியாது. 3 பூச்சியங்களுக்குப் பதிலாக தவறுதலாக 2 பூச்சியங்கள் அழுத்தப்பட்டுவிட்டன. இவ்வாறு வழக்கமாக நடைபெறுவதில்லை. சன நெரிசலான நேரங்களில் சில வேளைகளில் நடைபெறலாம். குறித்த நபருக்கு மிகுதிப் பணம் கொடுக்கப்பட்டது - என்றும் தெரிவித்தார். (ற-21,102)

## கிளி. ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இன்று

கொழும்பு, ஜன.29

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று மு.ப. 9 மணிக்கு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் கடந்த வாரங்களில் முடிவுற்ற நிலையில் மாகாணத்தின் நான்காவது மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த திங்கட்கிழமைநிறைவடைந்தது. அங்கு ஆராயப்பட்டு நிறைவு பெறாத விடயங்கள் பல இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் தீர்மானங்களாக எடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத் தலைவர்களா வடக்கு மாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் வியஜகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இ.அங்கயன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (ற-21,ரி3)

## யாழ். பொலிஸாருக்கு மட்டும் கொடுப்பனவுகளில் தாமதம்

*பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன. 29

பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளின் நலன் கருதி வழங்கப்படும் புத்தகக் கொள்வனவுக்கான 4 ஆயிரம் ரூபா யாழ்.மாவட்டத்திலுள்ள பொலிஸாருக்கு இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து பொலிஸ் மா அதிபர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

வழமையாக ஜனவரி மாத ஆரம்பத்தில் இந்தப் பணம் வழங்கப்படும். தவறின் மாத இறுதிக்குள் குறித்த பணம் சகலருக்கும் வழங்கப்பட்டுவிடும். ஆனால் இந்த மாதம் நிறைவடைய இன்னும் 2 நாள்கள் இருக்கும் நிலையிலும் அந்தப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பிரதேசங்களில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் யாழ்.மாவட்டத்திலுள்ள காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இரண்டு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பிரிவில் உள்ள பொலிஸாருக்கு வழங்கப்படவில்லை.

குறித்தபணம் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் உள்ள கணக்குக் கிளையால் வழங்கப்படுவது வழமை. ஆனால் அது இன்னும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பொலிஸ் மா அதிபர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-107)

## நிறை போதையில் குடிமகன் உதட்டைக் கடித்துச் சண்டை

*யாழ். பஸ் நிலையத்தில் சம்பவம் கடியுண்டவர் வைத்தியசாலையில்*

யாழ்ப்பாணம், ஜன. 29

நிறைந்த போதையில் இருவருக்கிடையே ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது. அதில் ஒருவரின் உதட்டை மற்றொருவர் கடித்துக் குதறியுள்ளார். உதட்டில் கடியுண்டவர் இரத்தம் சிந்திய நிலையில் அலறியவாறு வைத்தியசாலை நோக்கிச் சிகிச்சைக்காக ஓட்டம் எடுத்தார்.

இந்தச் சம்பவம் யாழ். பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

குறித்த இருவரும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளனர். வந்த வேலை முடிந்தவுடன் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து மது அருந்தியுள்ளனர். முதலில் ஒன்றாக இருந்தவர்கள் பின்னர் போதை கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கச் காரசாரமாக வாதமிட்டுள்ளனர். வாய்த் தர்க்கம் முற்றி அது கைகலப்பாக மாறியுள்ளது. இருவரும் பட்டப்பகலில் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டுள்ளனர். அதன்போது ஒருவர் மற்றையவரின் உதட்டைக் கடித்துக் குதறியுள்ளார்.

கடி வாங்கியவர் அலறி துடித்ததை அடுத்து அங்கிருந்தவர்கள் அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். கடித்துக் குதறியவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டவரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த நபரைக் கைது செய்த பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். குறித்த நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,107)

## நல்லூர் கிளை நூலகத்தின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.29

நல்லூர் கிளை நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில்வெற்றிபெற்றோருக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாநகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரங்களை நல்லூர் கிளை நூலகம் மற்றும் மாநகர சபையில் பார்வையிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## முத்திரை வரியை கொழும்பு அரசு வழங்க வேண்டும் என கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.29

வடக்கு மாகாணத்தின் மாவட்டச் செயலகங்களின் ஊடாக மத்திய அரசு ஈட்டிய முத்திரை வரி நிதிகள் 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் மாவட்டச் செயலகங்களின் ஊடாக உறுதிகை மாற்றத்தின்போது மத்திய அரசு ஈட்டிய நிதி 2011ஆம் ஆண்டின் பின்னர் உள்ளூராட்சித் திணைக்களங்களுக்குப் பகிரப் படவில்லை என்று சுட்டிக் காட்டப் படுகின்றது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் -போர் முடிவுற்றதன் பின்னர் புலம்பெயர் மக்கள் அதிகளவில் தாயகம் திரும்பி உறுதிக் கை மாற்றங்கள் நடைபெற்றன.

அதனால் 2011ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளுக்கு உரிய வருமானம் பல பில்லியன் ரூபா என சுட்டிக்காட்டப்படுவதோடு குறித்த நிதிகள் உள்ளூராட்சிச் சபைகளுக்குக் கிடைக்கும்போது பிரதேச சபைகளின் ஆளுகையின் கீழ் உள்ள பல வீதிகளுக்கும் விமோசனம் கிடைக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த நிதியை உள்ளூராட்சி சபைகளுக்குக் கிடைக்க அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்கள் சிலர் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-107)

## வழித்தடம் மாறிய டிப்பர் சாரதிக்கு எதிராக வழக்கு

வழித் தடத்துக்கான உரிய அனுமதி பெற்றபோதும், அதற்குரிய தடத்தில் செல்லாது பாதையை மாற்றி மணல் கொண்டு சென்ற டிப்பர் வாகனத்தைப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து ஊர்காவற்துறைக்கு மணல் கொண்டு செல்வதற்காக அனுமதி பெறப்பட்டிருந்தது.

ஆனால் மணல் ஏற்றிய பின்னர் அதன் சாரதி மணலுடன் டிப்பர் வாகனத்தை வழித்தடம் மாறி கே.கே.எஸ்.வீதியூடாக வேறு இடத்துக்குக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளார்.

அதையடுத்து மணலுடன் கூடிய டிப்பர் வாகனத்தை நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் தடுத்து பொலிஸ் நிலையத்துக்குச் கொண்டு சென்றனர். இரவு வீதிச் சோதனையின் போது குறித்த டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தச் சாரதிக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி அணிந்து கத்தி முனையில் நவாலியில் 10 பவுண்கள் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 29

முகமூடிக் கொள்ளையர்கள் வீட்டிலுள்ளவர்களைக் கத்தி முனையில் அச்சுறுத்தி, வீட்டுக்காரர் அணிந்திருந்த சுமார் 10 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலி தெற்கு சிந்தாமணி பிள்ளையார் கோயிலை அண்மித்து நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்றில் வந்ததாகக் கூறப்படும் குறித்த கொள்ளைக் கும்பல், வீட்டில் இருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் வாகனத்தை நிறுத்திவிட்டு சத்தமின்றி வீட்டுக்குள் நுழைந்துள்ளது. யன்னல் கம்பி பிரித்தே அவர்கள் வீட்டினுள்ளே புகுந்துள்ளனர்.

வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்தவர்களை நித்திரையிலிருந்து எழுப்பிக் கத்தியைக் காட்டி அச்சுறுத்தியுள்ளனர். வீட்டில் இருந்தவர்களின் கை மற்றும் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுண் நகைகளையும் கழற்றித் தருமாறு அச்சுறுத்தி அவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பினார்கள் கொள்ளையர்கள். வீட்டிலுள்ள அனைத்து அலுமாரிகளையும் சல்லடை போட்டுத் தேடியுள்ளனர்.

கொள்ளைக் கோஷ்டி சென்ற பின்னர் நேற்றுக் காலை அது தொடர்பில் தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அது தொடர்பில் விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நவாலி, மானிப்பாய் பகுதிகளில் அண்மைக்காலமாக கொள்ளை, வழிப்பறி, திருட்டுக்கள் இடம் பெற்று வருவது பொது மக்களிடத்தில் அச்சமான சூழலை தோற்றிவித்துள்ளது. (து-4-107)

## போலி முகநூல் கணக்கு பயன்படுத்தும் சந்தேகநபர்கள் குறித்து கடும் உத்தரவு

*நாட்டைவிட்டு வெளியேறத்தடை*

கொழும்பு, ஜன.29

போலி முகநூல் கணக்கு வைத்திருத்தல் மற்றும் அதன்மூலம் மக்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேற முற்பட்டால் அல்லது நாட்டுக்குள் வருகை தரும் போது கைது செய்ய நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவானால், குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு மேற்படி உத்தரவு, பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெண்களின் பெயர்களில் முகநூல் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு, அதனூடாக, செல்வந்தர்களுடன் நட்புடன் பழகி, அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபர்கள் நாட்டுக்குள்ளேயும் வெளியேயும்செயற்படுகின்றனர் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையிலேயே போலி முகநூல் கணக்கு வைத்திருத்தல் மற்றும் அதன்மூலம் மக்களை அச்சுறுத்திய குற்றச்சாட்டில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நாட்டை விட்டு வெளியேற முற்பட்டால் அல்லது நாட்டுக்குள் வருகை தரும் போது கைது செய்ய நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது. (வ)

## கோத்தா கைதைத் தடுக்கும் மனு; நீதியரசர் பிரியந்த விலகுகிறார்

கொழும்பு, ஜன.29

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு கோரித் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையிலிருந்து விலகுவதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியந்த ஜயவர்தன தீர்மானித்துள்ளார்.

அவன்கார்ட் சம்பவம், மிக் விமானக் கொள்வனவு மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல் நிறுவனத்தின் பங்கு விற்பனையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் விசாரணைகளையடுத்து, கைது செய்ய ஆயத்தமாவதாகத் தெரிவித்து இந்த அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணைக்காக பிரியந்த ஜயவர்தன, பிரியசாத் டெப் மற்றும் உபாலி அபேரத்ன ஆகிய நீதியரசர்கள் குழாம் பெயரிடப்பட்டிருந்தது.

நீதியரசர் பிரியந்த டெப் விலகியதை அடுத்து, வழக்கு விசாரணையை நேற்று முன்னெடுக்க முடியாமற் போனதுடன், அது தொடர்பான விசாரணை மே மாதம் 25ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப் பட்டுள்ளது. (து-சி)

## ரின் மீனுக்கான வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ ரின் மீனுக்கான (மெக்கரல்) விசேட பண்ட வரி 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 50 ரூபாவாக இருந்த குறித்த வரியை தற்போது 100 ரூபா வரை அதிகரிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (வ)

## காணமற்போன மீனவர் தொடர்பில் மூவர் கைது

கொழும்பு, ஜன.29

குருநகர்ப்பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற சமயம் காணாமற் போன மீனவருடன் சேர்ந்து படகில் பயணித்த மூவரை. சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் இருந்து கடந்த 26ஆம் திகதி படகு ஒன்றில் கடற்றொழிலுக்காக நான்கு பேர் பயணித்தவேளையில் ஒருவர் கடலில் வீழ்ந்து காணாமல் போயிருந்தார்.

இவ்வாறு காணாமல் போனவர் அல்பிரட் பேனாந்து (வயது- 40) என்பவர் ஆவார்.

காணாமல் போனவர் தொடர்பில் கடந்த மூன்று தினங்களாக எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் அவருடன் படகில் பயணித்த ஏனைய மூவரையும் நேற்றிரவு கைது செய்த யாழ்ப்பாணம் பொலிஸார், குறித்த சந்தேக நபர்களை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (வ-101)

உடன் தேவை / 0777 165 589
நல்லூரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு முழுநேர அல்லது பகுதிநேர ஓவ்செற் மெசின் இயக்கக் கூடியவர் தேவை.
தொடர்புகளுக்கு: 17, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
புதிய காட்சி நேரங்கள்




விசாரணை
021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1232
சீட்டிழுப்பு திகதி 2016.01.28
வெற்றி இலக்கங்கள்
01 36 38 40 Q
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 11,490,900/=

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 454
சீட்டிழுப்பு திகதி 2016.01.28
வெற்றி இலக்கங்கள்
17 19 36 52 G
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 40,385,300/=

தமிழ் மக்கள் பேரவை
Tamil People's Council
தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர்குழுவால் தயாரிக்கப்பட்ட
அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைவு
*(Report of the Sub-Committee on Finding a Political Solution to the National Question)*
பொதுமக்கள் முன்னிலையில் வெளியிடப்படும் ஆரம்ப நிகழ்வு
தலைமை
மாண்புமிகு நீதியரசர்
சி.வி. விக்னேஸ்வரன்
(வடக்கு மாகாண முதலமைச்சர், இணைத்தலைவர் - தமிழ் மக்கள் பேரவை)
இடம் : கைலாசபதி கலைஅரங்கம் யாழ். பல்கலைக்கழகம்
காலம் : 31.01.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 3.00 மணி
தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஏற்பாட்டுக்குழு
தமிழ் மக்கள் பேரவை

7ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை
யாழ். மாநகர சபை மைதானத்தில்
எமது விற்பனைக் கூடம்
தெரிவுக்கு முந்துங்கள்!
JITF 2016

மங்களா நிறுவனத்தின் Mega Sale
Mangala
அனைத்துப் பொருள்களுக்கும் என்றும் எங்கும் கிடைக்காத விலைக் கழிவு
மூன்று நாள்கள் (29,30,31) மட்டுமே!




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிராஞ்சி பாடசாலையிலிருந்து விலகி வருகின்றனர் மாணவர்கள்

## முதலமைச்சரிடம் மாகாண சபை உறுப்பினர் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.29

பூநகரி, கிராஞ்சிப் பகுதியிலுள்ள பாடசாலையில் தமிழ்ப் பாட ஆசிரியருக்கான தேவையைத் தெளிவுபடுத்தியும் இதுவரை எந்தவிதமான முன்னேற்பாடுகளும் இல்லாததால் மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக. வடக்கு மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினம் முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையின் 44 ஆவது அமர்வு கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது ஆட்சேர்ப்பு வெற்றிட நியமனங்களில் காணப்படாத வெளிப்படைத் தன்மைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட உறுப்பினர் அரியரத்தினம், முதலமைச்சரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரி, கிராஞ்சிப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றுக்கு கடந்த பல வருடங்களாகத் தமிழ்ப் பாட ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படாமை தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை என்ன எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் தமிழ் பாடத்துக்கான ஆசிரியர் தேவைப்பாடு உள்ளதை வலியுறுத்திப் பெற்றோர்கள் நடத்திய போராட்டத்தில், முதலமைச்சருக்கு முன்னால் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் கொடுத்த வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. மூன்று மாதத்துக்கேனும் அயற் பாடசாலைகளில் இருந்து ஒரு ஆசிரியரை நியமித்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு நாம் தெரிவித்தோம்.

இதற்குப் பதிலாக ஓரிரு மாதங்களில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் என்று கூறியவர்கள், அதனை இன்றுவரை நிறைவேற்றவில்லை. ஆனால் பரீட்சைத் திணைக்களத்தினர் புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரப் பரிட்சை என்று சுற்றுநிருபங்களை அனுப்பிவைத்தவாறே உள்ளனர். பாடசாலையில் ஜீ.சி.ஈ. சாதாரண தரம் வரை வகுப்புக்கள் உள்ள போதும் தமிழ்ப் பாட ஆசிரியர் ஒருவர் இன்னமும் நியமிக்கப்படாததால் பெற்றோர்கள் தம்முடைய பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே விரைவாக குறித்தபாடசாலைக்கான தமிழ்ப்பாட ஆசிரியரை நியமித்து குறித்தபிரதேசத்தின்கல்விவளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் கோரினார். (த-ரி5-21)


## நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

Trainer Training (Teacher Training programme) யாழில் முதல் முறையாக

- ஆசிரியராக விரும்புவர்களுக்கும்
- முழுமையாக கற்க விரும்புவர்களுக்கும்
- English medium students
- அரச தனியார் அலுவலகர்களுக்குமானது

- 500 மணித்தியாலங்களில் நீங்களும் மிகச்சிறந்த ஆசிரியர்
- அனைத்தும் அடிப்படையிலிருந்து.
- நவீன அணுகுமுறைகள்
- Soft skills - Psychology- Leadership- Personality development.
- Teaching practice
- using Techniques effectively in English

New batches Start On : 9 am (30.01.2016) சனி (weekend)
பதிவுகளுக்கு முந்துங்கள் 9 am (01.02.2016) திங்கள் (Weekdays)

ELAS
English Language Adventure School
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P: 021 221 2410, 076 697 3040



## வேலைவாய்ப்பு

இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் வேலை வாய்ப்புக்களை SMS மூலம் பெற
REG < இடைவெளி > JOBS என டைப் செய்து
77010 இற்கு SMS செய்யுங்கள்

தொடர்பு: 076 767 7228



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




அன்னலிங்கம் பரமேஸ்வரி
தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி
செல்வி நிரோஜினி
அன்னலிங்கம்
நுண்கலைமாணி (B.F.A)
(கிழக்கு பல்கலைக்கழகம்
மட்டக்களப்பு)
பட்டம் பெற்றமைக்கு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்
கோண்டாவில் மேற்கு.
W.R.D.S. J/116,
KONDAVIL WEST.



# UNIVERSITY OF JAFFNA

## UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY of MEDICINE

**COMMENCEMENT OF ACADEMIC ACTIVITIES**

**B.Sc in Medical Laboratory Sciences,**
**B.Sc.in Nursing and Bachelor of Pharmacy**

The Orientation Programme for the newly admitted first year students to the Unit of Allied Health Sciences, Faculty of Medicine, and University of Jaffna for the Academic Year of 2015/2016 will commence on Monday, 8th of February 2016 at 9.30 am. at the **Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil.**

The new students are requested to participate in the Orientation Programme without fail.

**Registrar,**
**University of Jaffna.** 28.01.2016



பிரம்மஸ்ரீ க.வை. ஆத்மநாதசர்மா அவர்களின்
விநாயக மஹோற்சவ விளக்கம்

## நூல் வெளியீடு

காலம் : 30.01.2016 சனிக்கிழமை
நேரம்: பி.ப 2.30 மணி
இடம்: நல்லூர் சிவன் ஆலய மண்டபம்

தலைமை :
வாழ்நாள் பேராசிரியர்
பிரம்மஸ்ரீ. ப. கோபாலகிருஷ்ணஐயர் (யாழ். பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்:
பேராசிரியர் S. சிவலிங்கராஜா
முன்னாள் தலைவர் தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம் .

சிறப்பு விருந்தினர்:
டாக்டர் கே.சிவஷண்முகராஜா M.D.(S) தலைவர் சித்த மருத்துவத்துறை,யாழ். பல்கலைக்கழகம்.

இந் நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

271/7, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
பிரம்மஸ்ரீ. ஆ. விஸ்வநாதசர்மா
(நூலாசிரியரின் புதல்வர்)



**வாடகைக்கு** தொடர்பு: 011 344 3755

நல்லூர் கோயிலுக்கு சமீபமாக அரச பணிபுரியும் பெண்களிற்கு அறை.சமையலறை வசதியுடன் வாடகைக்கு உண்டு. முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

**விற்பனைக்கு** தொடர்பு: 071 462 0806

10 தினங்கள் மட்டும் பாவித்த HTC 820 மொபைல் போன் 3 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.

## வேலை வாய்ப்பு

யூஸ் பைக்கற்றுக்களைப் பொதி செய்வதற்குப் பெண் பிள்ளைகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 711 1530, 077 758 7079, 021 222 1155
(68405)(11,15,16)

IELTS UK KU Education
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A.G&L)IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1
K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.


# மணல் அகழ்வு, மரம் தறிப்பு உடன் தடுக்கப்படவேண்டும்

## சிராட்டிகுளம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.29

சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வதாலும், பாலை, முதிரை போன்ற காட்டுமரங்களைத் தறிப்பதாலும் தங்கள் வளங்கள் அழிக்கப்படுவதாகவும், இவற்றைத் தடுத்து நிறுத்துமாறும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட சிராட்டிகுளம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மணல், மரங்கள் கடத்தப்படும் வீதிகளில் புதிய பொலிஸ் பிரிவு ஒன்றை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மையோ, தமது கிராமத்தில் உள்ள சமூக அமைப்புக்களையோ கேட்காமல் அரசியல் பின்னணியுடன் தொடர்ச்சியாக மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவதாகச் சிராட்டிகுளம் கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த மணல் அகழ்வினால் எமது கிராமம் பெரும் அழிவுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் எமது வயல் நிலத்துக்குள் வெள்ளநீர் புகுந்து பெரிய சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆறு தோண்டப்படுவதால் எமது கிராமத்தில் உள்ள குடிதண்ணீர்க் கிணறு அனைத்துக்கும் நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதுடன் பறங்கி ஆற்றை நம்பி இருக்கும் பாண்டியன்குளம் கிராம மக்கள் வீட்டுத் தேவைக்காகக் கூட மணல் இல்லாத நிலையில் உள்ளனர்.

மணல் ஏற்றிச் செல்லப்படுவதால் எமது பிரதான வீதியானது 8 கிலோமீற்றர் தூரம் வரை குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வனப் பகுதியில் இராணுவம், வனவளப் பகுதி, அரசியல் பிரமுகர்களின் ஆதரவுடன் கனரக வாகனங்களில் மரங்களை வெட்டி ஏற்றிச் செல்கின்றனர்.

எனவே மணல் ஏற்றுவது , காடழிப்பு ஆகிய இரண்டு விடயங்களையும் உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும்– என்றனர்.

இது தொடர்பாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, வெளியிடத்து நபர்கள் மணல் அகழ்வு மற்றும்மரங்களைவெட்டி எடுத்துச் செல்வதாக கிராமமக்கள்முறைப்பாடுகள் தெரிவித்துள்ளனர். இதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

மக்களுடைய வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருவதாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-ரி7-21)


**அறை வாடகைக்கு உண்டு** 077 293 5509

நல்லூர் ஆலய சூழலிலுள்ள ஒரு வீட்டின் சிறிய அறை வாடகைக்கு உண்டு. சைவ ஆகாரப் பழக்கமுள்ள சிறு குடும்பத்தினர் தொடர்பு கொள்ளலாம். (68402)(11,15,18)

**வீடு வாடகைக்குத் தேவை** 077 245 3673

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை. (68404)(11,15,18)

**வேலையாள் தேவை (ஆண்)** 077 324 8219

ரொட்டி, பிட்டு, தோசை, இடியப்பம் ஆகிய உணவுகள் சமைக்கத் தெரிந்த, அனுபவமுள்ளவர் உடன் தேவை. (68402)(11,15,18)



## நல்லூர் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் 2016

28.01.2016 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் நல்லூர் பிரதேச சபையால் விளம்பரப்படுத்தப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் 2016 என்னும் விளம்பரத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளுள் கீழ்க்குறிப்பிடும் நிபந்தனை தவறவிடப்பட்டுள்ளது. இந்த நிபந்தனையையும் அட்டவணைப்படுத்தப்படாத பதவியின் வெற்றிடத்தை நிரப்புதல் 2016 என்பதனுள் உள்ளடக்கப்படும்.

நிபந்தனை விவரம் வருமாறு:

விண்ணப்பதாரி எமது சபை எல்லைக்குள் ஐந்து வருடங்கள் வசித்ததனை உறுதிப்படுத்தும் [illegible]

2016.01.28 [illegible]
செயலாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் திட்டத்தை வழங்க அதிகாரிகள் நிபந்தனை

## *மீள்குடியமர்ந்தோர் திரிசங்கு நிலையில்*

அச்சுவேலி, ஜன.29
வீட்டுத் திட்டம் பெறுவதற்கு விதிக்கப்படும் நிபந்தனையால் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றோம் என்று வளலாய் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தெரிவித்தன.
மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட காணிகளில் தங்கி இருப்பவர்களுக்கே வீட்டுத் திட்டம் வழங்கப்படும் என்று கண்டிப்பான நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால் பல குடும்பங்கள் வீட்டுத் திட்டத்தை பெறவும் முடியாது காணியில் தங்கி இருக்கவும் முடியாது திரிசங்குநிலையில்திண்டாடுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதுகுறித்து அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளதாவது–
காணியில் தங்கியிருப்பதற்கு வீடு வேண்டும், வீடு தேவையானால் காணியில் தங்கி இருக்க வேண்டும். சில குடும்பங்களுக்கு தொண்டு நிறுவனங்கள் நிர்மாணித்துக் கொடுத்த அரை நிரந்தர வீடு கிடைத்தது. பெரும்பாலானவர்களுக்கு அந்த வசதியும் கிடைக்கவில்லை.

> காணியில் தங்கி இருந்தால்தான் வீட்டுத்திட்டத்தில் உள்ளீர்ப்பு என அதிகாரிகள் நிபந்தனை விதிக்கின்றனர்.

எமது காணியில் சிறு குடிசை தானும் அமைப்பதற்கு கை முதல் இல்லை, சிறு குடிசையில் ஐந்து ஆறு பிள்ளைகள் குழந்தைகளுடன் எப்படித் தங்கி இருக்க முடியும். அத்துடன் மலசலகூட வசதி மற்றும் வசதிகள் இல்லை. இந்த நிலையில் தற்காலிகமாகத் தங்கியிருந்த இடங்களையும் விட்டு எமது சொந்தக்காணியில்மீள்குடியேற முடியாமலும் மன உளைச்சலுக்கு உள்ளாகிய நிலையில் கிராம சேவையாளரின் அலுவலகம், பிரதேச செயலகம், கச்சேரி என மாறி மாறி அலைகின்றோம். அதிகாரிகள் காணியில் தங்கி இருந்தால்தான் வீட்டுத் திட்டத்தில் உள்ளீர்ப்புச் செய்யப்படுவீர்கள் அல்லது வீட்டுத் திட்டம் உங்களுக்குக் கிடைக்காது எனக் கைவிரிப்பதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.– என்றனர்.
அதேவேளை காலம் தாழ்த்தி மீள்குடியேற்றப் பகுதிக்குச் சென்ற சிலரது காணிகளைக் காணவில்லை என்றும் கூறப்படுகின்றது. முன்கூட்டியே அயல் காணிக் காரர்கள் அவர்களது காணிகளை அபகரித்து வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும், அவர்களது காணிக்கு உரிய உறுதி மற்றும் நில அளவைப்படம் இருந்தபோதிலும், காணியைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
(ற–11)

# மருத்துவபீடத்துக்குத் தெரிவாகும் மாணவர் தொகையை அதிகரிக்குக

## முல்லைத்தீவு ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தீர்மானம்

முல்லைத்தீவு, ஜன.28
முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மருத்துவ பீடத்துக்கு தெரிவுசெய்யும்மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் அமைச்சர் ரிசாத் பதியுதீன் உட்பட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஒவ்வொரு வருடமும் நடைபெறுகின்ற க.பொ.த. உயர்தர பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து மருத்துவ பீடத்துக்கு கடந்த காலங்களில் 4 மாணவர்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டு வந்தனர். இந்த எண்ணிக்கை கடந்த காலத்தில் திருப்தியாக இருந்தாலும் தற்போது பற்றாக்குறையாகவே உள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் மருத்துவ பீடத்துக்கான மாணவர்கள்தெரிவில்மாற்றம்கொண்டு வரப்பட்டு அதிகரிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலும் குறித்த மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதுவன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்சாந்திசிறீஸ்கந்தராஜா கோரிக்கை விடுத்திருந்தார்.
இந்தக் கோரிக்கையை ஏற்கொண்ட இணைத்தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியுதீன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது அபிவிருத்திகள் அதிகரிப்பதாலும் மாணவர்கள் கற்கும் திறனும், அவர்களுடைய பல்கலைக் கழகத்திற்கான தகுதி அதிகரிக்கப்பட்ட நிலையிலும் மருத்துவ பீடத்துக்கு மட்டுமல்லாது ஏனைய பீடங்களுக்கும் எமது மாவட்டத்தில் இருந்து பல்கலைகழகம் செல்லும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்ததுடன் இதை தீமானமாக நிறைவேற்றுவோமா எனவும் அதிகாரிகள்,ஏனைய இணைத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.
அதையடுத்து குறித்த கோரிக்கை ஏகமனதாக தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.
(ற–21,ரி7)

# விசேட மருத்துவ முகாம்

சாவகச்சேரி, ஜன.29
அரச நிர்வாகமற்றும்முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் படி அரச திணைக்கள அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் விளையாட்டு மற்றும் தேகாரோக்கிய மேம்பாட்டு தேசிய வாரத்தையொட்டி தென்மராட்சி பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் இன்று விசேட மருத்துவப் பரிசோதனை முகாம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
பிரதேச செயலகத்தில் பணியாற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட அலுவலர்களுக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்களால் நீரழிவு இரத்த அமுக்கம் உடற்றகுதி திணிவுச் சுட்டி போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இதேவேளை தேசிய வாரத்தையொட்டிய இறுதிநாளான நாளை விசேட நிகழ்வாக பிரதேசத்தைச் சேர்ந்த அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத் தர்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

# நவக்கிரியில் நில வெடிப்பை பார்வையிட்டார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன.29
நவக்கிரிப் பகுதியில் நில வெடிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேரில்சென்று பார்வையிட்டார்.
கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற நில வெடிப்பின் காரணமாக ஒரு வீடு உட்பட குறிப்பிட்ட அளவு பிரதேசமும் பாதிக்கப்பட்டது. பாதிப்பின் தன்மை தொடர்பில் இதுவரை உறுதியான முடிவுகள்வெளியிடப்படவில்லை.



குறித்த பகுதியின் பாதிப்பின் தன்மை சரியாகத் தெரியப்படுத்தப்படாதுள்ள நிலையில் பிரதேச மக்கள் தொடர்ந்தும் பதற்றத்தின் மத்தியில் வாழ்வதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.
நில வெடிப்புக்கு நிலத்தின் கீழ் உள்ள பாறைகளின் விரிசலே காரணம் எனக் கூறப்படுகின்ற போதும் அதற்கு மிக அண்மைப் பிரதேசத்தில்உள்ளகைத்தொழில் பேட்டையின் கனரக இயந்திரப் பாவனைகாரணமாக இருக்குமா என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
இடர் ஏற்பட்ட நாள்முதல் தொடர்ந்தும் கண்காணித்து வரும் மாவட்டச் செயலக அதிகாரிகள் இது தொடர்பில்ஆராய்வதற்காகதொழிற் பேட்டைப்பகுதிக்கும்சென்றுஆய்வுகளை நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.
இந்தநிலையில் இடர் ஏற்பட்டு ஆறாவது நாளான நேற்று பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்வையிட்ட முதல் அரசியல்வாதியாக வடக்கு முதலமைச்சர் அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளார். (ற–101)

# உறுதி கைமாற்றத்தில் வேறுபட்ட கட்டணங்கள்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.29
யாழ்.மாவட்டத்தில் உறுதிக் கை மாற்றத்தின் போது இடத்திற்கு இடம் மாறுபட்ட கட்டணங்கள் அறவிடப்படுகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அத்துடன் சில இடங்களில் ஒரே கிராமத்துக்குள் உறுதி எழுதும் இருவர் இரு வேறு வகையான பண அறவீட்டை மேற்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.
இது தொடர்பில் யாழ்.மாவட்டபதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, காணிகை மாற்றத்திற்கான உறுதி முடிப்புக்களுக்கு ஓர் பொதுவான வரையரையே நடைமுறையில் உள்ளது. அது இடத்துக்கு இடம் வேறுபடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.
அறுதி உறுதி ஒன்று எழுதும் போது அதற்கான முத்திரை வரியாக உறுதியின் பெறுமதியில் முதல் ஒரு லட்சம் ரூபாவுக்கு 3 வீதம் அதாவது 3 ஆயிரம் ரூபாவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு லட்சத்துக்கும் 4 வீத அடிப்படையிலும் அறவிடப்படும்.
அதேபோல்சீதனம், நன்கொடை உறுதிகள் எழுதப்படுகின்ற சமயங்களில் அதன் முதல் 50 ஆயிரம் ரூபாவுக்கு இரண்டு வீதஅடிப்படையிலும், அதற்குமேற்பட்ட தொகைகளுக்கு மூன்று வீத அடிப்படையிலும் அறவிடப்படுகின்றது.
இப்பெறுமதிதான் தற்போது வரை நடைமுறையில்உள்ளது . அதற்கு மேற்பட்ட தொகையானது உறுதிமுடிப்பாளர்களின் கட்டணமாக அறவிடப்படுபவையாகவே அமையும்.– என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–101)

# வங்கிக் கிளை திறப்பு விழா

சாவகச்சேரி, ஜன. 29
தேசிய அபிவிருத்தி வங்கியின் (என்டிபி) சாவகச்சேரிக் கிளை இன்று மு.ப. 9 மணிக்கு சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் திறக்கப்படவுள்ளது. (ற–9)

# கரைச்சி கல்விக் கோட்டத்தில் இருபாடசாலைகள் இயங்கா நிலையில்

கிளிநொச்சி, ஜன.29
கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிக் கோட்டத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் இரு பாடசாலைகள் தற்போது இயங்காத நிலையில் உள்ளன என்று கரைச்சிக் கோட்டக் கல்வி பணிப்பாளர் தெரிவித்தார்.
கரைச்சி பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் 30க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.
நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
கரைச்சி கோட்டத்தின் கீழ் 44 பாடசாலைகள் உள்ளன. அவற்றில்தற்போது 42 பாடசாலைகள் இயங்கு நிலையிலும் 2 பாடசாலைகள் இயங்காமலும் உள்ளன. கரைச்சி பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு 963 ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். தற்போது 933 ஆசிரியர்களே உள்ளனர் என்று கரைச்சி கோட்டக்கல்வி பணிப்பாளர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.
இதன் போது கருத்து தெரிவித்த இணைதலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.
நேற்று முந்தினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கல்வி தொடர்பாக மக்கள் தங்களின் முறைப்பாடுகளை தெரிவிக்க வந்த போதும் நேரத்தை கவனத்தில் கொண்டு ஒரு சிலருக்கே வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. (ற–21,ரி3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசமைப்பு சீர்திருத்தத்துக்கு கருத்துப் பெறும் செயலமர்வு

## எதிர்வரும் 12ஆம் திகதி முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, ஜன.29

அரசமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பில் மக்களிடம் இருந்து வாய்மொழி மற்றும்எழுத்துமூலமான யோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் அமர்வு எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது.

குறித்த அமர்வில் கலந்து கொண்டு அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்கள் தங்களது யோசனைகளை முன்வைக்குமாறு மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

> அரசியல் அமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்கள் தங்களது யோசனைகளை முன்வைக்குமாறு மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து யோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் 20 பேர் கொண்ட குழு ஒன்று எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் தமது அமர்வுகளை நடத்தவுள்ளது.

இந்த அமர்வானது குறித்த திகதிகளில், முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்களில் இடம்பெற உள்ளது. எனவே பொது மக்கள் குறித்த அமர்வுகளில் கலந்துகொண்டு தங்களுடைய யோசனைகளை முன்வைக்குமாறும், இந்த அமர்வுகளுக்கூடாக விசேட படிவங்களை முல்லைத்தீவு மாவட்ட பிரதேசசெயலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறும் மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். (ற-21)



## வவுனியா தமிழ் ம.ம. வித்தி. புதிய நுழைவாயில் திறப்பு

வவுனியா, ஜன.29

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் புதிய நுழைவாயில் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கல்வெட்டையும் நீதிபதி திரை நீக்கம் செய்தார். புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட சீ.சீ.ரி. கமராவை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி பு.அலெக்ஸ்ராஜா இயக்கி ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் எஸ்.மரிய நாயகம் தலைமையில் நடைபெற்றது. குறித்தநுழைவாயில் பாடசாலையின் 2002 ஆம் ஆண்டு கற்ற உயர்தர மாணவர்களால், 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி து.பிரபாகரன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன்சோமராஜா, வவுனியா மாவட்ட அரச அதிபர் றோகண புஸ்ட குமார ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

## தெரு விளக்கை சீர் செய்யுமாறு கோரிக்கை

பளை, ஜன.29

பளை-இத்தாவில் சந்தியில் மின்னல் தாக்கி பழுதடைந்த தெருவிளக்கை சீர் செய்து தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரவு வேளைகளில் வாகனங்களில் வருவோருக்கு குறித்த தெருவிளக்கு பெரும் நன்மையாகக் காணப்பட்டது என்றும், தற்போது அது பழுதடைந்திருப்பதால் வாகனங்களில் வரும் பயணிகள் இத்தாவில் சந்தியில் இறங்காமல் தூரத்தில் இறங்கி நடந்து வரவேண்டியுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ற- 9)



நீண்ட காலமாக வசதிகள் குறைந்த கட்டடத்தில் இயங்கிவந்த முல்லைத்தீவு கல்வி வலயப் பணிமனைக்கான புதிய கட்டடம் நேற்றுமுன்தினம் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, வடமாகண சபை பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன், முல்லை வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி முனீஸ்வரன் மற்றும் முல்லை வலய அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஆகியோரும் வலயக் கல்வி பணிமனையின் பகுதிகளை திந்து வைத்து வாழ்த்துரைகளையையும் வழங்கினர். (ற-ரி7)



கிளிநொச்சி-விசுவமடுப் பகுதியில் பசு ஒன்று மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குறித்த பசு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்தனர். இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பரந்தன்-முல்லை வீதியில் இரவுவேளை பயணித்த மோட்டார் சைக்கிள். குறுக்கே வீதியை கடக்க முற்பட்ட பசுவுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. பசு சம்பவ இடத்திலேயே வாயால் இரத்தம் வந்த நிலையில் உயிரிழந்தது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ற-21)

# குப்பைகள் அள்ளப்படுகின்றன கொட்டும் இடம்தான் தெரியாது

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முல்லை. அதிகாரிகள் பொறுப்பற்ற பதில்

முல்லைத்தீவு, ஜன.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் அள்ளப்படும் குப்பைகள் எங்கு கொட்டப்படுகின்றன என்று தெரியாது. ஆனால் குப்பைகள் அள்ளப்படுகின்றன என்பது தெரியும் - என பதிலளித்துள் ளனர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே குறித்த அதிகாரிகள் இவ்வாறு பதில் அளித்துள்ளனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் உள்ளூராட்சி சார்ந்த அபிவிருத்தி பற்றிய ஆராய்வுகள் இடம்பெற்றபோது முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளில் குப்பை கொட்டப்படுகின்றன என்றும், அதுகுறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுப்பதில்லை என்றும் குற்றஞ்சாட்டிய பொதுமக்கள், கட்டாக்காலி மாடுகள் பஸ் நிலையங்களுக்குள் நடமாடுவதால் பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

> கட்டாக்காலி மாடுகள் பஸ் நிலையங்களுக்குள் நடமாடுவதால் பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.

இது குறித்து இணைத்தலைவர்களால் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரிடம் கேள்வி எழுப்பட்டது. அதற்குப் பதிலளித்த அதிகாரிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குப்பைகள் நாளாந்தம் அள்ளப்படுகின்றன. பஸ் தரிப்பிடங்களில் உள்ள கட்டாக்காலி மாடுகளின் கழிவுகளை அகற்றவும் தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன - என்றனர்.

அள்ளப்படும் குப்பைகளை எங்கு கொட்டுகின்றீர்கள் என்று இணைத் தலைவர்களால் மீண்டும் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அதிகாரிகள் அது தெரியாது. ஆனால் குப்பைகளை அள்ளுகின்றோம் எனவும் பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்திருந்தனர்.

இவர்களுடைய இந்த பதிலுக்கு உள்ளூராட்சி அமைச்சராக உள்ள முதலமைச்சர் அது பற்றி மேலதிக கேள்வி எழுப்பாதிருந்தார். (ற-21,ரி7)

## கிளி. கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 24 சிங்களக் குடும்பங்கள்

கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் தற்போது 43 பேரைக் கொண்ட 24 சிங்களக்குடும்பங்கள்வசிக்கின்றன என்று பிரதேச செயலக புள்ளிவிவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட 40 வீதமான காணிகள் இன்னும் இராணுவத்தினர் வசம் உள்ளது என்று குறித்த புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டகரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளான ஆனைவிழுந்தான் கிராமத்தில் 7 சிங்களக் குடும்பங்களும், மலையாளபுரம் கிராமத்தில் ஒரு சிங்களக் குடும்பமும், கிருஷ்ணபுரத்தில் ஒரு சிங்களக் குடும்பமும், அம்பாள் குளத்தில் இரு சிங்களக் குடும்பமும், திருநகரில் ஒரு சிங்களக் குடும்பமும், பெரியபரந்தனில் இரு சிங்களக் குடும்பங்களும், ஊற்றுபுலத்தில் 3 சிங்களக் குடும்பங்களும், கிளிநொச்சி நகரபகுதிகளில் 7 சிங்களக் குடும்பங்களுமாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மொத்தமாக 24 சிங்களக்குடும்பங்களைச் சேர்ந்த 43பேர் தற்போது வசிக்கின்றனர் என்று குறித்த புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு 40 வீதமான காணிகள் தற்போதும் இராணுவத்தின் பயன்பாட்டில் உள்ளது என்றும் குறித்த புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பதிவாளர் செயலகத்தின் 2015 வருமானம் 188 மில்லியம்

யாழ்ப்பாணம், ஜன.29
யாழ். மாவட்டச் செயலக பதிவாளர் செயலகத்தின் கடந்த ஆண்டின் மொத்த வருமானம் 188 மில்லியன் ரூபா என மாவட்டச் செயலக பதிவாளர் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டச் செயலகத்தின் பதிவாளர் செயலகத்தின் ஊடாக மட்டும் கடந்த ஆண்டின் மொத்த வருமானமாக 188 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகத்தின் பதிவாளர் திணைக்களத்தில் காணி உறுதிகளின் பிரதிகளைப் பெறல் , பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட மொழிபெயர்ப்பு கட்டணம், உறுதிப் பதிவு கட்டணம் என்பவற்றாலேயே 17.4 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது.

அதேவேளை, காணிக் கைமாற்ற உறுதிக் கட்டணமாக 170.6 மில்லியன் ரூபாவும் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. குறித்த 170.6 மில்லியன் ரூபாவில் ஜனவரி முதல் ஜுலை மாதம் வரையில் 94.4 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளதுடன், இந்தக் காலப்பகுதி வரைக்கும் மாகாண முத்திரைவரிச் சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தகாரணத்தால் நேரடியாக அது மத்திய அரசுக்குச் சென்றுள்ளது.

இதன் மிகுதிக் காலம் ஆகிய ஓகஸ்ட் முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் ஈட்டிய வருமானத் தொகையான 76.2 மில்லியன் ரூபா முதல் தடவையாக மாகாணத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-101)

> ஓகஸ்ட் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் ஈட்டிய வருமானத் தொகையான 76.2 மில்லியன் ரூபா முதல் தடவையாக மாகாணத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் அறிமுகப்படுத்தப்பட்ட உடற்பயிற்சி வார நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. வட மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ற-101)

## யூதாததேயு ஆலய திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.29
கல்முனை புனித யூதாததேயு ஆலய திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடு இடம் பெறும். ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி இடம் பெற்று அதனைத் தொடர்ந்து புனிதருடைய பவனி இடம் பெறவுள்ளது என ஆலய அருட்பணிச் சபையினர் அறிவித்துள்ளனர். (ற-23)

## வழித்தட அனுமதி இல்லாத சாரதிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.29
வழித்தட அனுமதிப் பத்திரமில்லாமல் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட இரண்டு தனியார் பஸ் சாரதிகளுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் கடந்த செவ்வாய்க்கிழமை 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - கொழும்பு வழித் தடத்தில் சேவையில் ஈடுபடும் குறித்த இரண்டு தனியார் பஸ்களின் சாரதிகளும் வழி அனுமதிப் பத்திரத்தை கொண்டிருக்கவில்லை என பொலிஸாரால் தனித் தனியாக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அதையடுத்து நீதிவான் சி.சதீஸ்தரன் சாரதிகள் இருவரையும் தலா பத்தாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ற-103)

## அடையாளம் காட்டி சைக்கிள்களைப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜன.29
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ரோந்து சென்ற பொலிஸாரால் ஆண்களுக்கான சைக்கிள் ஒன்றும், பெண்களுக்கான சைக்கிள் ஒன்றும் நேற்று மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் பாரப்படுத்தியுள்ளனர்.

அவற்றின் உரிமையாளர்கள் அடையாளம் காட்டி நீதிமன்றில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த 12ஆம் திகதி கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனையும் உரிமையாளர் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (ற-109)

## தென்மராட்சி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் 3ஆம் திகதி

சாவகச்சேரி, ஜன.29
தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 9 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள துறைசார்ந்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பான விவரங்களை பிரதேச செயலக திட்டமிடல் பிரிவில் ஒப்படைக்குமாறு திணைக்களத் தலைவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ற-9)

## பிறப்பு, இறப்பு பதிவுச் சான்றிதழ் ஆங்கிலத்தில்

வடமராட்சி, ஜன.29
பருத்தித்துறை பெரும்பாக காணி பதிவகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களை ஆங்கில மொழியில் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களில் இருந்து பெறப்படும் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுச் சான்றிதழ்கள் ஆங்கில மொழியில் தேவைப்படும் பொதுமக்களுக்கு ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வழங்கும் சேவையை பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவக அலுவலகம் மேற்கொண்டுள்ளது. (ற-173)

## புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு நெடுந்தீவு பாடசாலையில் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.29
நெடுந்தீவு சைவபிரகாச வித்தியாலயத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிபர் கடமையைப் பொறுப்பேற்கச் சென்றபோது அவருக்கு அங்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதையடுத்து பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் பலர் பெற்றோரால் வீடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிபர் பதவிக்குரிய தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை என்று பெற்றோரால் குற்றஞ்சுமத்தப்படுகின்றது. எனினும் பெற்றோரின் இந்தக் குற்றச்சாட்டை தீவக வலயக் கல்வி அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தீவகக் கல்வி வலய அதிகாரிகள், முன்னைய அதிபரின் இடமாற்றக் கோரிக்கையை அடுத்து அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தகுதியான புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்தனர்.

பெற்றோர்கள் சிலரின் தவறான புரிதலே இந்தக் குழப்பத்துக்குக் காரணம். இது தொடர்பில் இன்று அதிகாரிகள் பெற்றோருடன் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, இடமாற்றம் பெற்றுள்ள அதிபர் மீண்டும் குறித்த பாடசாலையில் பணியாற்ற விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது என்று தீவகக் கல்வி வலய வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற-4,ரி4)

## புத்தூர் நிலாவரையில் புதிய சந்தைக் கட்டடம்

அச்சுவேலி, ஜன.29
புத்தூர் நிலாவரையில் வலி. கிழக்கு பிரதேச சபையால் 12 மில்லியன் ரூபா செலவில் புதிய சந்தைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிலாவரை வற்றா நீர் ஊற்றைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இயல்புநிலையில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக இந்தப் புதிய சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நிலாவரைச் சந்தியில் இருந்து யாழ். நோக்கிச் செல்லும் இராச வீதியில் புதிய சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தையில் பத்துக் கடைகளை நடத்துவதற்கான இறாக்கைகள், தட்டுக்கள், இரும்புச் சட்டங்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

நிலாவரை வற்றாநீர் ஊற்றைச் சூழவுள்ள வேலிக்கரையோரங்களில் உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களை வைத்துவிற்பதால்ஏற்படக்கூடிய இடநெருக்கடி, பொதுச்சுகாதாரக் குறைபாடு என்பவற்றை தவிர்க்கும் வகையில் வீதியோரத்தில் வைத்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு புதிய சந்தையில் கடைகள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண முதலமைச்சர் நிதி மூலம் வலி.கிழக்குப் பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்டுள்ள சந்தையின் உத்தியோக பூர்வ திறப்புவிழா மிகவிரைவில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-11)

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன.29
வலி.கிழக்கு விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தற்போது சின்ன வெங்காயத்துக்கு பற்றாக்குறை நிலவுவதுடன், அவற்றின் விலை சந்தையில் அதிகரித்தும் காணப்படுகின்றது. கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் மழை வீழ்ச்சி கூடுதலாக காணப்பட்டதால் விவசாயிகள் மாரிகாலத்துக்கான வெங்காயச் செய்கையில் ஈடுபடவில்லை.

தற்போதைய காலநிலையை பயன்படுத்தி விவசாயிகள் இந்த வெங்காய செய்கையில் அதிக தீவிரம் காட்டியுள்ளனர்.

புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, அச்சுவேலி, கோப்பாய், நவக்கிரிமாசிவன், ஊரெழு போன்ற பகுதிகளில் கூடுதலான விவசாயிகள் சின்ன வெங்காய செய்கையில் ஈடுபட்டு உள்ளனர். (ற-17)

## விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, ஜன. 29
ஏ-9வீதியில்சென்றுகொண்டிருந்த இரு மோட்டார்சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று சிக்கியதில், அவற்றில் பயணித்த மூவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

மீசாலை வடக்கு இராமாவில் கோவில் பூசைக்கென வந்த பூசகரை அந்தப் பகுதியில் சமாந்தரமாக வந்த மோட்டார் சைக்கிள்கள் இவரின் மோட்டார் சைக்கிளை முந்த முயற்சித்த போது ஒரு மோட்டார் சைக் கிளின் கைப்பிடி மற்ற மோட்டார் சைக்கிள் கைப்பிடிக்குள் சிக்கியதால் தூக்கி வீசப்பட்டு இருவர் காயமடைந்தனர்.

நுணாவில் ஏற்றத்தடியில் மோட்டார் சைக் கிளை முந்த முயன்ற டிரெயிலர் வாகனத்தின் பின் பகுதி மோட்டார் சைக்கிள் கைப் பிடியில் சிக்கியதில் தூக்கி வீசப்பட்டதில் ஒருவர் காயமடைந்தார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

# 7th Jaffna International Trade Fair


JITF 2016

29 30 31
ஜனவரி / January

யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
(சுப்ரமணியம் பூங்காவிற்கு முன்பாக)
Municipal Ground
Opposite Subramaniam Park, Jaffna

கல்வி

## Message From The Prime Minister of Sri Lanka



I am pleased to furnish a message of felicitations towards the JITF 2016.

For seven years, the JITF has successfully showcased the Northern Province and its vast potential for growth in trade and business opportunities. As we all know, the Northern Province has the capacity and the capability to emerge as a dynamic regional business hub of the future. The JITF undoubtedly can play a considerable role in facilitating sectors such as agriculture, IT, banking and finance, construction, hospitality, automobile and many others to engage in fruitful business opportunities in the Northern Province. Events such as this mark the blossoming of the economic potential the Northern Province holds out for all.

I would like to take this opportunity to wish the organisers of JITF all the very best.

*Hon. Ranil Wickremesinghe*

## Message From The Minister of Industry & Commerce



It is with great pleasure that I send this message of congratulations on the occasion of the 7th Edition of the Jaffna International Trade Fair 2016, which is considered as one of the mega trade exhibitions of Northern Province.

After the end of three decades of conflict in 2009, the Northern Province has now become a key region that provides promising opportunities and contributes to Sri Lanka's economic progress. JITF helps Lankan business entities from various industries to make commercial inroads into the peninsula and the profitable Northern region. In 2014, the Northern Province contributed more than Rs 360 Billion to national GDP. The Northern Province is ranked better than Uva and Sabaragamuwa provinces in economic and business climate ranking and each Northern household spends more than Rs 28000 for its needs every month. Therefore it is clear that the JITF is a well-placed fair in Sri Lanka. Therefore, as a Cabinet Minister of the Government and as an MP of the Vanni District, I wish to stress that the businesses of all scales in the Northern Province would be supported and assisted in various ways in the proposed economic reforms of the consensual government of HE the President Maithripala Sirisena and Hon Prime Minister Ranil Wickremesinghe. The latest in this series of JITF trade fairs takes place in a new chapter of Sri Lanka's history, as the new consensual government prepares to usher in a new era to Sri Lanka to take it to higher ranges in the middle income ranks.

Creating business and investment opportunities are imperative for economic and social development of a country but more importantly, involving regions in the process is crucial for overall development. Regionally focused trade fairs such as JITF is one way of expanding the development process and its awareness to the regions with great potential. Therefore, I am confident that under the direction of the new government led by committed H.E. the President Maithripala Sirisena, the JITF 2016 will play a leading role in providing the best opportunities to the Lankan business community as well as prospective entrepreneurs in enhancing the economy of the Northern region and thereby the economy of Sri Lanka itself. I wish JITF 2016 a resounding success!!

*Hon. Rishad Bathiudeen M.P.*

## Message From Consul - General of India - Jaffna



*Ayubowan / Vanakkam / Assalamu Alaikum !*

It gives me great pleasure that for the seventh consecutive year, the Jaffna International Trade Fair (JITF) being held from 29th to 31st January 2016 at Jaffna organized by the Lanka Exhibition and Conference Services (LECS) together with the Chamber of Commerce and Industry Yarlpanam (CCIY). I am glad to share for the last six years, JITF has achieved phenomenal growth and become a major attraction for all stakeholders which included the Consulate General of India in Jaffna; the Sri Lanka Convention Bureau; and the Jaffna Municipal Council. I am proud to state that this is the only major business event being organized which showcases the wide range of industries such as hospitality, construction, automobile, apparel, agriculture, Information, communication, and technology, education et al. Since 2010, JITF has been continuously registering growth both in terms of visitors and participants so also in quality and quantum of exhibits. This reflects upon both the popularity and usefulness of this Expo to the industry and end-users of products. I am confident that the passion with which the organizers are committed to the growth of this Expo, would further attract not only buyers from Sri Lanka but also the other SAARC member countries particularly. I also welcome a 60-member strong Trade delegation of the Madurai-based Tamil Nadu Chamber of Commerce and Industry (TNCCI) and other participants from India, which would pave the way for further strengthening, Sri Lanka in general and Northern Province in particular.

On our part, after the cessation of the Internal Armed Conflict in May 2009, Government of India have established its diplomatic mission in Jaffna in November 2010. Since then, India started scaling up its development assistance particularly to the war-affected North substantially. To mention a few mega project works so far undertaken by India in North are – construction of 42,000 houses; rehabilitation of Palaly airport; rehabilitation of Kankasanthurai port; rehabilitation of Northern railway; 200-bed Ward Complex at Vavuniya District hospital; renovation of Duraiyappa Stadium; establishment of Agriculture and Engineering faculties at Killinochchi campus of University of Jaffna; and setting up Language Lab at Jaffna National College of Education, Kopay, etc.

The construction works of the Jaffna Cultural Centre and the restoration of Thiruketheeswaram temple are likely to begin soon. While I extend my best compliments to the organizers in the success of JITF 2016, I would like to express my sincere gratitude to all exhibitors, associates and visitors for their dedicated and loyal support.

*Hon. A. Natarajan*

## Message From The Governor - Northern Province



It gives me great pleasure to felicitate the sponsors and organizers of the Jaffna International Trade Fair- 2016 (JITF-2016), for holding this 7th at this important juncture. The JITF brings together the key stakeholders and role-players of business in Sri Lanka in a unique annual event involving a range of sectors – manufacturing, trading, agriculture, financing, banking, construction, etc. This will also be a good forum for building net-works and linkages within and between different sections of the policy and business establishments. Most importantly, this business and economic forum is taking place at a time when the country is poised to refocus its political and policy approaches on promoting, reconciliation, good governance, rule of law and opportunity for individual creativity and private investment. This transformation is taking place at a time when the external environment also has become more positive and more engaging towards Sri Lanka promising greater opportunity for foreign investment, exports and value addition. All these developments offer potential for good business, good North-South cooperation and good governance. As the people and society as a whole in the Northern Province traverse the difficult terrain of the post-conflict transition into a sustainable era of growth and development, the forums such as JITF can provide greater impetus for socio-economic development not only within the Northern Province but also between regions. It is our expectation that entrepreneurs in the province and beyond will make optimal use of the forum to attract more business and more investments to promote employment and enhance household incomes which are priorities in the area.

*Hon. H. M. G. S. Palihakkara*

## Message From Managing Director Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd



It is with great pleasure that I extend this message for the 7th Jaffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors. As per the statistics there is 100% increase of the visitors to the exhibition which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the business community. Special attractions at JITF will be the "Made In Jaffna" pavilion with over 30 stalls, under the flagship of Chamber of Commerce & Industries of Yarlpanam (CCIY) and an unique pavilion named "KALVI" specially designed to host the education representatives. Over 20 educational institutes representing local and foreign universities will be present at the exhibition. A 2 day musical show and a carnival has also been organized to keep our visitors and exhibitors entertained. I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality. I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, former Ministry of Traditional Industries & Small Enterprise Development, The Indian High Commission in Sri Lanka, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Jaffna Municipal Council, Consulate General of India in Jaffna, the Ceylon Institute of Builders, the Sri Lanka Convention Bureau and all Exhibitors, Sponsors & participants.

I also thank the Police and the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.

*Arjun Dharmadasa*

## Message From Chairman-Chamber of Commerce & Industries of Yarlpanam



As the chairman of the Chamber of Commerce and Industries Yarlpannam, I am immensely delighted to enlighten that the Jaffna international trade fair has met continuous success in the past six years. The expectation and participation of the seventh international trade fair, being held on 29th, 30th and 31st of January 2016, will be prominent and massive.

It is noteworthy that in the past, the JITF has given root to numerous positive impact on the Northern Province commerce and Industrial activities. The JITF is an ultimate proposal for our northern industrialists to showcase their talents and products to the national as well as the international market. This also grants a perfect opportunity for them to meet foreign trade delegates, for B2B opportunities and gain future independent investors or joint ventures. I believe this will be an incentive to attract all potential investors to focus their attention on investing in Northern Province.

Furthermore, I am pleased to observe that the JITF 2016 aspires for a pinnacle of success a pavement to the triumph of local industrialists and marketers. Our thanks go to the exhibition organizer, Lanka Exhibition and Conference Services for their contribution towards making JITF 2016 a success. Also our thanks go to all participants whose participation has given us immense confidence. Also our thanks go to all sponsors, media personals and all others involved without whose participation and support the JITF will not have been a success.

I take this opportunity to thank, Hon H. M. G. S. Palihakkara Governor of Northern Province, Hon. Justice C.V. Wigneswaran Chief Minister, Northern Provincial Council, Hon A. Nadrajan Consul General, Consulate General of India, Mr. N. Vethanayagan, Government agent/ district secretary, Mr. P. Vaheesan, Commissioner, Jaffna municipal council, Police and other government officers; for your valuable support to make this trade fair a meaningful one.

*K. Vignesh*

## Message From Commissioner Municipal Council - Jaffna



It is my pleasure to give this message to the 7th Jaffna International Trade Fair (JITF). The traders who exhibited their endeavors in the past definitely have a lot to say about the achievements gained from the JITF.

As the Special Commissioner of Jaffna Municipal Council, I like to thank the organizer, Lanka Exhibition and Conference Services (pvt) Limited, supporters and sponsorers, for providing market opportunities for our local producers and introducing local markets to investors. It is not an exaggeration that the consumer protection and entrepreneurship booster are two supplementary benefits from the JITF.

Further, I appreciate the release of JITF magazine that compiles profiles of all organizations showcasing themselves as a guidance cum reference material. I expect a big crowd at the JITF from 29 -31 January 2016 as similar as it was in the past.

I wish all stakeholders of JITF to have a fruitful fair this time too.

*P. Vageshan*

Main Sponsor
IDEAL
Co-Sponsor
Organized by
LECS LANKA EXHIBITION
In Association with
CCIY
Official Sponsors
ICBT
Sri Lanka Telecom Mobitel
SICHER
e-wis
Supported by
SRI LANKA

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கெற்பேலியில் மேற்கொண்ட மணல் அகழ்வு இடைநிறுத்தம்

## அந்தப் பகுதி மக்களின் முறைப்பாட்டை அடுத்து

சாவகச்சேரி, ஜன.29
கொடிகாமம் கெற்பேலிப் பகுதியில் காணி உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட மணல் அகழ்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் மணல் அகழ்வதால் கடலேரி நீர் உட்புகும் அபாயம் உள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக் காட்டியதை அடுத்தே இந்தத் தற்காலிக தடை விதிக்கப்பட் டுள்ளது.

கொழும்பில் வதியும் குறித்த காணி உரிமையாளர் கெற்பேலியில் உள்ள தனது காணியில் மணல் அகழ்வதற்கு விண்ணப்பித்திருந்தார். பிரதேச செயலகம் 3 லோட் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கியிருந் தது.

அதன்படி மணல் அகழ்ந்து ஏற்றப்பட்டபோது அந்தப் பகுதி மக்கள் குறித்த இடத்தில் மணல் அகழ்வதால் கடலேரி நீர் உள் நுழையும் என்று பிரதேச செய லகத்தினரிடம் சுட்டிக்காட்டினர். அந்தக் காணியில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதையடுத்து பிரதேச செயலகத்தின் அறிவிப்பின்படி புவிச் சரிதவியல் திணைக்கள அலுவலர்கள் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு குறித்த மணல் பாவனைக்கு உதவாது என்று அறிக்கையிட்டிருந்தனர்.

அதையடுத்து மணல் அகழ்வுக்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஜன. 29
பெண்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வும் இந்தியத் துணைத் தூதர் சு.தட் சணா மூர்த்தியின் பிரியாவிடை நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றன.

யாழ் வணிகர் கழகப் பணிமனையில் மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைநகர், கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று பிரதேச செயலகங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் சிற்றூண்டி விற்பனையாளர்கள் 45 பேருக்கான உதவித்தொகை வழங்கப்பட்டதுடன், வவுனியா வாழ்வாதாரச் சுயதொழில் அபிவிருத்திக்காக சிறு உதவித் திட்டமும் வழங்கப்பட்டது.

இதன்போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்தியத் துணைத் தூதர் சு.தட்சணா மூர்த்தி,

வடக்கு மாகாணத்துக்கான பெண்கள் தனித்து தொழில் செய்வதற்கான முயற்சிகளை அதிகப்படுத்தும் வகையில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்று வவுனியா, கிளிநொச்சியில் அமைக்கப்படுவதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும், முன்னதாகச் செய்யப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களுடன் வர்த்தக சங்கத்தினர் இந்திய வாழ் தொழில் முயற்சியாளர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு யாழில் இவர்கள் தொழில் தொடங்குவதற்காகவும் ஏற்பாடுகளை செய்யும் பட்சத்தில் இலங்கை-இந்தியா இடையிலான தொப்புள் கொடி உறவு மேலும் பலப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதர் சு.தட்சிணா மூர்த்திக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன். கௌரவிப்பு வைபவமும் வணிகர் கழகத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம், வணிகர் கழகப் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள், உதவித்திட்டத்துக்கு நிதி வழங்கிய வணிகர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-ரி5)

## கொழும்பு வைத்தியசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜன 29
கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வு கூட அதிகாரிகள், நேற்றுவியாழக் கிழமை காலை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மருத்துவ தொழிற்சங்க சம்மேளனத்தின் முன்னாள் செயலாளரான சமன் ஜயசேகரவிற்கு எதிராக நியாயமற்ற ரீதியில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டு, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படு கிறது.

இது குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தத்தவறினால் நாடளாவிய ரீதியில் பரந்தளவிலான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மருத்துவ தொழிற்சங்கச் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (து)

# பொலிஸ் அதிகாரிகளை கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஜன 29
எம்பிலிப்பிட்டியவில் இரவுநேர விருந்துபசார நிகழ்வொன்றின் போது, சுமித் பிரசன்ன மதுரங்க என்ற இளைஞன் உயிரிழந்தமைக்குக் காரணமாகவிருக்கும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட சந்தேக நபர்கள் அனைவரையும் உடனடியாகக் கைது செய்யுமாறு, எம்பிலிபிட்டிய மேலதிக நீதிவான் பிரசன்ன பெர்ணான்டோ, நேற்று முன் தினம் புதன்கிழமை, பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேற்படி இளைஞனின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன் தினம் இடம்பெற்ற போது, சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. சம்பவத்தின் போது உயிரிழந்த இளைஞனின் மனைவியும் இதன்போது சாட்சி யமளித்ததுடன், தனது கணவரின் கொலையில் இரத்தினபுரி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டீ.டபிள்யூ.சி.தர்மரத்ன மற்றும் எம்பிலிப்பிட்டிய தலைமை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரியாகவிருந்த பொலிஸ் பரிசோதகர் எஸ்.ஆர்.ஜே.டயஸ் ஆகியோரும் தொடர்புபட்டுள்ளனர் எனச் சாட்சியமளித்தார்.

இந்தநிலையிலேயே, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அனைவரையும் கைது செய்து, அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறுபொலிஸாருக்கு, நீதிவான் உத்தரவிட்டார். இதேவேளை, எம்பிலிப்பிட்டிய மோதல் விவகாரத்தின் போது பொலிஸ் அவசர அழைப்பான 119க்கு, பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஆகிய இருவரே, அழைப்புக்களை மேற்கொண்டு தகவல் வழங்கியுள்ளனர் எனதகவல் கிடைத்துள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (து)

# கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 29
துன்னாலை தக்குச்சம்பாடி பகுதியில் கசிப்புடன் நேற்று இருவர் ரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண் ஒருவரும், பெண் ஒருவருமே கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 3 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் இரண்டு பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் இன்று வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-107)




## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 29
மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பெருந்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்தத் திருவிழாவில் சொற்பொழிவு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. அதில் பண்டிதர் பொன். சுகந்தன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார். அத்துடன் தமிழகத்துப் பேச்சாளர்களும் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர். (ற)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஜன். 29
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் தைமாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை மு.ப 10.30 மணிக்கு அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வெளியீட்டுரையையும். புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்தவுள்ளனர். (ற-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அத்தியட்சகரிடம் விளக்கம் கோரும் நீதிமன்று

யாழ்ப்பாணம், ஜன. 29

கைது செய்யப்பட்ட சந்தேக நபரைப் பொலிஸ் பிணையில் விடுவித்தபோதும், பிணை முறிப் பத்திரம் இன்றிப் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்மை தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகரிடம் நீதிமன்று விளக்கம் கோரியுள்ளது.

பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார் இது தொடர்பான விளக்கத்தைக்கோரி காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகருக்கு கட்டளையிட்டுள்ளார்.

பொது இடத்தில் மதுபோதையில் அசிங்கமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார். அது தொடர்பில் பருத்தித்துறை நீதிமன்றில் நெல்லியடிப் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கில் வழக்குக்குரிய நபரையே பொலிஸார் பொலிஸ் பிணையில் விடுவித்திருந்தனர்.

சந்தேக நபர் பொது இடத்தில் குடிபோதையில் அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளதாகக் கூறி நெல்லியடி பொலிஸாரினால் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் சந்தேகம் வெளியிட்டுள்ள நீதிமன்று சந்தேக நபர் தப்பிக்க நெல்லியடி பொலிஸார் உடந்தையாக இருந்துள்ளனரா என மன்று தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன் விளக்கம் தருமாறு நீதிமன்று கோரியுள்ளது. (த-107)

# பாதையைக் கடந்தவர் பஸ் மோதியதால் சாவு

கொழும்பு, ஜன 29

தேநீர் குடிப்பதற்கென பஸ்ஸிலிருந்து இறங்கி பாதையைக் கடக்க முற்பட்டவரை எதிர்த்திசையில்வந்ததனியார்பஸ்ஸொன்று மோதியதில், குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

பிசோகொட்டுவ, தியசேன்புர பகுதியைச் சேர்ந்த 48 வயதானவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹபரணை – பொலனறுவை பிரதானவீதியின்மொரகஸ்வெள பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்த நபர், கொழும்பிலிருந்து மெதிரிகிரிய நோக்கி வந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச்சொந்தமானபஸ்ஸில் பயணித்துள்ளார். பஸ்ஸானது, தேநீர்க் கடையொன்றுக்கு எதிரில் தரித்து நின்ற வேளை, கடைக்குச் செல்லவதற்கென பாதையைக்கடக்கமுற்பட்டபோதே, இவ்விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இசைத்தமிழ் விழா இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 29

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் 2016 ஆம் ஆண்டுக்கான இசைத்தமிழ் விழாவும் முதுபொரும் கலைஞர்களுக்குத் தலைக்கோல் வழங்கும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்மாகி ஞாயிற்றுக்கிழமைவரை இடம் பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரை விஸ்வநாதன் அரங்கில் முதல் நாள் நிகழ்வுகள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் இடம்பெறும் . சிறப்பு நிகழ்வாக முதலில் இசைத்தமிழ் சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்படும். இதழுக்கான வெளியிட்டுரையை கொழும்புத் தமிழ் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் தெ.மதுசூதனன் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை இளைப்பாறிய வங்கி அதிகாரி செ.இராகவன் பெற்றுக் கொள்வார்.தொடர்ந்து இசைக்கலைமணி திருமதி ஹேமாவதி கபிலதாஸ் மற்றும் இசைநாவலன் செல்லத்துரை ஆகியோரின் இசை அரங்கம் இடம்பெறும்.

இரண்டாம் நாள் சனிக்கிழமை நிகழ்வுகள் காலை மாலை நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன. இதில் காலை நிகழ்வுகள் கலாநிதி மீரா வில்வராயர் அரங்கில் போரசிரியர் சபா ஜெயராசா தலைமயில் காலை 9 மணி தொடக்கம் 12.30 மணி வரை ஆய்வரங்கு இடம் பெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் சங்கீத பூசணம் திருமதி ஹம்சானந்தி தர்மபாலன் கர்நாடக இசை உருவாக்கத்தில் தமிழிசையின் பின்புலம் என்னும் தலைப்பிலும், கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவனத்தின் விரிவுரையாளர் திருமதி பிரியதர்சினி ஜதீஸ்வரன் நாட்டார் மரபில் தமிழிசை என்னும் தலைப்பிலும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி தமிழிசை மூவரின் இசை வளம் என்னும் தலைப்பிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் தவமைந்தன் தவநாதன் றொபேட் ஈழத்தின் தமிழிசை மரபு என்னும் தலைப்பிலும் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் உருத்திராபதி இராதாகிருஸ்ணன் அரங்கில் கொழும்புத் தமிழ் சங்கத்தின் தலைவர் மு.கதிர்காநாதன் தலைமையில் மாலை 5 மணி தொடக்கம் 8 மணி வரை இடம் பெறவுள்ளன. இதில் யாழ். பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட், யாழ். பல்கலைக்கழகத் தின் முன்னாள் விரிவுரையாளர் சங்கீத பூசணம் திருமதி ஹம்சானந்தி தர்மபாலன் ஆகியோரின் இசையரங்கம் இடம் பெறும். மூன்றாம்நாள் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசன் அரங்கில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மு.கதிர்காநாதன் தலைமயில் மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை இடம்பெறவுள்ளன.

முதல் நிகழ்வாக யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் திருமதி சுகனியா அரவிந்தன், சங்கீதவித்துவான் பொன். வாமதேவன் ஆகியோரின் இசையரங்கம் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து கலைஞார்கள் கௌரவிப்பு இடம் பெறும். இதில் தேனிசைவாரி வி.கே.சடராஜா, இசைநாவலன் செல்லத்துரை குமாரசாமி, நர்த்தன திலகம் திருமதி சாந்தினி சிவநேசன், லயஞான கலாகமணி க.ப.சின்னராசா ஆகியோர் தலைக்கோல் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். கௌரவிப்புரையினை கொழும்புத்தமிழ் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் மனோகரன் நிகழ்த்துவார்.

(த-23)






# தேசிய உடல் சுகாதார விருத்தி விழிப்புணர்வு மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஜன 29

தேசிய விளையாட்டு மற்றும் உடல் சுகாதார விருத்திக்கான வாரத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபவனியொன்று நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸாரும், சிவில் பாதுகாப்புக் குழுக்களும் இணைந்துகுறித்தவிழிப்புணர்வுநடைபவனியை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஏறாவூர் பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி சிந்தக பீரிஸ் தலைமையில், ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்த விழிப்புணர்வு நடைபவனி ஏறாவூர் நகரினூடாக செங்கலடி வரை சென்று திரும்பியது.

இதில் பொலிஸ் அதிகாரிகள், கிரம சேவகர்கள், சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பிரதிநிதிகள் பாடசாலை மாணவர்கள், போக்குவரத்துப் பொலிஸார் ஆகியோர் பங்குபற்றினர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகிய தேசிய விளையாட்டு மற்றும் உடல் சுகாதார விருத்திக்கான வாரம் நாளைய தினத்துடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 29

திருநெல்வேலி பாற்பண்ணை வீதி சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

இந்த உற்சவ காலங்களில் வெள்ளோட்ட விழாவின் மகத்துவம், மகோற்சவத்தில் தேர்த்திருவிழா எனும் விடயத்தில் தெய்வீக ஞானபேருரையாளர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் தெய்வீகப் பேருரையாற்றுவார். (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவை உதாரணமாக்கி சுதந்திரக் கட்சியை நடத்துக

## அமைச்சர் தயாசிறி ஆலோசனை

கொழும்பு, ஜன 29

ஐக்கிய தேசியக் கட்சியை உதாரணமாகக்கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படாதவாறு கட்சியை முன்னெடுத்துச் செல்ல அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அழைப்புவிடுத்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சில வருடங்களுக்கு முன்பு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் குழப்பகரமான சூழல் நிலவியது. இதனால் அக்கட்சி இரு வேறு அணிகளாகப் பிளவுபடும் நிலை உருவானது. எனினும், அது தடுக்கப்பட்டு கட்சி மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு கட்சியினர் இன்று ஆட்சி அதிகாரத்தில் பங்குதாரர்களாக உள்ளனர்.

இதனைஉதாரணமாகக்கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடுவதைத் தடுக்க அனைத்து உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டும். நான் ஐ.தே.கவில் இருக்கும்போதுரணில் அணி மற்றும்சஜித் அணியெனகட்சி இரண்டாகப் பிரிந்திருந்தது. இதன்போது ஒரு குழு சஜித் பிரேமதாசவை கட்சியின் தலைவராக்க முயற்சித்தது.அப்போதுகட்சிபெரும் நெருக்கடி நிலையிலேயே இருந்தது. பலர் கட்சியிலிருந்து விலகிச் சென்றதுடன், மேலும் பலர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலம் வெளியேற்றப்பட்டனர். அப்போது சிலர் புதிய கட்சியொன்றை அமைக்கத் திட்டமிட்டனர். ஆனால், அதற்குக் கட்சி உறுப்பினர்கள்பலர்எதிர்ப்புவெளியிட்டனர். எவ்வாறாயினும், கட்சி பிளவுபடுவது தடுக்கப்பட்டு கட்சி கட்டியெழுப்பப் பட்டது. விரும்பியோ விரும்பாமலோ ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது ரணிலும் சஜித்தும் ஒரே மேடையில் ஏறி கட்சியின்வெற்றிக்குக்காரணமாகினர். இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குசிறந்தஎடுத்துக்காட்டாகும். சு.கவுக்குள் சில முரண்பாடுகள் இருக்கலாம். அது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் கட்சிப் பிளவைத் தடுக்க முடியும். கட்சி பிளவடையுமாயின், அதன் மூலம் இரு தரப்புகளுக்கும் நன்மை கிடைக்கப்போவதில்லை. மூன்றாம் தரப்பான ஐக்கிய தேசியக் கட்சிக்கே அது நன்மை. நாம் இருக்கும்வரை ஒருபோதும் கட்சிப் பிளவுக்கு இடமளிக்கமாட்டோம்-என்றார். (த-சி)

## யோசிதவின் வெளிநாட்டு பயிற்சிச் செலவு 222 லட்சம்



கொழும்பு, ஜன 29

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசித ராஜபக்சவுக்கு 22.2 மில்லியன் ரூபா அரசசெலவில்வெளிநாட்டுபயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பயிற்சிகள் பிரிட்டன் மற்றும் உக்ரைன் போன்ற நாடுகளில் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

ஜே.வி.பி.யினர் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

யோசித ராஜபக்சவின் தந்தையும், இலங்கை ஜனநாயக சோசலிக் குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார். அதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியையும் அவர் பெற்றுள்ளார்.

பிரிட்டன் மற்றும் உக்ரைன் போன்ற நாடுகளுக்கு யோசித ராஜபக்ச அனுப்பி வைக்கப்பட்டு அங்கு அவருக்குப் பல்வேறான பயிற்சிகள் கற்கைகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

யோசித ராஜபக்ச, கடற்படையில் இணைந்து கொண்டதன் பின்னர் இவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர்களை கடற்படையில் இணைத்துக்கொள்ளஊக்கப்படுத்தும் நோக்கில் யோசித ராஜபக்ச கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டார். கடற்படையில் பெருமளவில் சேவையாற்றாத போதிலும், யோசிதவுக்கு அரசசெலவில் வெளிநாடுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

யோசித ராஜபக்சவின் நான்கு வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக 222 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது - என்றார். (த)

97வது மற்றும் 98வது
கிளைகள்
29-01-2016

பொரளை அதுருகிரிய கேகாலை நவம் மாவத்தை எல்பிட்டிய கல்முனை காலி மானிப்பாய் ஹோமாகம ஹெவ்லொக் டவுண் கடுவெல யாழ்ப்பாணம் கதுருவெல வவுனியா ஹெந்தல மாலபே

திருநெல்வேலி
மற்றும்
சாவகச்சேரி
வெற்றிப்பாதையை முன்னோக்கி

கொள்ளுப்பிட்டிய பிட்டகோட்டை கொச்சிகடை ஜா-எல கல்கிஸ்ஸை மஹியங்கனை மாத்தறை வத்தளை செங்கலடி நெல்லியடி பழைய சோனகத் தெரு மட்டக்களப்பு மதுகம நாராஹென்பிட்ட மாத்தளை

எமது புதிய கிளைக்கு விஜயம் செய்து சிறந்த வங்கிச் சேவைகளை அனுபவித்திடுங்கள்
• நடைமுறைக் கணக்குகள் • சேமிப்புக் கணக்குகள் • நிலையான வைப்புக் கணக்குகள் • வீட்டுக் கடன்
• தனிநபர் கடன் • வாகனக் குத்தகை வசதிகள் • வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றல் சேவை
• சிறிய நடுத்தரளவு வியாபாரத்திற்கான கடன் வசதி - நீண்ட கால கடன் வசதி (குறைந்த வட்டிக்கு), குறுகிய கால கடன் வசதி உட்பட்ட பல்வேறு வங்கி மற்றும் நிதிச் சேவைகள்

இல. M102, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: முகாமையாளர் (நேரடி) - 021 221 6440, பொது - 021 221 6441 / 021 221 6442 | தொலைநகல்: 021 221 6443

இல. 1,3,5, கண்டி வீதி, சாவகச்சேரி.
தொ.பே: முகாமையாளர் (நேரடி) - 021 227 1360, பொது - 021 227 1361 / 021 227 1362 | தொலைநகல்: 021 227 1363

கொடுக்கல் வாங்கல் செய்யும் நேரம்:
அலுவலக தினங்களில் - திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 - மாலை 4 மணி வரை

011 2448888
NDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணச் சடங்கில் மோதல்; ஏழு பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜன.29
ஹற்றன் நகரில் திருமண மண்டபம் ஒன்றில் திருமணச் சடங்கில் கலந்து கொண்ட இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 7 பேர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:- மஸ்கெலியா மற்றும் தலவாக்கலை வட்டகொடை பிரதேசத்தை சேர்ந்த இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் சண்டையில்முடிந்தது. இது தொடர்பாக ஹற்றன் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சம்பவத்தை அறிந்து நேரில் சென்று சந்தேகத்தின் பேரில் 7 பேரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்திப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளார். நேற்றுக் காலை ஹற்றன் நீதிமன்றத்தில் இவர்களை முன்னிலைப்படுத்தியபோது நீதிவான் கடும் எச்சரிக்கை செய்து விடுவித்தார். (த)



# ஞானசாரரின் வழக்கிலிருந்து விலகியுள்ளார் நீதிவான் ரங்க

## *பிணை மனுவும் நிராகரிப்பு*

கொழும்பு, ஜன.29
பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் வழக்கை விசாரிக்க விரும்பவில்லையென்றும், பெரும்பாலும் வேறு ஒரு நீதிபதியே அடுத்த தவணை வழக்கை விசாரிப்பார் என்றும் ஹோமாகம நீதிவான் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
இது குறித்து சட்டமா அதிபரிடம் தாம் விளக்கம் கோரியுள்ளதாகவும் நீதிவான் தெரிவித்தார்.
ஞானசார தேரரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி நேற்று வியாழக்கிழமை சட்டத்தரணி சுமுது காந்த ஹேவாகேவால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இதனை நிராகரித்த நீதிபதி, தாம் தொடர்ந்தும் இந்த வழக்கை விசாரிக்க விரும்பவில்லையென தெரிவித்தார்.

> ஞானசார தேரரின் கைதை அடுத்து, பௌத்த பிக்குகள் ஒழுக்க விதிகளை மீறி நடந்து கொண்ட விதம் குறித்துப் பல தரப்பினர் விமர்சனம் வெளியிட்டு வருகின்றனர்.

ஞானசாரர் விடயத்தில் தாம் வழங்கிய தீர்ப்பில் உறுதியாக உள்ளதாக தெரிவித்த நீதிவான், தனது தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டினாலும் தீர்ப்பை மாற்றப்போவதில்லையெனத் தெரிவித்தார். இதற்கு ஆட்சேபனை இருந்தால், தமது மேலதிகாரிகளிடம் முறையிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.
ஞானசார தேரரின் கைதை அடுத்து, பௌத்த பிக்குகள் ஒழுக்கவிதிகளைமீறிநடந்து கொண்ட விதம் குறித்துப் பல தரப்பினர் விமர்சனம் வெளியிட்டு வருகின்றனர்.
ஞானசார தேரர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நீதிமன்ற வளாகத்தில் முறைதவறி நடந்துகொண்டவர்களைக் கைது செய்யுமாறு நேற்று முன்தினம் ஹோமாகம நீதிவான் உத்தரவிட்டமைக் கமைய, நேற்று மூவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# வலி. தென்மேற்கில் உள்ள வாய்க்கால்கள் புனரமைப்பு

மானிப்பாய், ஜன. 29
இடர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் கீழ் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குளங்களுடன் இணைப்பைக் கொண்ட வாய்க்கால்கள் புனரமைக்கப்படவுள்ளன. குறித்த விடயம் தொடர்பில் வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி யு.யசோதா விவசாய தரப்பு அதிகாரிகளுடனும், சம்மேளன உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியுள்ளார். முதற்கட்டமாக கொத்தலாவ வாய்க்கால், கிராய் வாய்க்கால், முதலியார் குளம் வாய்க்கால் என்பன புனரமைக்கப்படவுள்ளன.
அதேவேளை மாதகல் மேற்கில் செய்கை செய்யப்படாத நிலையில் உள்ள தரவைகள் சீர்ப்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவை குறித்த விவரங்களை பிரதேச செயலர் சண்டிலிப்பாய் அலுவலர் சேவை நிலைய பெரும்பாக அலுவல

ஜனவரி மாதம் 29ஆம், 30ஆம் திகதிகளில் Jaffna Municipal Ground இல் இடம்பெறவிருக்கும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் எம்மை காண வருகை தருமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.
STALL NUMBERS: 65, 66
உங்கள் அனைத்து இயந்திர செயலாக்க மற்றும் பொதியிடல் தேவைகளுக்கு....
For Your All Machinery Needs

CMC Engineering Export GmbH
No. 08, Rodrigo Mawatha, Nawala Road, Rajagiriya
Tel : 011 2 806776 – 9 / Fax : 011 2806780
E-mail: ranga@cmc.slt.lk

# வீட்டு நிர்வாகப் பெண்களுக்கு பயிற்சியின் காலம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 29
மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிபுரியச் செல்லும் வீட்டு நிர்வாகப் பெண்களுக்கு வழங்கப்படும் 21 நாள்களுக்கான பயிற்சி 40 நாள்கள் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சிறிலங்கா வெளிநாட்டுச் சேவைகள் செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.
முதற்தடவையாக வீட்டு நிர் வாகம் அல்லது வீட்டுப் பணிப் பெண் பணிக்கு வெளிநாடு செல்லும் பெண்மணிகள் இந்தப் பயிற்சியைக் கட்டாயமாகப் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதற்கு மேலதிகமாகத் தேசிய தொழில்சார் நிபுணத்துவச் சான்றிதழையும் (என்.வீ.கியூ) பெற வேண்டும் என்றும் செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.
மத்திய கிழக்கு நாடுகளில் சேவையாற்றச் செல்லும் வீட்டுப் பணிப் பெண்கள் கொண்டிருக்க வேண்டியுள்ள பயிற்சி மற்றும் திறமைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்டுள்ள விரிவான ஆய்வின் பின்னரே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த 21 நாள்கள் பயிற்சியில் எதிர்பார்த்த இலக்கை அடைந்துள்ள போதும், அதன் தரத்தை மேம்படுத்தும் முகமாக இந்தப்பயிற்சி நாள்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியின் போது, தொழில்சார் நிபுணத்துவம், திறனாற்றல்களை மேம்படுத்தி விடுதல், தொலைத் தொடர்புஆற்றல், சேவையாற்றும் இடத்தில் ஏற்படும் சவால்களுக்கு முகம்கொடுத்தல் உள்ளிட்ட நிதி முகாமைத்துவம் என்பன பயிற்றப்படுகின்றன. (ற-22)

# வாகனங்கள் ஒப்படைக்காத ஓய்வுபெற்றஇரு நீதியரசர்கள்

கொழும்பு, ஜன.29
தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனங்கள் இரண்டை அண்மையில் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் இருவர், மீண்டும் கையளிக்கவில்லை என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.
நீதியரசர்களின் கடமைகளுக்காக வழங்கப்படும் வாகனங்களை, அவர்கள் ஓய்வுபெறும் போது, மீளவும் கையளிக்க வேண்டியது சாதாரண சம்பிரதாயமாகும்.
எனினும், அண்மையில் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் இருவரும், தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களையும் மீளவும் கையளிக்கவில்லை என்று அறியமுடிகின்றது.
வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காகதங்களுக்குவழங்க வேண்டிய அனுமதிப்பத்திரத்தை வழங்கினால் மட்டுமே, இவ்விரு வாகனங்களையும் தாங்கள், அந்த நிறுவனத்துக்கு மீளவும் கையளிப்போம் என்று ஓய்வு பெற்ற நீதியரசர்கள் இருவரும் தெரிவித்ததாக அறியமுடிகின்றது. (த)

# சில பிக்குகள் நடந்த விதம் பௌத்த தர்மத்துக்கு முரண்

## *மாரசிங்க எம்.பி. கண்டனம்*

கொழும்பு, ஜன.29
ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் சில பிக்குகள் நடந்துகொண்ட விதமானது, பௌத்த தர்மம், ஒழுக்கத்துக்கு முரணாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஏ.மார சிங்க தெரிவித்தார்.
நாடாளு மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிதி அமைச்சின் சுங்கக் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு:-
இனவாதம், மதவாதம், குலபேதம் என்பன மிருகக்குணங்களாகும். இவை மனிதரிடம் இருக்கலாகாது. ஆனால், சிலரிடம் இவை ஒட்டிக்கொண்டுள்ளன. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மிருகக்குணங்களைக் கையிலெடுக்கின்றனர். பௌத்த தர்மத்தில் ஒழுக்கத்துக்குத்தான் முதலிடம். ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுமாறே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
இந்தநிலையில், ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சம்பவமானது, கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அங்கு ஒழுக்கம் மீறப்பட்டுள்ளது. நீதி மன்றத்துக்குள் நுழைவதற்கு முற்பட்டுள்ளனர்.
தாய்க்குலத்தை மதிக்கவேண்டும். ஆனால், தாயொருவரும் நீதிமன்ற வளாகத்தில் வைத்து தூற்றப்பட்டுள்ளார். எனவே, இனிவரும் நாள்களில் ஒழுக்கம் பேணப் படவேண்டும். பிக்குகளுக்கான ஒழுக்கக் கோவை சட்டமூலத்தில் இவை உறுதிப்படுத்தப்படவேண்டும்–என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுபாய் வங்கிக் கணக்கு குறித்து அரசின் நடவடிக்கைகள் என்ன?

## ஜே.வி.பியின் தலைவர் கேள்வி



கொழும்பு, ஜன 29
டுபாய் வங்கியிலுள்ள 3 பில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் எம்.பி. ஒருவரால் கூறப்பட்ட 42 ஆயிரம் கோடி ரூபா பண மோசடிகள் குறித்தும், அதனுடன் தொடர் புடைய குற்றவாளிகள் குறித்தும் அரசு எடுக்கும் சட்ட நடவடிக்கை என்ன என எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க நேற்று முன்தினம் சபையில் கேள்வி எழுப்பினார்.

குறிப்பிட்ட வங்கிக் கணக்கு தொடர்பாக முறைப்பாடு செய்யப் படவில்லையாயின், விசாரணை நடைபெறவில்லையாயின், அது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிவிப்பு குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன என்றும் கேள்வி எழுப்பிய அவர், இந்தக் கேள்விக்குப் பதில் வழங்குவதைத் தாமதப்படுத் தாமல் அமைச்சரவைப் பேச்சாளருக்கு ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவதனூடாக பதில் வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை 23/2ஆம் இலக்கநிலையியற்கட்டளையின் கீழ் விடுத்த விசேட அறிவிப் பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் குறிப்பிடுகையில்,

உயர் அரசியல் குடும்பத்தின் அங்கத்தவர் மற்றும் அந் தக் குடும்பத்துடன் தொடர் புடைய இருவர் டுபாய் தனியார் வங்கியில் வைத்திருக்கும் 3 வங்கிக் கணக் குகளில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பணம் இருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக கடந்த 14ஆம் திகதி இடம் பெற்ற அமைச்சர வைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் கூறினார். இதில் மொத்தமாக 3 பில்லியன் டொலர் பணம் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, முன்னாள் ஆட்சியாளர்களால் வெளிநாட்டு வங்கியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 42 ஆயிரத்து 656 கோடி ரூபாவைத் தான் கண்டதாக ஆளுந்தரப்பு எம்.பி. ஒருவரும் கூறி யிருந்தார். அப்படியானால் இந்தக் கணக்குகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும் அரசிடம் உள்ளன.

இருப்பினும், ஒருவருடத்துக்கு அதிக காலம் சென்றுள்ள போதும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த விடயத்தில் மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த விடயம் தொடர் பாக அரசு சட்ட நடவடிக்கை எடுக்காமல் தம்மை ஏமாற்றுவதற்காகச் செயற்படுகின்றது என மக்கள் மத்தியில் கருத்துக் கூறப்படுகிறது.

இவ்வாறான நிலையில் கீழ்வரும் கேள்விகள் தொடர்பாக பிரதமர் இந்தச் சபைக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

குறித்த வங்கிக் கணக்குகள் தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளர் மற்றும் எம்.பியால் குறித்த நிறுவனத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதா? வேறு எவராவது அல்லது இந்தக் கணக்குகள் தொடர்பாக அல்லது கண்ணால் பார்த்த பணம் தொடர்பாக முறைப்பாடு செய்யப் பட்டுள்ளதா?

இந்த முறைப்பாடுகள் எந்தச் சட்ட நிறுவனத்திடம் செய்யப் பட்டது?

அதற்கமைய விசாரணைகள் முன்னெடுக் கப்படுமாயின், அது எந்த நிறுவனத்தால் நடத்தப் படுகிறது? அந்தக்கணக்குகளின் உரிமையாளர்கள் யாவர்? அதிலுள்ள பணம் எவ்வளவு? அந்தக் கணக்குகள் தொடர்பான விசாரணையின் முன்னேற்றம் என்ன? சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான கால எல்லை என்ன?

குறிப்பிட்டுக் கூறப்பட்ட இந்தக் கணக்கு தொடர்பாக முறைப் பாடொன்று இல்லாவிட்டால் அல்லது விசாரணை யொன்று இடம்பெறாவிட்டால் அவ்வாறானதொரு பொய்யான அறிவிப்புத் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை என்ன? அமைச்சரவைப் பேச்சாளர் என்ற அடிப்படையில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் வெளியிட்ட கருத்துக் குறித்து அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன?

இதுவரையில் ஊழல் மற்றும் மோசடி தொடர்பாக விசாரணை செய்துமுடிக் கப் பட்ட ஆவணங்கள் சட்டமா அதிபரிடம் கையளிக் கப்பட்டுள்ளனவா? அனுமதி பெறப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்படாத ஆவணங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு? ஊழல், மோசடி தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் அழுத்தங்கள் இன்றி இடம்பெறவேண்டும் என்பதையும், தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண் டும் என்பதையும், மோசடி செய்யப்பட்ட மக்களின் பணத்தை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றாரா? இந்தக் கேள்விகளுக்கான பதிலை பிரதமர் இந்தச் சபையில் அறி விக்க வேண்டும். இதற்குப் பதிலளிக்க காலஅவகாசம் எடுக்கத் தேவையில்லை. ஒரு தொலைபேசி அழைப்பினூடாக அமைச்சரவைப் பேச்சாளரிடம் இது பற்றிக் கேட்கலாம்– என்றார். (த-சி)

## சட்டத்தை உரியவாறு பேண பொலிஸாருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன 29
இவ் வருட முற்பகுதியில் புதிதாக இடமாற்றம் பெற்று வந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நேற்றுத் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட 8 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்ற வந்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கே இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.றஞ்சித் மாரசிங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், மற்றும் புதிதாக இட மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கு உள்ளதால் எந்தவித இலஞ்சங்களுக்கும் உட்படாமல் கடமையாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவும் ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் கிராமங்கள் பற்றி அறிந்து கொள்ளுங்கள். பொதுமக்களுடன் நட்பாகப் பழகவேண்டும். பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் நீங்கள் கிராமங்களுக்குள் சென்று கடமையினை மேற்கொள்ள முடியாது என அவர் அறிவுரை வழங்கினார். (த-107)



சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதான வீதியில் கட்டாக்காலி மாடொன்று, வீதியின் நடுவில் திடீரெனப் பாய்ந்ததால் கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிறிய ரக லொறியொன்று, நேற்று வியாழக்கிழமை காலை கட்டுப்பாட்டை இழந்து வயல் வெளிக்குள் குடைசாய்ந்தது. இந்த விபத்தில் லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் சிறுகாயங்களுக்குள்ளாகினர். (த)

## சமுதாய அடிப்படை வங்கி கிளிநொச்சியில் திறப்புவிழா

நீண்டகால, குறுங்கால பாடநெறிகளை வடக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு கிளிநொச்சியில் கற்கை நிலையமும் சமுதாய அடிப்படை வங்கியும் நாளை சனிக்கிழமை திறக்கப்படவுள்ளது.

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்பு அமைச்சரின் ஊடகச் செயலாளர் ஹிரான் சமரமாது இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு கிளிநொச்சி பழைய மாவட்ட செயலக வளாகத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பி.ப. 2.30 மணிக்கு பூநகரியில் திவிநெகும சமுதாய அடிப்படை வங்கியும், பி.ப. 3.30 மணிக்கு ஜெயபுரம் திவிநெகும சமுதாய அடிப்படை வங்கி கட்டடத்திறப்பு விழாவும் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வெளிநாடு செல்ல முயன்ற தமிழ் இளைஞர் கைதானார்

கொழும்பு, ஜன. 29
சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றத் தடுப்பு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாகவே அவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

31 வயதான பருத்தித்துறையைச் சேர்ந்த குறித்த நபர் சட்டவிரோதமாக ஜேர்மன் நாட்டை நோக்கிச் செல்ல முற்பட்ட வேளையிலேயே கைது செய்யப் பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் அவர், நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மாதங்களுக்குள் 25 போர்க் கப்பல்கள்

## இலங்கைக்கு வந்துள்ளன

கொழும்பு, ஜன 29

கடந்த ஆறு மாதங்களுக்குள் இலங்கைக்கு 25 போர்க்கப்பல்கள் வருகைதந்துள்ளன என்றும், எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் மேலும் 6 போர்க் கப்பல்கள் வரவுள்ளன என்றும் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவி விஜேகுணவர்தன தெரிவித்தார்.

இந்தக் கப்பல்களின் வருகை அனைத்தும் சமாதான நட்புறவுப் பயணங்களாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்போர்க்கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்கு வருவதற்கு முன்னர் அனைத்துத் தகவல்களும் வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்படுகின்றன. நாங்கள் அனுமதி வழங்கிய பின்னரே அக்கப்பல்கள் உள் நுழைய அனுமதிக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையில் தற்போதுள்ள சமாதான சூழல் காரணமாக பல்வேறு நாடுகளினதும் போர்க் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்துக்கு வருகின்றன. கடந்த ஆறு மாதங்களுக்குள் 9 நாடுகளைச் சேர்ந்த 25 போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன. அதில் ரஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், ஓமான், இந்தியா, பாகிஸ்தான், சீனா, தென் கொரியா நாடுகளைச் சேர்ந்தவையே அவை.

சோமாலியக் கடற்கொள்ளையர்களுக்கு எதிராக ஜப்பான் இரண்டு போர்க்கப்பல்களை கடமையில் ஈடுபடுத்தியுள்ளது. இக்கப்பல்கள் இலங்கைக்கு அடிக்கடி வந்துள்ளன. 2009, 2016 காலப்பகுதியில் 59 தடவைகள் அவை இங்கு வந்து சென்றுள்ளன-என்றார். (த-சி)

# இலங்கை முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்படின் அது மிகப்பெரும் தவறு

## அரசை எச்சரிக்கிறார் துருக்கித் தூதுவர்

கொழும்பு, ஜன 29



ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துடன் இணைந்துள்ளதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த சில தனிப்பட்டவர்களின் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் காரணம்காட்டி இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் இலக்குவைக்கப்படுமானால் அது மிகப் பெரிய தவறாகிவிடும் என இலங்கைக்கான துருக்கி நாட்டுத்தூதுவர் டுன்ஜயா ஒககதார் இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நான்கு இலட்சத்து எழுபத்தியோராயிரத்திற்கு மேற்பட்ட படைப்பலத்துடன் உலகின் 10ஆவது மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்டுள்ளதும் உலகின் 17ஆவது மிகப் பெரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ளதுமான துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

36 இலங்கையர்கள் சிரியாவுக்கு சென்றுள்ளதாகவும் அவர்களில் சிலர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்துள்ளதாகவும் இம்மாத முற்பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியிருந்தார். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைக் காரணம் காண்பித்து இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான சந்தேகங்கள் பொதுபலசேனா போன்ற கடும்போக்கு அமைப்புகளால் கிளப்பப்படுவதுடன், முஸ்லிம்கள் தொடர்பாக தீவிர நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்ற கோஷங்கள் நாளுக்குநாள் முன்வைக்கப்படுவதைக் காணமுடிகின்றது. இந்த நிலைமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள் என வினவியபோதே துருக்கி நாட்டுத் தூதுவர் இந்தக் கருத்துகளை வெளியிட்டார்.

இந்தக் கேள்விக்கு அவர் வழங்கிய முழுமையான பதில் வருமாறு:-

36 பேர் தொடர்பான விவரங்களை நான் அறிந்திருக்கவில்லை. அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்தார்களா, இல்லையா என்பது குறித்தும் எனக்குத் தெரியாது. ஆனால், தனிப்பட்டவர்கள் சிலரின் சில சட்டவிரோத நடவடிக்கைகளைக் காரணம் காண்பித்து இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் இலக்குவைக்கப்படுமானால் அது மிகப் பெரிய தவறாகிவிடும். இந்த நாட்டின் அத்தியாவசியமான பிரிக்கமுடியாத பாகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்து வருகின்றது. அவர்களது மதம் இஸ்லாமாக இருக்கின்றபோதும் இலங்கையர் என்ற உணர்வில் அவர்கள் நூற்றாண்டு காலமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மதத்தை முன்னிறுத்தியோ இனத்தை முன்னிறுத்தியோ அவர்கள் தம்மை வேறுபடுத்தவில்லை. மாறாக, இலங்கையின் ஒன்றிணைந்த அங்கமாகவே அவர்கள் தம்மை நோக்குகின்றனர். அது மிகவும் சிறந்த விடயமாகும். அவர்கள் ஏனைய மதத்தினருடன் இணைந்தே,பல்மத ,பல்கலாசாரம் கொண்ட இந்த நாட்டில் வாழ விரும்புகின்றனர். அதுவே இலங்கைக்கு அழகானது.சில தனிப்பட்டவர்களின் சில தவறான நடவடிக்கைகளைக் காரணமாகக் கொண்டு முஸ்லிம் சமூகம் இலக்குவைக்கப்படவோ அன்றேல் அழிக்கப்படவோ கூடாது- என்று கூறினார். (த-சி)

# மகிந்தவின் தலைமையில் கூட்டணி வெகுவிரைவில்

## சொல்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜன 29

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்றுகட்டாயம்உருவாகும் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த ஆதரவு அணியின்நாடாளுமன்ற உறுப்பினருமானவிமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் பொருளாதார வீழ்ச்சி, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், காட்டிக்கொடுப்பு என்று அரசு வினைத்திறனற்ற நிலையில் செயற்படுகின்றது. அரசுக்கு எதிராக பெரும் மக்கள் சக்தியொன்று திரண்டுள்ளது. எனவே, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றக் கூடிய புதிய கட்சி அவசியமாகும். அது விரைவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் உதயமாகும்" என்றார். (த-சி)

### மீன் தாக்கி மீனவர் காயம்

சாவகச்சேரி ஜன.29

கடல் மீன் தாக்கித் தொழிலாளி காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் பூநகரி கடலில் இடம்பெற்றது.

கடலில் இறங்கி மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளையில் திடீரென மீன் தாக்கிவிட்டுச் சென்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்காகிக் காயத்துடனும் வேதனையுடனும் தொழிலாளி சாவகச்சேரி வைத்தியசாலைக்குக்கொண்டு வரப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளார்.

பூநகரி செம்மண்குண்டைச் சேர்ந்த கடற்றொழிலாளியே மீனால் தாக்கப்பட்டவராவார். (த-9)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரிட்டன் கிளையினர் லண்டனுக்குச் சென்றுள்ள எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரை நேற்று முன் தினம் சந்தித்துப் பேசினர். (த)

### சைக்கிளில் சென்றவரை மோதியவருக்கு அபராதம்

சாவகச்சேரி ஜன.29

ஆபத்தை விளைவிக்கக்கூடிய வகையில் வாகனத்தைச் செலுத்தி சைக்கிளில் சென்ற நபரை மோதிக் காயப்படுத்திய டிமோ பட்டா சாரதிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் பாதிக்கப் பட்டவருக்கு 70 ஆயிரம் ரூபா நட்டஈடாக வழங்கு மாறும் உத்தரவிடப்பட்டது.

கடந்த ஜுலை 5 ஆம் திகதி கைதடி-கோப்பாய் வீதியில் சைக்கிளில் வந்தவரை மோதிக் காயப்படுத்திய டிமோ பட்டா வாகனச் சாரதிக்கு எதிராகச் சாவகச்சேரி பொலிஸார் வழக்குத் தாக் கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஆபத்தான முறை யில் வாகனத்தைச் செலுத்தியமை மற்றும் விபத்தைத் தடுக்க முயற்சிக்காமை ஆகிய குற்றங்களுக்காக தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் விபத்தின் போது பாதிக்கப்பட்ட நபருக்கு நட்டஈடாக 70 ஆயிரம் ரூபா வழங்குமாறும் உத்தரவிடப்பட்டது. (த-9)

# டுபாய் வங்கிக் கணக்குப் பதில்: கால அவகாசம் கோரியது அரசு

கொழும்பு, ஜன 29

டுபாய் வங்கியிலுள்ள 3 பில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் இன்னுமொரு வெளிநாட்டு வங்கியிலுள்ள 42 ஆயிரம் கோடி ரூபா நிதி மோசடி பற்றிய தகவலை வெளியிட நேற்று முன் தினம் சபையில் காலஅவகாசம் கோரினார் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்பிலேயே அமைச்சர் கிரியெல்ல இவ்வாறு கால அவகாசம் கோரினார்.

மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு வங்கிக் கணக்குகள் தொடர்பில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் கேள்வி எழுப்பினார். அத்துடன், இது தொடர்பாக பிரதமர் காலந்தாழ்த்தாது உடனடியாக பதிலளிக்க வேண்டும் என்றும் கோரினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் இல்லாத காரணத்தால் அவர் சார்பில் கருத்து வெளியிட்ட சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல,

இவர் கோரியுள்ள விடயம் மிகவும் சிக்கலான விடயமாகும். அதிக தகவல்களைச் சேகரிக்க வேண்டியுள்ளது. எனவே, இந்தக் கேள்விக்குப் பதில் வழங்க பிரதமர் சார்பில் நான் கால அவகாசம் கோருகின்றேன் என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொம்மைகளை வைத்திருந்தால் தாய்லாந்து மக்களுக்கு அதிர்ஷ்டம்



பாங்கொக், ஜன.29
தாய்லாந்தில் கடந்த இரண்டு வருடங்களாக நிலவும் அரசியல் குழப்பங்களும் – நிலையற்ற தன்மையும், பொருளாதார தடுமாற்றங்களும் மக்களின் மனதில் கவலையை தோற்றுவித்துள்ளன. இந்த நிலையில் பொம்மைகள் தமக்கு அதிர்ஸ்டத்தைத் தரும் என்ற நம்பிக்கை தாய்லாந்தில் பரவலாகக் காணப்படுகின்றது. தாய்லாந்தில் சில தசாப்த காலமாக புத்த மதத்தினரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் அதிகமான மூடநம்பிக்கையுள்ள மக்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர்..சூனியம், மாந்திரீகம் என்பவற்றில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

உண்மையான குழந்தையின் அளவில் இருக்கும் பிளாஸ்ரிக் பொம்மைகளை குழந்தைத் தேவதை என அழைக்கின்றனர். கடைகளில் இந்தப் பொம்மைகளைக் கொள்வனவு செய்து அவற்றினுள் ஆன்மாவை குடி கொள்ளச் செய்வதன் மூலம் சகல சுபீட்சங்களும், அதிர்ஷ்டங்களும் கிட்டும் என நம்பப்படுகிறது. பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளதால், ஒவ்வொரு வரும் ஒரு பொம்மையை வைத்திருப்பதாக, பொம்மை விற்பனையாளர் ஒருவர் தெரிவித்தார். இந்த நிலையில், உள சுகாதாரத்துறைத் துணை இயக்குநர், பொருளாதார வீழ்ச்சி மேலும் தீவிரமடையும் எனத் தெரிவித்துள்ளார். மேலும் பொருளாதார வீழ்ச்சிகளால் ஏற்படும் மன உளைச்சல், இவ்வாறான மூடநம்பிக்கைகளை பரப்புவதற்குச் சாதகமான காரணியாகியுள்ளது. இவற்றை நம்பும் மக்கள் மனநோயாளிகள் அல்லர் எனவும் அவர் தெரிவித்தார்.

பொம்மைகளின் பார்வை தமது பக்கம் திரும்பவேண்டும் என்பதே பக்தர்களின் ஆவல் ஆகும். இந்த நிலையில் தாய்வானின் பிரதமர் பிரயுத் சான் –ஓசா, பொம்மைகளைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்ட வேண்டாம். பொம்மைகளால் எதுவும் செய்ய முடியாது. நான் இவ்வாறான பொம்மைகளைக் கொண்டிருக்கமாட்டேன் எனத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பொம்மையும் 40 – 50 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்படுகிறது. சில வர்த்தகங்கள், மூட நம்பிக்கையைத் தூண்டுவதன் மூலம் வெற்றிகரமாக நடமுறைப்படுத்தப்படுகிறன. இந்த நிலையில் விமான சேவை நிறுவனங்கள், பொம்மைகளுக்கு விமான ரிக்கெட்டுகள் வழங்குவதைத் தடை செய்துள்ளன. இதனைக் காரணம் காட்டி போதைப் பொருளைக் கடத்தும் முயற்சியில் ஈடுபடலாம் என்பதற்காக விமான சேவைகள் நிறுவனம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது . (த–ரி4)

## துப்புரவுத் தொழிலாளர்கள் டில்லியில் வேலை நிறுத்தம்

### நகரில் தேங்கியுள்ளன குப்பைகள்

புது டில்லி, ஜன.29
இந்தியத் தலைநகர் புதுடில்லியில் துப்புரவுத் தொழிலாளர்கள் மூன்று நாள் திடீர் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ளனர். இதனால் நகரின் பல பகுதிகளில் குப்பைகள், கழிவுகள் தேங்கியதுடன், துர்நாற்றமும் வீசுகின்றது.
நேற்று முன்தினம் 130 ஆயிரம் துப்புரவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசியல் பிரச்சினைகளால் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படாததை கண்டித்து இந்த திடீர் வேலை நிறுத்தம் இடம்பெற்றுள்ளது. சாலையோரம் குவிந்துள்ள குப்பையினால் துர்நாற்றத்துடன், நோய்த்தொற்றகளும் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.
இந்த வேலைநிறுத்தம் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்களை பாதித்துள்ளது. தினமும் வைத்தியசாலையில் இருந்து 10 ஆயிரம் தொன் கழிவுகள் அகற்றப்பட்டு வந்த நிலையில், இந்த வேலை நிறுத்தம் வைத்தியசாலை சூழலையும் ஸ்தம்பிக்கச் செய்துள்ளது. மேலும் 72 உடல்கள் தகனம் செய்ய முடியாமல் பணியாளருக்காகப் பரிதவித்துள்ளனர்.
முதலமைச்சர் அர்விந் கெஜ்ரிவாலே சம்பளப்பிரச்சனைக்கு பொறுப்பாளர் ஆவார். அவருக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கும் வகையில் இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் ஜந்தர் மந்தரில் அமைந்துள்ள முதலமைச்சரின் வீட்டின் முன்பு, அவரது கொடும்பாவி எரித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
புது டில்லி அரசு தொழிலாளர்களுக்கான சம்பளத்திற்கான நிதி பிரச்சனைக்குத் தெளிவு காண முயன்றுள்ளது. (த–ரி4)




இஸ்ரேலுக்கு உரிய கருடப் பறவை ஒன்று லெபனானில் காணப்பட்டதை அடுத்து, அது உளவு பார்க்க அனுப்பப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. குறித்த பறவை லெபனான் நகரான பின்ட் ஜிப்பில் பறந்துள்ளது. இந்த பகுதி இஸ்ரேலில் இருந்து தொலைவில் உள்ள நகரமாகும். பி 98 என்ற எ்ழுத்துகளுடன், டிரான்ஸ் மீற்றர், உலோக வளையங்கள் என்பன இதில் பொருத்தப்பட்டுள்ளன. ஆனாலும் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையில் சிறந்த உறவு நிலவுவது குறிப்பிடத்தக்கது. (த–ரி4)

## ஆண்கள் இரண்டு பெண்களை திருமணம் செய்யாவிடின் சிறை

### *எரித்திரிய அரசு அறிவிப்பு*

எரித்திரியா நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆண்களும் குறைந்தபட்சம் இரண்டு பெண்களைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றும், அவ்வாறில்லாவிட்டால் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.
அந்த நாட்டில் பெண்கள் தொகை அதிகமாகவும், ஆண்கள் தொகை குறைவாகவும் காணப்படுவதே இதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எரித்திரியா நாட்டிலுள்ள மொத்த சனத்தொகை 4 மில்லியன்களாகும். 1998-2000ஆம் ஆண்டுவரையான காலத்தில் இடம்பெற்ற போரில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டதனால் அந்த நாட்டு ஆண்களின் தொகை குறைவடைந்துள்ளது. இதன் காரணமாகவே அந்நாட்டு அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
இவ்வாறு ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்துகொள்வதற்குத் தேவையான பண உதவிகளையும், வீட்டு வசதிகளையும் அந்த நாட்டு அரசு வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## இந்த வருடத்தின் அழகான குழந்தை

வொஷிங்டன், ஜன.29
குழந்தைகளுக்கான உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனமான கிர்பர், வருடாவருடம் சிறந்த அழகான குழந்தையைத் தேர்ந்தெடுக் கும் போட்டியை நடத்திவரு கிறது. இந்த வருடம் கிர்பர் பேபி பட்டத்தை ஜலா எனும் குழந்தை வென்றுள்ளது. அழகான



தோற்றத்துடன், மனம் கவரும் புன்னகையுடன் ஒளிப் படத்தில் தோற்றமளித் தார். 7 மாதங்கள் நிரம்பிய ஜலாவின் படமும் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.
அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த இந்தக் குழந்தை பெற்றோருடன் வசித்து வருகிறார். 170 ஆயிரம் போட்டியாளர்களில் ஜலாவின் படம் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் போட்டியின் பரிசுத் தொகையாக 50 ஆயிரம் டொலர்கள் வழங்குவதாக கிர்பர் நிறுவனம் அறிவித்திருந்தது. அதன்படி பெற்றோரை அழை த்து பணம் வழங்குவதாகத் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் ஜலா வின் ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் வெகுவாக பரவி வருகின்றது. (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53 உலக சாதனை படைத்தவருக்கு கலாநிதிப் பட்டம்

### *வழங்கியது பிரிட்டன் பல்கலைக்கழகம்*

புதுடில்லி, ஜன.29
உலக சாதனைகள் பலவற்றைப் படைத்தவருக்கு பிரிட்டனின் உலக சாதனைப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த குரு ராம்ரகிம் சிங் இன்சான் என்பவர் 53 உலக சாதனைகளைப் படைத்துள்ளார். அவற்றில் 17 கின்னஸ் உலகசாதனைகளும், 27 ஏசியா புத்தக சாதனைகளும், 7 இந்தியன் புத்தக சாதனைகளும், 2 லிம்கா புத்தக சாதனைகளும் ஆகும். இந்தச் சாதனைகள் அனைத்தும் வெவ்வேறு வகைகளில் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



அதிகம் பேரைக் கொண்ட செல்பி படம், மிகப்பெரிய திரைப்பட போஸ்டர் உருவாக்கம், மிகப் பெரிய இரத்த தான முகாம், கண் முகாம் என்பன இவர் ஏற்படுத்திய சாதனைகளில் சிலவாகும். (த–ரி4)

# சங்கீத சபையால் சாதிக்க முடியும்

■ கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கையில் அரசியல், ஆன்மிகம் இரண்டுக்கும் தனித்தனியாகச் சம்பிரதாய சாம்ராச்சியம் இருப்பது போல, கலைகளுள்ளும் கர்நாடக சங்கீதத்துக்கு என ஒரு சாம்ராச்சியத்தை நிரந்தரமாக வெல்வதற்கு, வட இலங்கைச் சங்கீத சபையாலேதான் நிச்சயமாக முடியும். இது ஒரு சரித்திர பூர்வமான நியாயமாகும்.

1931 ஆம் ஆண்டு தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு ஆன்மிக சம்பிரதாயங்களை நிலைநாட்டவென, பரம், குமாரசாமி போன்ற பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்டதே வட இலங்கைச் சங்கீத சபையாகும். எண்பத்தாறு வருட காலமாகத் தன்னால் முடிந்தவரை இசையோடியைந்த கலைப்பணியாற்றி வருவதை எவராலும் உணரமுடிகிறது. இந்தப் பணிக்காக அரச அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் யாழ்.கல்வித் திணைக்களத்தில் கல்விப் பணிப்பாளராக எவர் பதவி ஏற்கிறார்களோ, அவரே தான் வட இலங்கைச் சங்கீதசபைக்கும் தலைவராக இருப் பார். இதன் பிரகாரம் ஆசிரிய தராதரப் பரீட்சையில் சித்தியடையும் ஒருவர், அரசபாடசாலைகளில்சங்கீதஆசிரியராக நியமனம் பெற முடியும். பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் வருவதற்கு முன்னதாக சங்கீத ஆசிரிய தராதரப்பத்திரம் (ஆறாந்தரம்) சங்கீத பூசணமும், சங்கீதரத்தினம், சங்கீத வித்துவான், இசைமணி ஆகிய பட்டங்களே இலங்கையில் கர்நாடக சங்கீதத்துக்கு மகிமை சேர்த்தன. கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலமாக இசைப் பெரியார்கள் சபைக்குப் புத்துயிரளித்ததோடமையாமல், தொடர்ந்தும் அவர்களது சீடர்களும், யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பட்டதாரிகளும், விரிவுரையாளர்களும்வட இலங்கைச்சங்கீதசபையை வளம் படுத்துவதில் பெரும் ஈடுபாடு காட்டி வருகிறார்கள். இலங்கையில் ஒவ்வொரு வருடமும் சங்கீதம், நடனம், பண்ணிசை, வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், நாடகம் என பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். எண்பத்தைந்து வீதமானவர்கள் சித்தியடைகிறார்கள். இஃது ஒரு அங்கீகாரமாகும். அல்லாமலும், மாணவர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகும். அரச உதவிகள் கிடைப்பதற்கு வழிசெய்யப்பட வேண்டும்.



**சிறப்பு**

மேற்படி சபையால் நடத்தப்படும் தரம் ஒன்று தொடக்கம் ஆறுவரையான பரீட்சைகளில் மாணவர்கள் பங்கு பற்றும் போது, க.பொ.த. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளில் அதி விசேட சித்திகளைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமைகிறது. அல்லாமலும், பல்கலைக்கழக தராதர மட்டங்களை உயர்த்திக் கொள்ளவும் இந்தப் பரீட்சைகள் வாய்ப்பளிக்கிறது.மேலும், பல்கலைக்கழக நுண்கலை மாணவர்களும் வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகளுக்கு மிக்க ஆர்வமாகத் தோற்றுவதனால் சங்கீத சபையின் கணிப்பீடு மெத்தச் சரியாகவே உறுதிப் படுத்தப்படுகிறது. நாளிலும், பொழுதிலும் சபையை வழிகாட்டி மேன்மையுறச்செய்த, பரம் தில்லைராஜா, ராம்குமாரசுவாமி, சண்முகரத்தினம், ஐயாக்கண்ணு தேசிகர், சாம்பமூர்த்தி, சந்தானம், கல்யாண கிருஷ்ண பாகவதர், சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, பொன். முத்துக்குமாரு, எ.எஸ். இராமநாதன், ப.சின்னராசா, பாலசிங்கம், கணபதிப்பிள்ளை, கருணாகரன், பத்மலிங்கம், திலகநாயகம்போல், வால் நடராஜா, வி.கே. நடராஜா, பொன்.சுந்தரலிங்கம், குமார சுவாமி, சத்திய பாமா – இராஜலிங்கம், சரஸ்வதி பாக்கியராஜா, பரமேஸ்வரி, தர்மபூபதி, தங்கலட்சுமி, மாது சிரோன்மணி – வேலாயுதர், ஞானகுமாரி, கோமள வல்லி, ஏரம்பமூர்த்தி, பொன்.ஸ்ரீவாமதேவன், திலகேஸ்வரன், உருத்திரன், இராமநாதசர்மா, பாக்கியலட்சுமி, சாந்தா, சாரதா, முத்துக்குமாரசாமி சர்மா, மகேந்திரன், சிதம்பரநாதன், சாந்தினி சிவனேசன், பத்மினி, வீரமணிஐயர், கிருாந்தி, நந்தினி, இராதாகிருஷ்ணன், செல்லத்துரை, நா.வி.மு.நவரத்தினம், சரோஜா தம்பு, வர்ணகுலசிங்கம், பூமணி இராசரத்தினம், பொன்னம்பலம், கந்தப்பு, அருளையா, சிவஞான சேகரம், வாஸஸ்பதி, துரைராஜா, பாலச்சந்திரன், கலாராணி மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் இன்னும் குறிப்பாகச் சொல்லப்பட வேண்டியவரான அமரர் தற்பரானந்தன் அவர்கள் எல்லோருமாக இந்தச் சபைக்கு வரலாறு படைத்துள்ளார்கள். இயலிசை வாதி வீரமணி ஐயாவின் கீதம், சபையை வாழ்த்திய வண்ணமுள்ளது. வேறென்னதான் வேண்டும்?

# உங்களுக்கு 2016 எப்படி?



## துலாம்

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் துலாம் ராசிக்காரர்களுக்கான பயன்கள் பற்றிப் பார்த்தோம். துலாம் ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

**ஜூன்**

லாப ஸ்தானமான 11–இல் குரு, ராகு சஞ்சாரம் செய்வது அற்புதமான அமைப்பு என்றாலும் அஷ்டம ஸ்தானமான 8 இல் சூரியன், சுக்கிரன் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனமுடனிருப்பது நல்லது. தேவையற்ற பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். பணவரவுகள் தாராளமாக இருக்கும். கொடுக்கல்– வாங்கலில் சிந்தித்து நடப்பது உத்தமம். உற்றார்– உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பாராத இடமாற்றங்கள் அலைச்சலை ஏற்படுத்தும். தொழில், வியாபாரத்தில் சற்றே மந்த நிலை உண்டாகும். விநாயகரை வழிபாடு செய்வது நல்லது.

**ஜூலை**

மாதக்கோளான சூரியன், சுக்கிரன் சாதகமாக சஞ்சரிப்பதும், 11 இல் குரு, ராகு சஞ்சாரம் செய்வதும் ஓரளவுக்கு நற்பலனை ஏற்படுத்தும் அமைப்பாகும். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகி மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். கொடுக்கல்– வாங்கலில் சரளமான நிலை ஏற்படும். உற்றார்– உறவினர்களின் ஆதரவுகள் சிறப்பாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கும் எதிர்பாராத இடமாற்றங்கள் கிடைக்கப் பெற்றுக் குடும்பத்தோடு சேருவார்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபங்கள் கிட்டும். கடன்கள் படிப்படியாகக் குறையும். முருகனை வழிபடவும்.

**ஓகஸ்ட்**

மாதக்கோளான சூரியன் 10, 11இல் சஞ்சரிப்பதும், 11இல் குரு, ராகு சஞ்சாரம் செய்வதும் தொழில், வியாபாரரீதியாக முன்னேற்றங்களையும் பொருளாதார ரீதியாக உயர்வுகளையும் ஏற்படுத்தும் அமைப்பாகும். அரசுவழியில் அனுகூலமான பயன்கள் கிடைக்கப்பெறும். பணவரவுகள் தாராளமாக இருக்குமென்றாலும் கொடுக்கல்– வாங்கலில் கவனமுடன் செயற்பட்டால் வீண் விரயங்களைத் தவிர்க்கமுடியும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிட்டும். தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்வது உத்தமம்.

**செப்ரெம்பர்**

இலாப ஸ்தானமான 11–ல் சூரியன், ராகு சஞ்சாரம் செய்வதும் 9 ஆம் திகதி முதல் 3இல் செவ்வாய் சஞ்சாரம் செய்யவிருப்பதும் எடுக்கும் முயற்சிகளில் அனுகூலத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. எடுக்கும் காரியங்களில் எதிர்நீச்சல் போட்டாவது வெற்றிகளைப் பெற்றுவிடுவீர்கள். தேவையற்ற பயணங்களால் அலைச்சல், பதற்றம், ஆரோக்கிய பாதிப்புகள் உண்டாகும். சிவபெருமானை வழிபடுவது உத்தமம்.

**ஒக்ரோபர்**

விரயஸ்தானமான 12இல் சூரியன், குரு சஞ்சாரம்செய்வது வீண் செலவுகளை ஏற்படுத்தும் அமைப்பென்றாலும் 3இல் செவ்வாய் சஞ்சரிப்பதால் எதிர்நீச்சல் போட்டாவது வெற்றியைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வது நல்லது. கணவன்– மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகக் கூடும் என்பதால் விட்டுக்கொடுத்து செல்வது உத்தமம். நம்பியவர்களே துரோகம் செய்வார்கள். தொழில், வியாபாரம் செய்பவர்கள் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. உத்தியோகஸ்தர்களுக்கு தேவையற்ற இடமாற்றங்கள் ஏற்படும். சிவவழிபாடு செய்யவும்.

**நவம்பர்**

ஜென்ம ராசியில் சூரியன், 2இல் சனி, 4இல் செவ்வாய் சஞ்சரிப்பதால் சுகவாழ்வு சொகுசு வாழ்வு பாதிப்படையும். எடுக்கும் எந்தவொரு காரியத்திலும் கஷ்டப்பட வேண்டியிருக்கும். வரவுக்குமீறிய செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். உற்றார்– உறவினர்களை அனுசரித்துச் செல்லவும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் தேவை. சுப காரியங்களுக்கான முயற்சிகளில் தடைகளுக்குப் பின்பே அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு சிறுசிறு நெருக்கடிகள் நிலவும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமுடனிருப்பது உத்தமம். ஆஞ்சநேயரை வழிபடுவது மூலம் நற்பயன் உண்டாகும்.

**டிசெம்பர்**

குடும்ப ஸ்தானமான 2இல் சனி, சூரியன், 4இல் செவ்வாய் சஞ்சாரம் செய்வதால் குடும்பத்தில் வீண் குழப்பங்கள் உண்டாகும். ஒற்றுமைக் குறைவு, நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். பணவரவுகளிலும் தடைகள் ஏற்படுவதால் நெருக்கடிகள் அதிகரிக்கும். சுப காரிய முயற்சிகளில் தடை, தாமதங்கள் உண்டாகும். உயரதிகாரிகளின் கெடுபிடிகளால் மன நிம்மதி குறையும். மாத பிற்பாதியில் சூரியன் 3இல் சஞ்சரிக்கவுள்ளதால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். முருக வழிபாடு, சிவ வழிபாடு செய்வது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | 4 | | |
| 4 | | 1 | | | | | 8 | 3 |
| | 8 | | 5 | | | 1 | | 6 |
| 5 | | | | | | 8 | 7 | |
| 2 | 1 | | | | | | 5 | 4 |
| | 7 | 4 | | | | | | 2 |
| 1 | | 5 | | | | | 3 | |
| 6 | 9 | | | | | 7 | | 5 |
| | | 2 | 8 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்குஒருஎண்விளையாட்டுதர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## வித்தியாசமான வேடத்தில் தனுஷ்

பொலிவூட்டைக் கலக்கிக் கொண்டிருக்கும்போதே "ரான்ஜ்னா" படம் மூலம் பொலிவூட்டிலும் கால் பதித்தார் தனுஷ். அதோடு, அறிமுகமான முதல் படத்திலேயே சிறந்த நடிகருக்கான பொலிவூட் விருதையும் வென்று வட இந்திய ரசிகர்களுக்கும் பரிச்சயமானார். ஏற்கெனவே "கொலவெறி" பாடல் தந்த தனுஷுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கிறார்கள். இப்போது நேரடி பொலிவூட் படத்திலும் நடிக்கவிருக்கிறார்.

இராணியன் ரூ பிரெஞ்ச் பெண் இயக்குநரான மார்ஜனே சட்ரபி யின் இயக்கத்தில் உருவாகும் "தி எக்ஸ்ட்ராடினரி ஜர்னி ஆப் தி பகிர் ஹு காட் டிராப்டு இன் தி கியா கப்போர்டு" என்ற படத்தில் மந்திர தந்திரங்கள் மூலம் பேய்களை விரட்டுபவராக நடிக்கிறாராம் தனுஷ். தனது அம்மாவின் கோரிக்கைக்காக டெல்லியிலிருந்து பாரிஸ் சென்று அங்கே ரகசியமான மின் ஒன்றை முடிப்பதுதான் இப்படத்தில் தனுஷுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வேலையாம். ஹொலிவூட் நடிகைகள் உமா தர்மன், அலெக்ஸாண்ட்ரா தத்தாரியோ ஆகியோர் முக்கிய வேடங்களில் நடிக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது. இந்தியா, பிரான்ஸ், இத்தாலி, மொராக்கோ உள்ளிட்ட இடங்களில் படப்பிடிப்பு நடத்தவிருக்கிறார்கள்.

**இரவில் தூக்கமில்லையா? மனச்சோர்வா?**
**காதலில் தோல்வியா? வியாபாரத்தில் பெருநட்டமா??**
**கவலை வேண்டாம்**
**அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு...**




## நியூட்டன் விதியின் கற்பனை

நியூட்டன் ஒரு நாள் மனம் நொந்து கால் போன போக்கில் நடந்து கொண்டிருந்த போது, எதிரே ஒரு எருமை வழியை அடைத்து நின்றதாம். என்ன முயன்றும் நகராததால் எருமையை எட்டி உதைத்தார். இந்த தாக்குதலில் எருமை சற்றே நகர்ந்து கொடுத்தது. இதிலிருந்து தான் முதல் இயக்க விதி உருவானது.

"வெளிவிசையொன்று செயற்பட்டு மாற்றும் வரை எந்த ஒரு பொருளும் தனது ஓய்வு நிலையையோ அல்லது நேர்க்கோட்டில்அமைந்த சீரான இயக்க நிலையையோ மாற்றிக் கொள்ளாமல் தொடர்ந்து அதே நிலையில் இருக்கும்."



வலி பொறுக்காமல் எருமை "மா" என்று கத்தியதால் இரண்டாம் இயக்க விதி அறிய முடிந்தது.

கத்தியவுடன் நில்லாமல் அதே எருமை நியூட்டனை முட்டி தள்ளியதால் பிறந்தது மூன்றாம் விதி

படித்ததில் பிடித்தது

"ஒவ்வொரு செய்கைக்கும் இணையான எதிர்ச் செய்கை அமையும்."



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். நண்பரின் தேவைக்கு பணம் கொடுத்து உதவுவீர்கள். பெண்கள், மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**இடபம்:** நிறைவேற்ற வேண்டிய முக்கிய செயல் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். வீட்டுச் செலவுக்கு கடன் வாங்குவீர்கள். செல்லப் பிராணிகளிடம் விலகி இருப்பது நல்லது.

**மிதுனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு பிறர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். பிறருக்காக, பணப் பொறுப்பை ஏற்க வேண்டாம். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**கடகம்:** நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். சமூகத்தில் வரவேற்பு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாக படிப்பர்.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை பிறர் குறை கூறுவர். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் நல்லது. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கன்னி:** சமூகப் பணியில் ஈடுபாடு கொள்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.

**துலாம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த, இடையூறு விலகும். வருமானத்துடன் நிலுவைப் பணமும் வசூலாகும். புதிதாகச் சொத்து வாங்க யோகம் உண்டு.


**விருச்சிகம்:** பிறர் சிரமத்தை குறைக்க உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். பெண்களுக்கு, பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். பிள்ளைகள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

**தனுசு:** உங்களின் திறமையை உறவினர்கள் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி உண்டாகும். இலாபம் உயரும். பணக் கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். குடும்பத்தில், மங்கல நிகழ்வு உண்டாகும்.

**மகரம்:** சொந்தப் பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். உடல் நலத்துக்காக சிகிச்சை மேற்கொள்வீர்கள் குடும்ப ஒற்றுமையை காப்பது நல்லது.

**கும்பம்:** நண்பரின் குறையை பெரிதுபடுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில், உழைப்பிற்கேற்ப இலாபம் கிடைக்கும். பெண்கள், ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர். வாகன பராமரிப்பு பயண முறையை எளிதாக்கும்.

**மீனம்:** பிறருக்கு உங்கள் மீதான நல்லெண்ணம் வளரும். தொழிலில், இலாபம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள், தாராள [illegible] வில் வீட்டுச் செலவு செய்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.




## தமிழ் மொழி

தடுக்கி விழுந்தால் மட்டும் அ ... ஆ...
சிரிக்கும் போது மட்டும் இ... ஈ...
சூடு பட்டால் மட்டும் உ... ஊ...
அதட்டும் போது மட்டும் எ...ஏ...
ஐயத்தின் போது மட்டும் ஐ...
ஆச்சரியத்தின் போது மட்டும் ஒ... ஓ...
வக்கணையின் போது மட்டும் ஔ...
விக்களின் போது மட்டும் ஃ...
என்று தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன் மொழி
தமிழ் மொழியென்று...!!!





♥ வெண்ணிலா ♥ @shaza_shazu · 14 Dec 2015



**ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று இப்பதான் நான் தெரிஞ்சுக்கிட்டேன்!**
**எப்படி?**
**என் மனைவியை நான் ஆசைப்பட்டுத் தானே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ததிக்கிடத் தோம் போடும் போர்க் குற்ற விசாரணை..!

- இலங்கையின் போர்க்குற்ற விசாரணையில் அனைத்துலக நாடுகள் சம்பந்தப்பட்டிருப்பதை எமது அரசு நிராகரிக்கவில்லை.
- ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் தொடர்பில், இலங்கை தனது உறுதிப்பாட்டைப் பேணிக் கடைப்பிடிக்கும்.

மேற்கண்டாறு தகவல் வெளியிட்டிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அடுத்த பக்கத்தில்-

★ இலங்கை நீதிமன்றங்களில், வெளிநாட்டுச் சட்டவாளர்கள் கடமை ஆற்றமுடியாது. நாட்டின் அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யாமல், புதிதாக அனைத்துலக நீதிமன்றம் ஒன்றை அமைக்க இயலாது.

★ அரசியல்வாதிகள், இராணுவ அதிகாரிகள் மற் றும் மதத்தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி, மிகவும் நிதானமாக, நீதிமன்றக் கட்டமைப்பு உரு வாக்கப்படும்--என்று ஜனாதிபதி தெரிவித்திருக் கிறார்.

மேற்சொன்ன-சுட்டிக்காட்டப்பட்டுள்ள-ஒன்றுக்கு மற்றது முரணான கருத்துக்கள், போரினால் பாதிப்புற்ற தமிழ் மக்களை, போரில் அரச தரப்பு-அதன் ஆயுதப் படைகள் கொன்றொழித்த விவகாரத்தை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளும், போக்குகள் மேலெழும் என்பதைப் பூடகமாக வெளிப்படுத்துகின்றன எனலாம்!

நாட்டில் நல்லன நடைபெற வேண்டும்; முந்தைய கொழும்பு அரசுகள் போலன்றி, அவற்றின் வழித்தடத்தில் கால் பதிக்காமல், நல்லாட்சி நடத்தப்பட வேண்டும்-என்பதை எதிர்பார்த்தே, ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும், பிரதம மந்திரியாக ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டின் மிக உயர்ந்த ஆட்சிப் பதவிகளில் மக்களால்-வாக்காளர்களால்-அமர்த்தப்பட்டனர்.

ஆனால், இந்தப் பத்தியின் முதல் பந்தியில் தெரிவித்த உறுதிப்பாடுகள் கடைப்பிடிக்கப் படுமா என்பது கரைந்து கரி ஆகிவிடுமோ என்ற அங்கலாய்ப்பே, பாதிப்புற்ற தரப் பினரான தமிழ் மக்களை நுள்ளிக்கிள்ளத் தொடங்கிவிட்டது!

நல்லாட்சி என்பதன் முக்கிய கூறுகளின் தன்மை சொன்னதைச் செய்வதும், செய்ததைச் சொல்வதும் ஆகும். ஒன்றை வெளிச்சம் காட்டி மற்றதை இருளில் ,அமுக்கி விடுவ தன்று.

நாட்டின் இரண்டு அதிஉயர் ஆட்சித் தலைவர்களும் தத்தமது எண்ணங்களை, முரண் நிலை நின்று "சாதிக்க" முயன்றால், ஒரு தரப்பு தமது ஆதரவாளர்களை இழந்து ததிகிண தோம் போடும் அடிக்கும் நிலையே மேல் எழும். இலங்கை நாட்டை அது உலுக்கி குலுக்கும்.

மொத்தத்தில், இந்த நாட்டில் சமாதான சகவாழ்வு என்றால் என்ன என்ற நிலையையே மேலும் பொரித்துப் பெருக்கும்....!

# பௌத்த தேரர்களை நெறிப்படுத்துவது அரசின் தலையாய கடமை

எம்.ஐ.முபாறக்



இந்த நாடு சர்வ தேச மட்டத்தில் அவமானத் தைச் சம்பாதித்த-சிறுபான்மை இன மக்கள் கொடுமைகளை அனுபவித்த - பௌத்த மதம் பிறரால் தூற்றப்பட்ட ஒரு யுகம் இருந்தது என்றால் அது மகிந்த ராஜபக்சவின் யுகம்தான் என்பதில் சந்தேகமில்லை.

அவரது ஆட்சி எவ்வளவு மோசமாக இருந்தது என்பதை முழு உலகும் அறியும்.பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டன. சர்வாதிகாரம் தலைக்கேறி சிறுபான்மை இன மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டனர்.

பௌத்த மதத்தை மாத்திரம் அங்கீகரித்து ஏனைய மதங்களை இல்லாதொழிப்பதற்கு அவரது ஆட்சியில் எவ்வாறு மறைமுகமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம்.

போரினால் தமிழ் மக்களை அழித்துவிட்டு - அவர்களை அடக்கி ஒடுக்கிவிட்டு அடுத்த சிறுபான்மை இன மக்களான முஸ்லிம்களை அடக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்தது.

முஸ்லிம்களை அடக்கி ஒடுக்குவதற்கும் இஸ்லாத்தை இழிவுபடுத்துவதற்குமாக மகிந்தவின் அனுசரணையில் உருவான பேரினவாத அமைப்பான பொதுபல சேனா முஸ்லிம்களுக்கு எண்ணற்ற கொடுமைகளை இழைத்தது.

### முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம்

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் பரப்புரை நாடு முழுவதும் முன்னெடுத்து வந்து, இறுதியில் அளுத்கமவில் கலவரத்தை ஏற்படுத்தி முஸ்லிம்களையும் சொத்துக்களையும் இந்தப் பொது பல சேனா நாசமாக்கியது.

இந்த அமைப்பு முஸ்லிம்களுக்கு மாத்திரம் தலையிடியாக இருக்கவில்லை. அனைத்துத் தரப்பினருக்கும் தலையிடியாகவே இருந்தது. கல்விச் செயற்பாடுகளில் தலையிட்டது; நீதித்துறையில் தலையிட்டது, பொலிஸாரின் செயற்பாடுகளில் தலையிட்டது.

பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரரின் செயற்பாடுகள் மனோநிலை பாதிக்கப்பட்ட ஒருவரின் செயற்பாடுகள் போலவே அமைந்திருந்தன.


இந்த அமைப்பின் இனவாதச் செயற்பாடுகள் மூலம் பௌத்த மக்களின் வாக்குகளை அபகரிப்பதற்காக அப்போதைய ஜனாதிபதி மகிந்த எல்லாவற்றையும் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றார். அந்த அமைப்பின் செயற்பாடுகளுக்குத் தூபமிட்டார்.

### பொதுபல சேனாவின் பழைய செயற்பாடுகள்

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சில நாள்கள் மாத்திரம் அடங்கி இருந்த பொதுபல சேனா இப்போது அதே பழைய செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

எந்தவிதத்திலும் தனக்குச் சம்பந்தமில்லாத விடயங்களில் தலையிடும் ஞானசார தேரர் இப்போது நீதித்துறையிலும் தலையிடத் தொடங்கியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை ஹோமாகம நீதிமன்றத்தில் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அந்த விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் எக்னெலிகொடவின் கடத்தலை நியாயப்படுத்தும் வகையில் ஞானசார தேரர் செயற்பட்டமையும், அதற்காக அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கின்றமையும் நாம் அறிந்ததே.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஞானசாரரைத் தடுப்புக்காவலில் வைப்பதற்கான உத்தரவை எதிர்த்து பௌத்த தேரர்கள் பலர் நீதிமன்ற வளாகத்துக்குள் நடந்துகொண்ட விதமும் ஞானசாரர் நடந்துகொண்ட விதமும் மீண்டும் ஒரு தடவை பௌத்த மதத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தேரர்களின் அநாகரிகமான செயற்பாடு

காவி உடை அணிந்திருந்தால் தம்மால் எதையும் செய்ய முடியும், தாம் எந்தச் சட்டத்துக்கும் கட்டுப்படத் தேவை இல்லை நீதிமன்றங்களை – நீதிபதிகளை மதிக்கத்தேவை இல்லை என்ற நிலைபாட்டில் இந்தத் தேரர்கள் அநாகரிகமாக நடந்துகொள்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த ஆட்சியில் இந்தத் தேரர்கள் எவ்வாறு ஆடினார்களோ அவ்வாறுதான் இந்த ஆட்சியிலும் ஆடுகின்றனர். இதனால், ஆட்சி மாற்றம் – நல்லாட்சி கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது.

ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது இந்தத் தேரர்களின் போக்குதான். அதே போக்கு இந்த ஆட்சியிலும் தொடருமாக இருந்தால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு என்ன பிரயோசனம்? மகிந்தவின் ஆட்சியே இருந்திருக்கலாம்.

ஒரு மதத்தின் தலைவர்கள் என்பவர்கள் அந்த மதத்தை – அந்த மதத்தைப் பின்பற்றுபவர்களை வழிநடத்த வேண்டியவர்கள். அதற்காகத்தான் அவர்கள் சமயத் தலைவர்கள் பொறுப்பை ஏற்கின்றனர். எல்லா நல்ல விடயங்களிலும் அவர்கள் முன்மாதிரியாகத் திகழ வேண்டியவர்கள். ஆனால், பௌத்த மதத்தின் தேரர்கள் சிலர் பிழையான விடயங்களுக்கே முன்மாதிரியாகத் திகழுகின்றனர்.

### நீதிமன்றத்திலும் அடாவடித்தனம்

நீதிமன்றில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று தெரிந்தும்கூட, இந்தத் தேரர்கள் அங்கு மிகவும் அநாகரிகமாக நடந்துகொண்டதன் மூலம் இவர்கள் அப்பாவிப் பொதுமக்களைப் பிழையாக வழிநடத்திச் செல்ல முற்படுகின்றனர். அநாகரிகமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு விளைகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

நிச்சயமாக இவர்கள் பௌத்த மதத்துக்கு எதிரானவர்களே. பௌத்த மதத்தைப் பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் அந்த மதத்தைச் சீரழிக்கவும் அந்த மதத்தைப் பின்பற்றும் மக்களை தமது வழிக்கெடுக்கவும் இந்தத் தேரர்கள் முற்படுவது தெளிவாகின்றது.

பௌத்த மதத்துக்குத் தலைமை தாங்கும் உண்மையான தேரர்கள் இனிமேலும், இந்தப் போலித் தேரர்களின் செயற்பாடுகளைப் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அவ்வாறு இருந்தால் உண்மையான தேரர்களும் இவற்றால் பாதிக்கப்படுவதோடு பௌத்த மக்களும் பாதிக்கப்படுவர். பௌத்த மதம் என்றால் – பௌத்த தேரர்கள் என்றால் இப்படித்தான் என்றொரு வரைவிலக் கணத்தை இந்தப் இனவாதத் தேரர்களின் செயற்பாடுகள் கொடுத்து விடும்.

> "காவி உடை அணிந்திருந்தால் தம்மால் எதையும் செய்ய முடியும்; தாம் எந்தச் சட்டத்துக்கும் கட்டுப்படத் தேவை இல்லை, நீதிமன்றங்களை – நீதிபதிகளை மதிக்கத் தேவை இல்லை என்ற நிலைபாட்டில் இந்தத் தேரர்கள் அநாகரிகமாக நடந்து கொள்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது."

### தேரர்களைக் கண்டால் அச்சப்படும் நிலை

தேரர்களைக் கண்டால் அச்சப்படும் ஒருநிலைஏற்கனவே சிறுபான்மை இனமக்கள் மத்தியில் இருக்கின்றது. தேரர்களைப்பயங்கரவாதிகளைப் போல் அவர்கள் பார்க்கின்றனர்; தேரர்களிடம் போய்ப் பேசுவதற்கு பயப்படுகின்றனர். ஒட்டுமொத்த தேரர்களும் தமக்கு எதிரானவர்கள்எனசிறுபான்மை இன மக்களுள் அதிகமானவர்கள்எண்ணுகின்றனர்.

இவ்வாறான ஒரு சில தேரர்களின் அநாகரிகமான செயற்பாடுகளே இதற்குக் காரணம். திரும்பும் திசையெல்லாம் தேரர்கள் இனவாதம் பேசுபவர்களாகவும் நாட்டின் சட்டங்களை மீறுபவர்களாகவும் சிறுபான்மை இனமக்களின் கண்களில்படுகின்றனர். ஊடகங்களில் எப்போதும் தேரர்களின் பிழையான செயற்பாடுகளே காட்டப்படுகின்றன.

இதனால், தேரர்கள் என்றாலே பிழையானவர்கள் என்ற மனோநிலை ஏற்படுகின்றது. இது நல்ல தேரர்களுக்கும் ஆபத்தான ஒன்றாகும். ஆகவே, அநாகரிகமாக நடந்துகொள்ளும் இந்தத் தேரர்களுக்குக் கடிவாளமிடுவது கட்டாயமாகும்.

### தேரர்களை நெறிப்படுத்த வேண்டும்

தேரர்களை நெறிப்படுத்துவதற்காக நாடாளுமன்றில் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டவரைவை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது.

இந்த அரசும் உண்மையான பௌத்த தேரர்களும் இது விடயத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே இந்த நாட்டின் எதிர்காலத்தைக் காப்பாற்ற முடியும்.



## தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா?

எவ்வளவுதான் போக்குவரத்துச் சாதனங்கள் வந்தாலும் நடுத்தர வர்க்கத்தினர் அதிகம் நம்புவது தனியார்பஸ்களைத்தான். ஆனால் சில தனியார்பஸ் சாரதிகளும், நடத்துநர்களும் நடந்து கொள்ளும் முறை சரியல்ல.

யாழ்ப்பாணம் தனியார்பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்படும் தனியார்பஸ்ஸில் வேலைக்குச் செல்வோர், தனியார் வகுப்புக்கு செல்வோர், வைத்தியசாலைக்கு உணவு கொண்டு செல்வோர் எனத் தத்தம் அலுவல்களின் நிமித்தம் எவ்வளவோ அவசரமாக உள்ளவர்கள் ஏறுவார்கள். ஆனால் சாரதி சிவன் கோயிலடியில் சுமார் பத்து நிமிடம் தரித்து நின்றுவிட்டு இ.போ.ச. பஸ்ஸைக் கண்டவுடன் தமது துரத்தல் பயணத்தை மேற்கொள்வார். பின்பு என்ன? இடையில் இறங்க வேண்டியவர்களை வாசலில் நின்றபடி தூக்கி எறிந்துவிட்டு செல்கிறார்கள்.

இவர்கள் இவ்வாறு துரத்தியபடி செல்வதால் பயணிகள் உயிரைக் கையில் பிடித்தபடி பயணிக்க வேண்டியிருக்கிறது. வீணாகத் தரித்து நிற்காமல் சாதாரண வேகத்தில் சென்றாலே யாரும் பயமின்றியும், குறித்த நேரத்துக்கும் செல்ல முடியும். அதுமட்டுமன்றி சில நடத்துநர்கள் தாம்பூலம் தரிப்பதால் (வெற்றிலை போடுவதால்) பயணிகள் நடத்துநரிடம் எதையும் சுமுகமாகக் கேட்டறிய முடிவதில்லை.

சமீபத்தில் இவ்வாறு ஒரு பாடசாலை மாணவியின் சீருடையைப் பாழாக்கி, மாணவி அழுதவாறு பாடசாலைக்குச் சென்ற சம்பவமும் என் கண் முன்னே நிகழ்ந்தது. இனியாவது இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறேன்.

**எஸ்.செல்வநாயகம்**
சிவன்கோயிலடி

## போக்குவரத்துப் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடச் செய்தல்

இந்து மகளிர் கல்லூரி வீதி, பலாலி வீதியில் ஆரம்பமாகி அரசடி வீதியில் முடிவடைகின்றது. இந்த வீதியின் ஊடாகப் பல்கலைக்கழகம், தொழில் நுட்பக்கல்லூரி, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, இந்து மகளிர் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை, வைத்தீஸ்வராக் கல்லூரி போன்றவற்றுக்குச் செல்கின்ற மாணவர்களும், தொழில் நிமித்தம் செல்கின்றவர்களும் காலையில் 7.30 மணியிலிருந்து காலை 8.30 மணி வரையிலும் பல இடர்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும், ஓட்டோக்களிலும் வருகின்ற மாணவர்களும் அவர்களை ஏற்றி வருபவர்களும், பலாலி வீதியிலிருந்து இந்து மகளிர் வீதியைக் கடக்கின்றபோது போக்குவரத்து நெரிசலும், சில சந்தர்ப்பங்களில் விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே பாடசலை ஆரம்பிக்கின்ற நேரமாகிய காலை 7.30 மணியிலிருந்து காலை 8.30 மணி வரையும், பாடசாலை முடிவுறுகின்ற நேரமாகிய பிற்பகல் 2 மணியிலிருந்து 3 மணி வரையும் போக்குவரத்தை இலகுவாக்குவதற்கும், விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் போக்குவரத்துப் பொலிஸாரைக் கடமையில் ஈடுபடச் செய்வதன் மூலம் மக்கள் பயன்பெறுவார்கள்.

பொலிஸ் திணைக்களத்துக்கு எனது பணிவான சமர்ப்பணம்.

**இ.இராஜேந்திரா**
சமாதான நீதிவான் (தீவு முழுவதும்)

## ஏன் இந்த அதிகரித்த கட்டணம்?


கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை லண்டனில் இருக்கும் எனது மகனின் குடும்பத்துக்கு பொதி ஒன்றை அனுப்புவதற்காக யாழ்ப்பாணம் தபாற்கந்தோருக்குச் சென்றிருந்தேன். அந்தப் பொதியின் நிறை 2 கிலோவுக்குச் சற்றுக் குறைவாக இருந்தது. அதனைப் பதிவு செய்து, பொதி சேவையில் அனுப்புவதற்கு 3,680 ரூபா என்று கூறினார்கள். நான் ஆச்சரியமடைந்து அந்தத் தொகைக்கு உடன்படாமல் அந்தப் பொதியைத் தனியார் பொதி சேவை நிறுவனத்துக்குச் சென்று கேட்டபோது அவர்கள் 2,300 ரூபாவுக்கு அதே பொதியை அனுப்பினார்கள். மேலும் 4 நாள்களில் அது சென்றடையுமெனவும் கூறினார்கள். அவர்கள் கூறியபடி அந்தப் பொதி சென்றடைந்து விட்டது. ஆனால் அதேவேளை யாழ்ப்பாணம் தபாற்கந்தோரில் எத்தனை நாள்களில் கிடைக்கும் என்ற உத்தரவாதமும் இல்லை. வழமையாக அரச நிறுவனத்தில்தான் தனியார் சேவையைவிடக் கட்டணம் குறைவாக இருக்கும். ஏன் இந்த அதிக கட்டண வித்தியாசம் (1,380 ரூபா) சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து தங்கள் மேலிடத்துக்கு அறிவித்து தனியார் சேவையை விடக்குறைந்த கட்டணத்தில் இந்தச் சேவையை வழங்க முன்வருவார்களா?

**சூ.மைக்கல்**, நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம்...



# மனமாற்றம் கொண்ட இராவணன்



விருப்பமில்லாத ஒரு பெண்ணைத்தொட்டால்உடனே தலை வெடித்துவிடும் என்ற சாபத்தைப் பெற்றவன் இராவணன். சீதையின் விருப்பத்தைப் பெற முடியாமல் தவித்தான் இராவணன்.

இராவணனின் தவிப்பைக் கண்ட அவன் மனைவி மண்டோதரி "நீங்கள் தாம் எல்லாவித சித்திகளும் பெற்றவராயிற்றே! நீங்கள் நினைத்தால் இராமபிரானாக உங்களை உருமாற்றிக்கொள்ள முடியுமே. அப்படி இராமபிரானாக மாறிச் சீதையின் முன் சென்றால் உடனே ஏற்றுக்கொள்ளுவாள் அல்லவா?" என்றாள்.

இராவணன் மனைவியைப் பாராட்டி விட்டு இராமபிரானாக மாறவேண்டுமென மனதில் நினைத்தான். உடனே இராமபிரானாக மாறிவிட்டான். தலைகுனிந்திருந்த மண்டோதரி யிடம் 'தேவி இப்போது என்னைப் பார் இராமபிரானாகி விட்டேன்" என்றான் இராவணன்.

மண்டோதரி தலைநிமிராமலே சொன்னாள். "மாற்றான் உருவத்திலிருக்கும் உங்களைப் பார்க்க விரும்பவில்லை" என்றாள் மண்டோதரி.

மண்டோதரியின் பதிபக்தியை உணராத, இராமபிரானாக மாறிய இராவணன் அசோக வனத்திலிருக்கும் சீதா பிராட்டியைப் பார்க்கச் சென்றான்.

சிறிது தூரம் சென்ற இராமபிரானாக உருமாறி இராவணன் சட்டென இராமபிரான் உருவத்தை மாற்றி இராவணனாக மாறி விட்டான்.

திரும்பவும் மண்டோதரி முன் வந்தான். தலை குனிந்திருந்த மண்டோதரியிடம் "நான் இராமனாகச் சென்றேன். இராவணனாகத் திரும்பி வந்து விட்டேன்" தலை நிமிர்ந்த மண்டோதரி 'ஏன் திரும்பி வந்து விட்டீர்கள்" என்றாள்.

"எப்போது உருவில் இராமனாக மாறினேனோ அப்போதே மனதிலும் சீதாபிராட்டி அடுத்தவர் மனைவி என்ற எண்ணம் வந்துவிட்டது" என்றான் இராவணன்.

"இராமனின் உருவம் மாறியதற்கே இத்தனை சிறப்பென்றால் இராமபிரான் எவ்வளவு உத்தமராக இருப்பார்" எனக் கூறினாள் மண்டோதரி இராவணன் தலை குனிந்தான்.

**நல்லவர்களைப் பற்றிய நினைவுகளே கெட்ட எண்ணங்களை அகற்றி விடும்.**

# வரலாற்றில் இன்றைய தினம்

1834 -தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க முதன் முதலாக படைப் பிரயோகத்தைப் பயன்படுத்த அமெரிக்க ஜனாதிபதி ஜாக்சன் கட்டளை பிறப்பித்தார்.

1848 - பத்திரிக்கைச் சுதந்திரம் / நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக சிசிலியில் புதிய யாப்பு கொண்டுவரப்பட்டது.

1896 - மார்பு புற்று நோய்க்கான கதிர் சிகிச்சை முதன்முதலாக மருத்துவர் எமில் குறூப் இனால் மேற்கொள்ளப்பட்டது.

1917 - கே 13 பிரித்தானிய நீர் மூழ்கிக் கப்பல் ஸ்கொட்லாந்து கெயர்லோச் இல் மூழ்கி 32 மாலுமிகள் சாவு.

1933 - ஜேர்மன் ஜனாதிபதி போல்வொன் ஹின்டன் பேர்க் அடொல்ப் ஹிட்லரை அதிகாரியாக நியமித்தார்.

1942 - லிபியாவின் பெங்காஷியில் ஜேர்மன் மற்றும் இத்தாலிப் படைகள் நிலைகொண்டன.

1944 - ஜேர்மன் குண்டு வீச்சு விமானங்கள் லண்டனைத் தாக்கின.

1949 - பெரிய பிரித்தானியா, பெல்ஜியம், லக் ஷம்போர்க் நெதர்லாந்து, நியூசிலாந்து மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகள் இஸ்ரேலை அங்கீகரித்தன.

1953 - றிச்சார்ட் போர்ட்டன் ஜீன் சிம்மன்ஸ் நடிப்பில் முதலாவது சினிமா ஸ்கோப் திரைப்படமான "தறோப்' திரையிடப்பட்டது.

1959 - 'பெரும்புகை' லண்டனைத் தாக்கியதால் மார்பு மற்றும் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்களால் பலர் சாவு.

1980 - ஈரானியரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6அமெரிக்கப் பயணக் கைதிகள் கனடியரின் உதவியுடன் தப்பி வந்தனர்.

1985 - பிரதமர் மாக்கறட் தாட்சருக்கு கௌரவப் பட்டம் வழங்க ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் மறுப்பு.

2004 - பறவைக் காய்ச்சல் பீதியினால் கோழிக்குஞ்சு இறக்குமதிக்குத் தடை

2006 - வடமராட்சி கிழக்கில் நில அதிர்வு இடம்பெற்றதெனச் சந்தேகம்.

2008 - மடுமாதா திருப்பதிக்கு சமீபமாக கிளைமோர் தாக்குதலில் 17 பேர் சாவு. சம்பவத்தில் இறந்தவர்களில் 11 பேர் மாணவர்கள். 4பேர் ஆபத்தான நிலையில்.

2013 - ஜெனிவாவில் போர்க் குற்றப் பிரேரணை நிச்சயம் என அமெரிக்கக் குழு கொழும்பில் அறிவிப்பு.

2013 - நோபலுக்கு நிகரான ஆசிய பரிசுத் திட்டம் தைவான் தொழில் அதிபரால் உருவாக்கம்.

2013 - சீனாவின் மிகப்பெரிய சரக்கு விமானமான வை 20 விமானம் 66 ஆயிரம் தொன் சரக்குகளை ஏற்றிக்கொண்டு 13 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கத் தக்கவாறான சோதனை ஓட்டம் வெற்றி.

2014 - எலியின் சாதாரண கலத்தை ஸ்டெம் கலமாக மாற்றும் முறையை விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர்.

# நல்ல புத்தகம் ஒரு சிறந்த நண்பன்

- சில பக்கங்களைப் படிக்கிறோம். ஆனால் படித்த பிறகு என்ன படித்தோம் என்று நினைவுக்கு வருவதில்லை. காரணம் மனம் அதில் ஈடுபடாமல் இருப்பதால், கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அதனால் குறிப்புகள் எடுப்பது சிறந்தது.
- கண்கள் 5 சதவிகிதம் தான் வேலை செய்கிறது. 95 சதவிகிதம் மூளைதான் வேலை செய்கிறது. ஒரு மணி நேரம் படியுங்கள். பின்னர் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.
- காலையில் கிழக்குப் பக்கமும், மாலையில் மேற்குப் பக்கமும் உட்கார்ந்து படியுங்கள். தெற்கு நோக்கிப் படிப்பதை தவிர்க்கவும்.
- எவற்றைப் படிக்க வேண்டுமென்று முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.
- அவசியமில்லாததை ஒதுக்கித்தள்ள வேண்டும். மூளை ஒரு சேமிக்கும் வங்கி.
- அவசியம் அல்லது முக்கியம் என்று கருதுவதை நன்கு படித்து நினைவுப் பெட்டியில் பத்திரப்படுத்த வேண்டும். மனப்பாடம் செய்வதில் தவறில்லை. ஆனால் புரிந்து கொண்டு செய்தால், எப்போதும் நினைவிலிருக்கும்.
- படிக்கும் வேகம் என்ன என்று அறிந்து, அதனைப் படிப்படியாக அதிகரித்துக் கொள்.
- ஒரு நிமிடத்திற்கு 150 வார்த்தைகளைப் படிக்கவும், அதில் 100 வார்த்தைகளையாவது கிரகிக்கும் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- பின்னர் 200-150, 200-250 எனப் படிப்படியாக உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யவும்.
- தினசரி பாடம் சம்பந்தமில்லாத, பொது அறிவை வளர்க்கக் கூடிய ஏதேனும் ஒரு புத்தகத்தை குறைந்தது 15 நிமிடமாவது படிக்கவும். ஒரு வாரத்தில் சுமார் 2 மணி நேரம், மாதத்தில் 8 மணி நேரம் கிடைக்கிறது. ஒரு நல்ல புத்தகத்தைப் படிக்க சுமார் 4 மணி நேரம் தேவை. மாதத்தில் இரண்டு புத்தகங்களைப் படிக்கலாம். ஆண்டில் 24 புத்தகங்களைப் படிக்கலாம்.
- வெளியில் போகும் போது, ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள், பயணம் செய்யும் போதும், பலவற்றுக்காகக் காத்திருக்கும் போதும், நமது நேரத்தை வீணாகச் செலவிடாமல், பயனுள்ள வகையில் செலவிடலாம்.
- படிப்பதைக் கடமையாகக் கருதாமல் பிடித்தமான வியமாக மாற்றிக் கொண்டால், நிச்சயமாக மறக்காது.
- படிக்கிற நேரம் உங்களுக்கு எந்த நேரம் சிறந்தது என்று கருதுகிறீர்களோ, அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.
- படிக்கின்ற போது முக்கியமானவற்றை அடிக்கோடிடுங்கள். தனி குறிப்பேட்டில் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்.
- படிக்கும் பழக்கும் ஒரு சிறந்த பழக்கம். அதனை வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஒரு நல்ல புத்தகம் ஒரு சிறந்த நண்பன், வழித் துணைவன்.



# மழை

வண்ண மயில் ஆடுது!
வானில் மேகம் திரளுது!
வானம் எங்கும் இடிக்குது!
விண்ணில் மின்னல் மின்னுது!

வான மழை வந்தது
மண்ணில் விழுந்து ஓடுது
வெள்ளம் பெருகிப் பாயுது
உள்ளம் மகிழந்து போகுது

மழை வரப் போகுது
மாந்தர் மனம் மகிழுது
ஏழை உள்ளம் துள்ளுது
ஏற்றம் காணப் போகுது!

ஏரி குளங்கள் நிரம்புது!
நெல் வயல்கள் செழிக்குது
வளங்கள் வந்து சேருது!
வறுமை ஒழியப் போகுது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது புதுசு



### யு.எஸ்.பி போட்

ஒரு யு.எஸ்.பி. போட்டில் இரண்டு அலைபேசிகளை சார்ஜ் செய்வதுடன், ஒரே நேரத்தில் இரு அலைபேசிகளில் தகவலைப் பரிமாற்ற முடியும். இந்தச் சாதனத்தின் விலை 300 - 500 ரூபாவாகும்.

## கறைகளைப் போக்க...



பாத்ரூம் டைல்ஸ்களில் அழுக்குப் படிந்திருந்தால் அதனைப் போக்குவதற்கு நான்கு பங்கு தண்ணீரில் ஒரு பங்கு வினிகரை கலந்து தேய்த்தால் போய் விடும். தரையில் எண்ணெய் கொட்டி அந்த இடத்தில் கறை ஏற்பட்டால் கோல



மாவை அதன் மீது போட்டு நன்கு தேய்த்து விட்டு அவ்விடத்தை சுத்தப் படுத்தினால் கறை மறைந்துவிடும். பாத்தி ரம் துலக்கும் இடத்தை எப் போதும் ஈர மாக வைத்திருக்காமல், வாரத்தில் ஒரு முறையாவது காய விட்டு வையுங்கள்.



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 650 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 300 | – |
| கணவாய் | 600 | 450 | 500 | 600 | 600 | 650 | – |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 600 | 600 | 450 |
| சுறா | 300 | 500 | 600 | 800 | 700 | 700 | – |
| சீலா | 250 | 500 | 400 | 500 | 450 | 500 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 500 | 500 | 500 | 450 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 350 | – |
| கும்பிளா | 300 | 350 | 300 | 400 | 400 | 300 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 450 | – | – |
| ஓரா | 300 | 400 | – | 300 | 300 | – | 350 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 200 | 200 | – |
| நகரை | 150 | 250 | – | 300 | 300 | 400 | 350 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 200 | 250 | 150 | 300 | 150 | 200 | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 200 | – |
| மதனம் | 250 | 250 | 180 | 400 | 250 | 400 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 100 | 200 | 250 | 400 | 300 | 300 | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 200 | 300 | 200 |

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 40 | 60 | 30 | 60 | 40 | 40 |
| கத்தரி | 150 | 160 | 140 | 160 | 120 | 140 | 130 | 100 |
| கரட் | 200 | 200 | 180-300 | 180 | 200-300 | 200 | 140 | 300 |
| மரவள்ளி | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 40 | 30 |
| பயிற்றை | 120 | 180 | 100 | 100 | 80 | 160 | 60 | 120 |
| பாகல் | 100 | 120 | 120 | 100 | 80 | 200 | 90 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 60 | 60 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 70 | 80 | 80 | 70 | 60 | 90 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 140 | 120 | 120 | 110 | 120 | 100 | 80 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 40 | 40 |
| தக்காளி | 70 | 80 | 70 | 80 | 70 | 120 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 60 | 50 | 40 |
| கீரை | 20 | 30 | 40 | 10 | 20 | 40 | 30 | 30 |
| பொன்னாங்கானி | 40 | 40 | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 350 | 350 | 300 | 240 | 600 | 250 | 350 |
| புடோல் | 80 | 80 | 80 | 80 | 50-60 | 100 | 50 | 50 |
| கோவா | 100 | 120 | 100 | 100 | 60-70 | 140 | 90 | 100 |
| வெண்டி | 100 | 120 | 120 | 80 | 100-120 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 100 | 120 | 70-80 | 200 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 150 | 100 | 120 | 110-120 | 160 | 100 | 120 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 40–50 | 40-50 | 40 | 30-40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 60 | 60 | 80 | 55 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 80 | 60 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 300 | 280 | 300 | 400 | 160 | 300 |
| இராசவள்ளி | 150 | 240 | 160 | 100 | 160 | 140 | 100 | 90 |
| முருங்கைக்காய் | 1000 | – | 800 | – | 900 | – | – | – |



## பலாக்காய் கூட்டு

**தேவையான பொருள்கள்:**

நறுக்கிய பலாக்காய் - ஒரு கிண்ணம்
காய்ச்சிய பால் - ஒரு கிண்ணம்
காய்ந்த மிளகாய் - 2
மிளகு - கால் தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - ஒரு தேக்கரண்டி
தேங்காய் துருவல் - ஒரு மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

முதலில் தேவையான அளவு உப்புச் சேர்த்து பலாக்காயை முக்கால் பதத்துக்கு வேக வைத்துக் கொள்ளவும். மிளகு, காய்ந்த மிளகாய், உளுத்தம் பருப்பு இவைகளை வறுத்து தேங்காய்த் துருவல் சேர்த்து அரைக்கவும். பின்னர் அரைத்த விழுதை வெந்து கொண்டிருக்கும் காயில் கொட்டவும். இந்த கலவை நன்றாக கொதித்ததும், பால் சேர்க்கவும். ஒரு கொதி வந்ததும் கடுகு, கறிவேப்பிலை தாளித்து இறக்கவும்.





### நாளை

தை-16
சனிக்கிழமை 30.01.2016
திதி: சஷ்டி பி.ப.04.25
நட்சத்திரம்: அத்தம் கா. 07.26 வரை
ராகுகாலம்: 09.36-11.06 வரை
சுபநேரம்: 03.36-05.06 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவ

செய்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே, லெப். யோசித ராஜபக்ச இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

யோசித ராஜபக்சவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர் பாக, கடற்படை ஒரு முழுமையான உள்ளக விசாரணையை நடத்தியுள்ளது. இந்த விசாரணை அறிக்கை, ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் அடிப்படையில், ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்காக கடற்படை காத்திருக்கிறது.

எவ்வாறாயினும், இந்த விசாரணையின் கண்டறிவுகளின் அடிப்படையில், இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிடுவார் என்று நம்பப்படுகிறது.

தாம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், கடற் படைச் சட்டங்களை மீறியது தொடர்பாக யோசித ராஜபக்சவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளதாக, விசாரணையுடன் தொடர்புடைய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடற்படை அதிகாரியாக இருந்து கொண்டே, சி.எஸ்.என் தொலைக்காட்சியின் தலைவராகவும், யோசித ராஜபக்ச பதவி வகித்திருக்கின்றார். ஒரு இராணுவ அதிகாரி இவ்வாறு பதவியை வகிப்பது இராணுவச் சட்டத்துக்கு எதிரானது. கடற்படைத் தலைமையகத்தின் எழுத்துமூல அனுமதியைப் பெறாமல், பல்வேறு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டதாக இவர் மீது மற்றொரு குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புரிமை கடற்படைத் தளபதி ஒருவருக்குக் கூடக் கிடையாது. உயரதிகாரிகளின் அனுமதியைப் பெறாமல் இவ்வாறு 30 தடவைகளுக்கு மேல் வெளிநாடு சென்றுள்ளார்.

இராணுவ நீதிமன்ற விசாரணையில் லெப்.யோசித ராஜ பக்ச குற்றவாளியாகக் காணப்பட்டால், இராணுவச் சட்டங்களுக்கு அமைவாகக் கடுமையான தண்டனைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(த-5)

## சுன்னாகம்

லிருந்து வெளியேற்றப்பட்ட கழிவு ஒயில் கிணற்றுக் குடி தண்ணீருடன் கலந்தமையினால், அந்தப் பகுதியில் குடி தண்ணீரைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் கடந்த ஆண்டு ஆரம்பத்தில் பல்வேறு போராட்டங் கள் நடத்தப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக வடக்கு மாகாண சபையினால் நிபுணர் குழு நியமிக்கப்பட்டது. அந்த நிபு ணர் குழு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தனது அறிக் கையை வெளியிட்டது. அதில், சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் பார உலோகங்கள் - கிறிஸ் - எண் ணெய் என்பன அனுமதிக்கப்பட்ட அளவை விட குறைவாகவே உள்ளன என்று தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே அமைச்சர் ஹக்கீம், சுன்னாகம் பிரதேசக் கிணற்று நீர் பாவனைக்கு உகந்தது அல்ல என்றும், அதனை மறுத்து வெளியிடப்பட்ட அறிக் ்கைகளையும் நிராகரித்துள்ளார்.

"சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீர் மாசடைவு விவகா ரம் துரதிஸ்டவசமாக, தேவையற்ற முறையில் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும். உண்மையில், சுன்னாகத்தை சூழவிருக்கின்ற 2 கிலோ மீற்றர் பரப்பளவிலான பிரதேசத்தில் குறிப்பிட்டளவு கசிவு ஏற்பட்டிருக்கின்ற கிணறுகளிலிருந்து குடிதண்ணீர் பாவனைக்கு உகந்ததல்ல என்பதை நாங்கள் திட்டவட்டமாக அடையாளம் கண்டியிருக்கின்றோம்" என்று ஹக் கீம் தெரிவித்துள்ளார்.

ஆனால், அதனை மறுத்துரைத்து பல அறிக்கைகள் சில தரப்புக்க்ளினால் வெளியிடப்பட் டிருந்தன. அவை அனைத்தையும் எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், நாங்கள் ஈற்றிலே பாவ னையாளர்களுக்கு பொறுப் புக் கூற வேண்டியவர்கள் என்ற அடிப்படையில்; அந்தந்தக் கிணறுகளை அடையாளப்படுத்திப் பல கிணறுகளிலிருந்து நீர் மாதிரிகளைப் பரி சோதனைக்கு உட்படுத்தினோம். பரிசோதனையின் பின் னர் அந்தக் கிணறுகளை பாவணைக்குட்படுத்த வேண்டாமென மக்களை நாங்கள் அறிவுறுத்தியிருக்கின்றோம்.

அதன் பிரகாரம் எங்களுடைய செலவில் நீர்த்தாங்கிகள் (பவுஸர்) மூலம் நீரை விநியோகித்து வருகின்றோம். இத னால் எமது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டாலும் கூட அதை பொருட்படுத்தாது நாம் மக்களுக்காக இந்தச் சேவையை வழங்குகின்றோம் என்றும் ஹக்கீம் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

## ஆசிய

விக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற் றுப் பணிப்பாளர் வொன் மொக் சோய் இற்கும் இடையில் நடந்த பேச்சுக்களின்போதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள், குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள், நீர்ப் பாசனம் மற்றும் சிறிய - நடுத்தர வர்த்தகம் ஆகியவற்றுக்கே இந்த நிதியுதவி பயன்படுத்தப்படவுள்ளது.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவிகளை வழங்கி வருகிறது. எனினும், 2017 ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள, ஒரு பில்லியன் டொலரே இலங்கை பெற்றுக் கொள்கின்ற அதிகபட்ச நிதியுதவியாகும்.

இதுவரை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆண்டு தோறும் 500 தொடக்கம் 700 மில்லியன் டொலரை மாத்திரமே வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது. (த-5)

## சிக்கா

லத்தீன் அமெரிக்கா வலயத்தின் பிரேசில், கொலம்பியா உள்ளிட்ட 28 நாடுகளில் இந்த வைரஸ் தொற்று பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

டெங்கு காய்ச்சலை பரப்பும் நுளம்பினால் சிக்கா வைரஸ் பரவுவதாக மருத்துவ வல்லுனர் ஆனந்த அமரசிங்க குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக டெங்கு காய்ச்சலுக்கான குணங்குறிகள் சிக்கா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு காணப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

காய்ச்சல், எலும்பு மற்றும் மூட்டு வலி என்பன காணப்படுமாயின் உடனடியாக வைத்திய உதவியை பெறுமாறும் சுட்டிக் காட்டியுள்ள விசேட மருத்துவ வல்லுனர் ஆனந்த அமரசிங்க, கர்ப்பிணிகளுக்கு இந்த வைரஸ் தொற்றுமாயின் கருவிலுள்ள குழந்தையின் வளர்சிக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிக்கா வைரஸ் தாக்கமானது கருவிலுள்ள குழந்தைகளின் மூளையை தாக்குவதுடன் சாவினை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கு வரும் பயணிகள் சிக்கா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளார்களா என்பது தொடர்பில் கண்டறிவதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ள, கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், குறித்த வைரஸ் தொடர்பில் எந்த அச்சுறுத்தலும் ஏற்படவில்லை என சுகாதார அமைச்சர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்குள் வருபவர்களை பரிசோதிக்க உறுதியான கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருபவர்கள் அவதானிக்கப்படுகின்றனர். எனவும் சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-வ)

# பணப் பரிசுகளை அள்ளி வழங்கும் மொபிடெல்

தேசிய கையடக்கத் தொலைப்பேசி சேவை வழங்குநரான எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனமானது உடனடிப் பரிசுகளை அள்ளிவழங்கும்மாபெரும்பரிசளிப்புத் திட்டமான காஸ் பொனான்ஸாவை புதிய மெருகுடன் இவ் வருடமும் நடத்தவுள்ளது. இம்முறை தமது வாடிக்கையாளர் களுக்கென ரூ3500 இலட்சம் பணப் பெறுமதி கொண்ட பரிசுகளை




வழங்கவுள்ளதுடன் இலங்கை வர லாற்றில் கையடக்கத்தொலைப்பேசி நிறுவனமொன்று தமது வாடிக்கையாளர்களுக்கு பகிர்ந்த ளிக்கவுள்ள மிகப் பெரிய பணப் பரிசுத் தொகை யாக இது அமையவுள்ளமை விசேட அம்சமாகும்.

2009ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக் கப்பட்ட இந்தப் பரிசளிப்புத் திட்டமானது 2016 ஆண்டி லும் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எஸ்.எல்.ரி மொபிடெல் நிறுவனமானது 2015 ஆம் ஆண்டு முடிவின்போது ரூ 436 மில்லியன் பெறுமதியான பணப் பரிசுகளை சுமார் 829,550 தமது வாடிக்கையாளர்களிடையே பகிர்ந்தளித்திருந்தது.

மாபெரும் பரிசிழுப்புத் திட்டமான காஸ் பொனான்ஸா மூலம் மொபிடெல் நிறுவனமானது 2015ம் ஆண்டு 230 மில்லியன் ரூபாவைப் பணப்பரிப்பரிசாக தமது வாடிக்கையாளர்களிடையே அள்ளி வழங்கி இருந்த துடன், 2016ம் ஆண்டு தமது வாடிக்கையாளர்களின்

வணிகம்

வெற்றி வாய்ப்புகளை மேலும் அதிகரிக்கும் பொருட்டு அதன் மொத்த பரிசுத் தொகையை ரூபா 350 மில்லியனாக அதிகரித்துள்ளது.

அதனடிப்படையில் இம்முறை காஸ் பொனான்ஸா பரிசளிப்பு திட்டத்தின் மூலம் நாளாந்தம் மற்றும் மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் 675,262 மொபிடெல் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிசுகளை வழங்க எதிர்பார்த்துள்ளது. அத்துடன் மாதாந்தம் தெரிவு செய் யப்படும் மாபெரும் வெற்றி யாளருக்கு ரூபா 15 மில்லியன் பெறுமதியான மிட்சு பிசி மொன்டெரோ எஸ்.யு.வி. ரக மோட்டார் வண்டிகள் 12 இனை மாதந்தோறும் 12 வெற்றியாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

காஸ் பொனான்ஸா வெற்றியாளர் தெரிவுக்காக மொபிடெல் முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு மற்றும் புரோட்பான்ட் வாடிக்கையாளர்கள் தகுதி பெறுவதுடன், வருடம் முழுவதும் உடனடிப் பரிசுகளாக ரூபாய் 500 வரை பணப் பரிசுகளை வெற்றியீட்டுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள துடன், நாளாந்தம் இடம்பெறும் இந்தச் சீட்டிழுப்பில் 675, 250 வாடிக்கையாளர்கள் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு 50 ரூபாய் பெறுமதியான ரீலோட், ரீசார்ஜ் அல்லது கட்டணப் பட்டியல் செலுத்தும் சகல வாடிக் கையாளர்களுக்கும் சீட்டிழுப்பில் கலந்து கொண்டு வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமாககிட்டவுள்ளது.

நாளாந்தம் மேற்கொள்ளப்படும் உடனடி சீட்டிழுப்புகளில் வெற்றி பெறும் முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு வெற்றி பெற்ற தொகைக்கு சமமான பேசும் காலம் இலவசமாக வழங்கப்படுவ துடன், பிற்கொடுப்பனவுவாடிக்கையாளர்களுக்கு அவர்கள் வெற்றியீட்டிய தொகை அவர்களது கட்டணப்பட்டியலின் மொத்த தொகையிலிருந்து கழிக்கப்படும்.

காஸ்றியாளர்கள் தொடர்பான விவரங்கள், மொபிடெல்வாடிக்கையாளர் சேவை இலக்கமான 0712755777 மற்றும் தபால் மூலமாக மட்டுமே வெற்றியாளர்களுக்கு அறியத்தரப்படும். இதன்போது, வாடிக்கையாளர்கள் வெற்றியீட்டிய பரிசுகளுக்காக எவ்விதமான மேலதிகக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (கு)

# மைக்ரோ சொப்ட் உடன் ஒப்பந்தம் கைச்சாத்து

இலங்கையுடன் தொழில்நுட்ப ஒப்பந்தத்தை மேற்கொள்ள தாம் எதிர்பார்ப்பதாக மைக்ரோ சொப்ட் நிறுவனத் தலைவர் ஜோன் பிலிப் கோவிஷ் பிரத்மர் ரணில் விக்கிர மசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஊடாக இலங் கையின் முன்னேற்றத்துக்காகப் புதிய தொழில் நுட்பம் அறிமுகம் செய்யப்படும். தகவல் தொழில்நுட் பம், கல்வி, சமூகப்பாதுகாப்புத் துறை டிஜிற்றல் மயப்படுத்தலுக் காக பூரண ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜோன் பிலிப் மேலும் தெரிவித்தார். இவ் விடயங்கள் தொடர் பாக காரணங் களை மேற்பார்வை செய்ய மைக்ரோசொப்ட் நிறுவனம் விரைவில் நிபுணர் குழுவை இலங் கைக்கு அனுப்பும்.

குறிப்பாக கல்வி, நிதி, சுகாதாரத் துறைகளை முறையாகவும் நன்மை பயப்பதாகவும் மேற்கொள்ள இந்தத் தொடர்புகளைப் பயன் படுத்தலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் புதிய தொழில்நுட்பங்களை இலவசமாக




இலங்கைக்கு வழங்கும் அவகாசம் தொடர்பாக ஆராய இணக்கம் காணப்பட்டது. அமைச்சர் மலிக் சமர விக் ரம, மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மஹேந்திரன், பிரத மரின் செயலர் சமன் ஏக்க நாயக்க, சுவிட்சர் லாந்திலுள்ள இலங்கைத் தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்ஹ, பிரதமரின் மேலதிக செய லர் சமன் அதா வுதஹெட்டி, பிரத மரின் விசேட உதவியாளர் சென்ட்ராபெரேரா ஆகியோரும் கலந்து கொண்டனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாத்

பெறுதல் முதலான விடயங்கள் தொடர்பாக நாட்டில் தற்போது சர்ச்சைக்குரிய நிலைமை தோற்றம் பெற்றுள்ள நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றம் இலங்கையில் நிறுவப்படவுள்ளதாகவும் இதனூடாக இராணுவத்தினர் தண்டிக்கப்படவுள்ளதாகவும் மகிந்த ஆதரவு தரப்பினர் குற்றஞ் சாட்டிவருகின்றனர்.

இந்நிலையில், ஜெனிவாத் தீர்மானத்துக்கமைய பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பைப் பெறவே இந்தத் தீர்மானத்தின் மூலம் உடன்பட்டுளோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச நீதிமன்றமொன்றுக்கு நாம் உடன்படவில்லை என்று ஜனாதிபதியும், பிரதமரும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இருப்பினும், இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றமையால் இதை முடிவுக்குக் கொண்டுவர இது குறித்த அடுத்த நடவடிக்கைகளை முன்னெடுக்க ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

ஐ.நா. மற்றும் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள நிலையில், அவற்றின் ஆதரவைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்வதற்காக, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் விடயத்தில் நம்பகத்தன்மையுடன் செயற்படுவது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

(து-சி)

## தமிழ்

னந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தியகடுவாவே சோமானந்த தேரர் மற்றும் அருட்தந்தை சக்திவேல் தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்காக மகஸின் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்றனர். இதன் பின்னர் மனித உரிமை ஆணைக் குழுவுக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான மனுவொன்றையும் கையளித்துள்ளனர்.

குறித்தமனுவில்எந்தவிசாரணையுமின்றி - தண்டனை யுமின்றி பல வருடங்களாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது பற்றியும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வலியுறுத்தப்படுவது பற்றியும் கூறப்பட்டுள்ளது.

கைதிகள் தொடர்பில் தியகடுவாவே சோமானந்த தேரர் கருத்து வெளியிடுகையில், பல வருடங்களாக அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் புனர்வாழ்வு அல்லது விடுதலையை அரசு வழங்கவேண்டும். அனைவரும் எமது நாட்டு மக்கள். இவர்களின் விடுதலையை வலியுறுத்தியே இன்று நாம் மனித உரிமை ஆணைக் குழுவுக்குப் பிரசன்னமாகிக் குறித்த மனுவையும் கையளித்துள்ளோம் - என்றார்.

(த-5)

மரண அறிவித்தல்கள்

### கந்தையா தனிப்புலிசிங்கமுதலியார்



காரைநகர் பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா தனிப்புலிசிங்கமுதலியார் நேற்று (28.01.2016) வியாழக்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 437 4244

தகவல்: குடும்பத்தினர்.

### பராக்கிரமராஜா சிவசூரியர் J.P

(சூரி மாஸ்ரர் - சங்கானை)



சங்கானை, பிரதான வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பராக்கிரமராஜா சிவசூரியர் நேற்று (28.01.2016) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் குணதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் அஜித்சந்திரன், சிவஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/2, பிரதான வீதி,
சங்கானை கிழக்கு
021 3735 816

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

திருமதி
### பாலயோகினி (பாலமணி) நாகரெத்தினம்



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி, கொக்குவிலை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாலயோகினி (பாலமணி) நாகரெத்தினம் நேற்று (28.01.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரெத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் வதனா, வசந்தன் காலஞ்சென்ற சாந்தனா மற்றும் காஞ்சனா, சோபனா ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகாலிங்கம், சுதா, விமலன், பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் நவரத்தினம், இராசரெத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், தங்கம்மா, கதிரேசு மற்றும் மகேஸ்வரி, நீலாம்பிகை ஆகியோரின் மைத்துனியும் மதுஷாந், காலஞ்சென்ற நிவேதன் மற்றும் யுகேதன், கவினயா, நிதர்சனா, நிவேதிகா, அஜய், அவிசானுஹா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் மாசிலாமணி

(2ஆம் வட்டாரம் மண்டைதீவு)



2ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் மாசிலாமணி நேற்று (28.01.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - சிவகங்கை தம்பதியரின்அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குணரெத்தினம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சற்குணபாலதேவியயின் பாசமிகு கணவரும் வவி, நிதி, மதி, சுதன், கண்ணன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் சுகந்தி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நித்தியரெத்தினம் மற்றும் நடேசமூர்த்தி, நடனசபாபதி, காலஞ்சென்ற அருந்ததி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சலதரங்கம், சிறீமதி, சிவகுலசிங்கம்(ஓய்வு நிலை கிராம உத்தியோகத்தர்), தெய்வீகராணி, காலஞ்சென்றவர்களான சீவரெத்தினம், சின்னம்மா மற்றும் தவக்கொழுந்து ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறீலிங்கம், திருலிங்க நாதன் ஆகியோரின் மாமனாரும் தீபநாத், ஹரீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம், அம்மன் கோயிலடி, மண்டைதீவு.
077 5245 568,
077 3720 603

தகவல்: குடும்பத்தினர்.

### சி. கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வதிவடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் 27.01.2016 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னவர் - சிவகாமி தம்பதியரின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற நாகலிங்கம் - ஆச்சிமுத்து தம்பதியினரின் அருமை மருமகனும் காலஞ்சென்ற இராஜமணியின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னாச்சிப்பிள்ளை, வேலாயுதம், வள்ளியாச்சி மற்றும் நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வனஜாம்பாள் மற்றும் புவனேந்திரன் (அப்பன் - Heilbron,ஜேர்மனி), விக்கினேஸ்வரி, விநாயகஜோதி (ஜோதி-கனடா), விநாயகேந்திரன்(செல்வம் -கனடா), காலஞ்சென்ற கயேந்திரன் சசிலேகா (அறிவகம் தமிழ்ப்பாடசாலை 1025 அதிபர் - கனடா), Dr.யோகேந்திரன் (கண்ணன் - கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஸ்ணுமூர்த்தி, யோகறாஜா (கனடா), குலேந்திரன் (இலங்கை), மனோரஞ்சிதம் (ஜேர்மனி), துஷியந்தி, கஜவதனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமாவும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, முருகையா ஆகியோரது மைத்துனரும் சுஜிதன், சுரேக்கா (கனடா), ஜனார்த்தன், கயவதனா, கயானா (ஜேர்மனி), மதுமிதன், கயாணி, கிதுர்ஜன், நிவேகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் பிற்பகல் 5.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.
0094213002322
(647) 498 7598

தகவல்: பிள்ளைகள்.

மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்கள் சண்முகதாஸ சர்மா

குடியிருப்பு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும்,கொழும்பை வதிவிடமாகவும், தற்போது சிட்னிநகர், ஆஸ்திரேலியாவில் வசித்தவருமாகிய பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்கள் சண்முகதாஸ சர்மா நேற்று(28.01.2016) வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் சிட்னி ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஸ்ரீ சுப்பையாக் குருக்கள் - கமலாம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான காரைநகர் மணற்காடு அம்மன் கோயில் பிரதம சிவாச்சாரியார் நாகமுத்து ஐயர் - இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், சுசீலாவின் அன்புக் கணவரும், சுதாகர் (ஜேர்மனி), சங்கர் (பாபு - ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராஜராஜேஸ்வரி, லலிதாம்பாள் மற்றும் பரமேஸ்வரா (இராமச்சந்திரன்), ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை சிட்னி ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

S.Shankar (Babu)
No.1,Cliffon Place,
Cherry brook,NSW 2126,Australia.

(68406)
(11,15,18)

தகவல்: சகோதரர்கள்
சு.பரமேஸ்வரா (உடுவில்)
சு.ஸ்ரீதரன் (கோண்டாவில்)

T.P: 612 867 79475, Mobile :614 021 07514

### காசிநாதர் தெய்வேந்திரம்

(கருங்காலி, காரைநகர்)



கருங்காலி, காரை நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் தெய்வேந்திரம் 28.01.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர்- சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காசிநாதர் - ஆச்சிமுத்து தம்பதியரின் பெறாமகனும், காலஞ்சென்ற சண்முகநாதன், மயில்வாகனம், கணேசபிள்ளை, இராசேஸ்வரி, சறோஜினிதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீலகிரி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(68418)
(11,15,18)

தகவல்: குடும்பத்தினர்.
கா.கணேசபிள்ளை குடும்பத்தினர்.

தொடர்பு:- 077 036 6576

### சிவசம்பு உமாகரன்



நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சிவராசா அவனியு, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு உமாகரன் 27.01.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், Dr.திருநாவுக்கரசு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், செம்மனச் செல்வியின்(ஆசிரியை - யா/ இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், தங்கீர்த்தனன், மேனாளனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(68409)
(11,15,18)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில்
கிராம அலுவலராக கடமையாற்றிய
செல்வி ருபலக்கி நல்லையா
அவர்களின் திடீர்மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரதேச செயலாளரும், சகல நலன்புரி சங்க அங்கத்தவர்களும்.
நலன்புரிசங்கம் பிரதேச செயலகம்
தெல்லிப்பழை

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி செம்மனச்செல்வி
உமாகரன் அவர்களின் அன்புக் கணவர்
சிவசம்பு உமாகரன்
அவர்களின் மறைவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும்
பிரார்த்திக்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்,
யா/இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(சி/28953)
(11,15,18)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி யூட்வதனி
மனோகரன் அவர்களின் அன்புத் தந்தையார்
செலான்ரோ மரியதாசன்
அவர்கள் கர்த்தருக்குள் நித்திரை
அடைந்துள்ளமையால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
கல்லூரிச் சமூகம்,
யா/ இந்துமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(சி/28954)
(11,15,18)



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம
அலு வலராகக் கடமையாற்றும்
செல்வி நல்லையா ருபலக்கி
அவர்கள் 2016.01.28 வியாழக்கிழமை
காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த மனவேதனை
யடைவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரிசங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.

## கண்ணீர் அஞ்சலி



வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சியில் ஆசிரிய ஆலோசகராக
கடமையாற்றும் திரு. கு. கோகுலன்
அவர்களின் அன்புத் தாயார்
பிள்ளையம்மா குலவீரசிங்கம்
அவர்கள் 26.01.2016 காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரி சங்கம், வலயக்கல்வி
அலுவலகம், கிளிநொச்சி.


## தமிழரின்

நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

இந்திய ஆங்கில ஊடகமான இந்து நாளிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆலோசனை வழங்கும் நாடாளுமன்றக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண அந்தச் செவ்வியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து தேசிய அரசை அமைத்துள்ளது. அத்துடன், பல்வேறு இனங்களின் ஆதரவைக் கொண்ட கட்சிகளும் அரசுக்கு ஆதரவு வழங்குகின்றன.

எனவே அரசமைப்பு மாற்றத்துக்குக் கிடைத்துள்ள பொன்னான சந்தர்ப்பம் தவறவிடக் கூடாது. எமது சொந்த அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் எந்த ஒரு கட்சிக்கும் மூன்றில் இரண்டு பெருன்பான்மை இல்லை. எனவே புதிய அரசமைப்பில் சமரசம் மற்றும் ஒருமித்த கருத்து இருக்கவேண்டும்.

குறித்த புதிய அரசமைப்பை ஆறு மாத காலத்துக்குள் நிறைவு செய்ய வேண்டும். ஏனெனில் 1978ஆம் ஆண்டு முதல் அரசமைப்பு மாற்றம் தொடர்பில் கலந்துரையாடி வருவதாலும் முன்னர் பல கூட்டணிகள் நீண்டகாலம் நீடிக்காமலும் போனமையைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஜனநாயக அரசமைப்பாக வரைய வேண்டும். அதாவது, அனைத்தையும் உள்ளடக்கியதாக அரசமைப்பு இருக்கவேண்டும். இலங்கை பல்லின சமூகங்கள் வாழும் நாடு. அத்துடன், இனக் குழுக்கள் மற்றும் சிறு கட்சிகளை நாம் கொண்டுள்ளோம். இது போன்ற சிறிய அரசியல் கட்சி ஊடாகவே அரசியலுக்கு நான் வந்தேன். அரசின் செயற்பாடுகளுக்குள் அவர்களும் இணைக்கப்படவேண்டும்.

நாம் நாடாளுமன்றுக்கு அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படுவதையே வலியுறுத்துகின்றோம். அத்துடன், ஜனாதிபதிக்கும் சில அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

தேசிய கொள்கை அமைப்பது என்ற போர்வையில் 13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டன. அந்த நிலையை நாம் தடுக்க வேண்டும். மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து தெளிவாக இனங்காணப்பட வேண்டும்.

அத்துடன், கல்வி, விவசாயம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை பகிர்ந்தளிப்பதில் தவறில்லை என நான் நினைக்கின்றேன். இவ்வாறான நிலையில் சகல மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். அதிகாரங்களைப் பகிர்வதன் அடிப்படையில் தேசிய கொள்கைகளை அமைப்பதில் எதுவித தவறும் இல்லை.

அதிகாரப் பகிர்வு என்பது மாகாண சபைகளுக்கு மாத்திரமன்றி அதன் கீழும் உள்ளூராட்சிச் சபைகளுக்கும் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்பதே இடதுசாரியைச் சேர்ந்த எமது நிலைப்பாடு. மத்திய அரசு, உள்ளூராட்சிச் சபைகள் ஊடான எந்தத் தொடர்பையும் மாகாண சபைகள் ஊடாகவே மேற்கொள்ளவேண்டும்.

நாட்டில் ஒற்றையாட்சி சமஷ்டி என்ற லேபல்கள் அவசியமில்லை. அதிகாரப் பகிர்வு என்பது நாட்டைப் பிரித்துவிடும் என்ற அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இதனாலேயே பெரும்பான்மையானவர்கள் ஒற்றையாட்சி என்ற பதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றனர்.

அத்துடன், தம்மிடம் உள்ளவையும் நாளை இல்லாமல் போகலாம் என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. எனவே, தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

பிரிவினைவாதப் போக்கிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான கட்டமைப்பை ஏற்படுத்தவேண்டும். பெரும்பான்மை இனத்தவர்கள் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் அரசமைப்பு மாற்றம் செய்யப்படவேண்டும்.

சகல மாகாண சபைகளினது இணக்கத்தையும், மாகாணங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்வதோடு, நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்ள முடியும்.

சிறுபான்மை இனத்தவர் ஒருவர் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ வருவதற்கு அனுமதியளிக்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமாகவிருந்தால் அது ஜனநாயகமாகவிருக்கும். மக்களால் தெரிவு செய்யப்படல் அல்லது அரசமைப்பின் கட்டாயஏற்பாடுகள்மூலம்பிரதமரையோ அல்லது ஜனாதிபதியையோ எந்த இனத்திலும்தெரிவுசெய்யும்போது அது பிரச்சினையாக அமையாது.

-என்றார். (த-வ-5)

## யாழ்.

சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீர் வளம் பாதிக்கப்பட்டுள்ளதனால், இரணைமடுக் குளத்திலிருந்து குடாநாட்டுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ள கடந்த 2004 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டம் என்ற பெயரில் இந்த நடவடிக்கை முழுவீச்சாக முன்னெடுக்கப்பட்டது. வடக்கு மாகாண சபைத் தேர்தலின் - 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தின் - பின்னர், குறித்த திட்டத்திற்கு கிளிநொச்சி இரணைமடுக் குளத்து விவசாயிகள் மற்றும் சில அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் திட்டம் கைவிடப்பட்டது. இதன் பின்னர், மூன்று கட்டங்களாகத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது. இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டை உயர்த்துதல், யாழ்.நகர் கழிவு முகாமைத்துவம், கடல் நீரை நன்னீராக்குதல் என்று மூன்று கட்டங்களாகத் திட்டத்தை முன்னெடுக்க வடக்கு மாகாண சபையினால் முன்மொழிவு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலேயே, அமைச்சர் ஹக்கீம் இரணைமடுக் குளத்திலிருந்தான யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டமே யாழ்ப்பாணக் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு என்று குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவிக்கையில், சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு மாற்று நடவடிக்கையாக கடல் நீரைச் சுத்திகரித்து வழங்கலாம் என்ற திட்டமொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக 25 மில்லியன் செலவில் முன்னெடுக்கப்படவுள்ளது. உவர் நீரைக் குடிதண்ணீராக மாற்றியமைக்கும் போது பாவனையாளர்களின் குடிதண்ணீருக்கான கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியிருக்கின்றோம். குறிப்பாக ஏரிகளில் காணப்படும் நீரின் உவர்த் தன்மை குறைவாக இருப்பதனால் அணைகளைக் கட்டி அதனை சுத்திகரித்து குடிதண்ணீருக்கும் விவசாயத்துக்கும் பயன்படுத்தலாம் என்று திட்டமிட்டுள்ளோம்.

அதைவிட இலகுவானது இரணைமடுக் குளத்திலிருந்து குடிதண்ணீரை கொண்டு செல்லும் திட்டம். ஆனால் இந்தத் திட்டம் தொடர்பில் கிளிநொச்சி விவசாயிகள் மத்தியில் இனம்புரியாத பீதியை ஏற்படுத்திவிட்டார்கள். இப்பீதியை நிவர்த்தி செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் விவசாயிகளுடனான சந்திப்பொன்றையும் செய்யவுள்ளோம். அதன் முதற் கட்டமாக இரணைமடுக் குளத்தை 2 அங்குலத்தால் உயர்த்துவதற்கான 18 மில்லியன் டொலர் செலவிலான செயற்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே விவசாயிகள் அச்சப்பட வேண்டிய தேவையே இல்லை என்பதை உறுதியாக தெரிவித்துக் கொள்கின்றேன். இதற்காக தமிழ் அரசியல்தலைமைகளுக்குவேண்டுகோளை முன்வைக்கின்றேன். அவர்களுடன் இணைந்தே இந்தத் திட்டத்திற்கான பேச்சு முன்னெடுக்க வேண்டியுள்ளது - என்றார். (கு-5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பேதுரு
ஆசீர்வாதம்



தோற்றம்
02.05.1941



மறைவு
29.01.2015

மனித வாழ்க்கை சுருக்கமானதாகவும் சக்தியற்றதாகும் இரவை ஊடுருவிச் செல்லும் நீண்ட பயணமாகும் எல்லாம் வல்ல மரணத்தின் உத்தரவுகளால் பிடிபட்டுப் போகிறார்கள் அவன் மீதும் அவன் இனத்தின் மீதெல்லாம் மெதுவாக இரக்கமின்றி இருளாகவும் வந்து சேருகிறது. பூமியில் வாழும் போது நான் ஓர் ஆத்மா பிரசாசித்துக் கொண்டு இருக்கிற பளுவற்ற பாரமற்ற இலேசான ஆத்மா எத்தனையோ ஆண்டுகள் வாழ்ந்து பூமியிலே மாண்ட. பூத. பிரேத ஆத்மாக்களுக்கு அன்பும். அமைதியும். ஆனந்தமும். மகிழ்சியும் உண்டாக.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.
ஆச்சிரம வீதி,
இணுவில் வடகிழக்கு,
இணுவில்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
20 . 07 . 1964



மறைவு
30 . 12 . 2015



பிரபாகரன்
நகுலேஸ்வரி (ராணி)
திதி: பஞ்சமி

கடந்த 30.12.2015 சிவபதமடைந்த எமது குடும்ப குல விளக்கின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் மரணச் செய்திகேட்டு பல வழிகளிலும் யாழ்.போதனா வைத்தியசாலை தொடக்கம் இன்று வரை தோளோடு தோள் நின்று ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருப்போருக்கும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி போஸ்ரர்கள், மலர் வளையங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் என்றென்றும் நன்றியுடையவராகின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

குடும்பத்தினர்.
077 8020 990


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமற்

வரும், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவருமான அருட்தந்தை செபமாலை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 4 ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கை அரசின் தேசிய சுதந்திர தின நிகழ்வை நாங்கள் முற்றாகப் புறக்கணிப்புச் செய்யவுள்ளோம்.

காணாமற்போனவர்களில்அதிகமானவர்களை உயிரிழந்தவர்களாகவே கருதவேண்டியிருக்கின்றது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தேசிய தைப்பொங்கல் விழாவில் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவிக்கின்றோம். கொழும்பு அரசின் சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, காணாமற் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தை எதிர்க்கின்றோம்.

ஜனாதிபதி ஆணைக்குழுவான பரணகம ஆணைக்குழு தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடங்களுக்கு நீடித்துத் தருமாறு கோரியுள்ளது. அந்தக் கால நீடிப்பை அரசு வழங்கக் கூடாது. இவற்றையே எமது கோரிக்கைகளாக நாம் முன்வைத்துள்ளோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக, காணாமற் போனோர் தொடர்பிலான விவகாரம் கையாளப்பட வேண்டும் – என்றார். (த-5-21-ரி3)

## சிங்க லே

பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது கூட்டணியினரே உள்ளனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிப்படையாகக் கூறினார் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவு அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதன்போது மேலும் கூறியதாவது:

சிங்க லே உள்ளிட்ட இனவாதச்செயற்பாடுகள் குறித்து புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைச்சந்திப்பின் போது கலந்தாலோசிக்கப்பட்டது. இதன் பின்னணியில் யார் செயற்படுகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

இதன் பின்னணியில் மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது சகாக்களே உள்ளனர் என்று ஜனாதிபதி மைத்திரிபால இதன்போது வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்.

கடந்த ஆட்சியின்போது இனவாதிகள் தலைதூக்கியிருந்தனர். இதனைப் பயன்படுத்தியே அந்த அரசு ஆட்சி நடத்தியது.

இந்தக் காரணத்தினாலேயே தற்போது எழுந்திருக்கும் இந்தப் பிரச்சினையின் பின்னணியிலும் கடந்த ஆட்சியாளர்கள் இருப்பார்கள் எனும் சந்தேகம் எமக்குள் எழுந்துள்ளது.

எவ்வாறாயினும் எமது ஆட்சியில் இனவாதிகளுக்கும், இனவாதச்செயற்பாடுகளுக்கும் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றார். (த-சி)

## காணாமற்போனோர்

கூறலின் பூகோள சவால்கள் தொடர்பாக, ஐ.நா பாதுகாப்புச் சபையின் முறைசாராக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது. ஐ.நா.வுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர், இலங்கைக்கான தனது பயணம் குறித்தும் இலங்கையில் காணாமற்போனோர் விவகாரம் தொடர்பாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

பெருமளவில் காணாமற்போதல்களால் பாதிக்கப்பட்ட இரண்டு நாடுகளான இலங்கைக்கும், மெக்சிக்கோவுக்கும் தாம் அண்மைய மாதங்களில் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததாக சமந்தா பவர் குறிப்பிட்டார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தாய் ஒருவரை சந்தித்தபோது, 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 வயதுடைய தனது மகள் இராணுவச் சீருடையணிந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டமை எவ்வாறு என்று விவரித்திருந்தார். அவர் தடுக்கச் சென்றபோது தாக்கப்பட்டார். அதற்குப் பின்னர் அவரது மகள் திரும்பி வரவில்லை. கடந்த ஆறு ஆண்டுகளாக அவர் ஒவ்வொரு நாளையும் தனது மகளைத் தேடுவதிலேயே செலவிட்டுக் கொண் டிருக்கிறார் என்றும் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு, காணாமற்போனமை தொடர்பான சான்றிதழை வழங்க வழி செய்யும் சட்டத்தை மைத்திரிபால சிறிசேன அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியிருப்பதாகவும் சமந்தா பவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை, மெக்சிக்கோ போன்ற நாடுகளில் இதுபோன்ற நடவடிக்கைகள் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

## சர்வதேச

அதிகாரம் உயர்நீதி மன்றத்துக்கே இருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பொலிஸார் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட விடயங்களை அவர் குறிப்பிட்டார்.

பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சிச் சேவைக்குத் தாம் வழங்கியிருந்த பேட்டியில் சர்வதேச விசாரணையை நிராகரிக்க முடியாது என்று கூறியிருப்பதாக ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருப்பதாகவும், எனினும், தாம் அப்படி எதுவும் கூறவில்லை என்றும் பிரதமர் ரணில் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜெனிவாத்தீர்மானத்துக்கு உடன்படுகின்றோம் என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளினதும் சட்டத்தரணிகளினதும் ஒத்துழைப்புக்களைப் பெறவும், அவர்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளவும்தான் நாம் தீர்மானத்தின் மூலம் உடன் பட்டிருக்கின்றோம்.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச நீதிமன்றமொன்றுக்கு நாம் உடன்படவில்லை. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கான ரோம் உடன்படிக்கையில் கூட நாம் கைச்சாத்திடவில்லை.

விசாரணைகள் எமது அரசமைப்புக்கமைய எமது நீதி மற்றும் கட்டமைப்புக்கு உட்பட்டுதான் நடைபெறும். இந்த விசாரணைகளில் பிரசன்னமாகவேண்டியவர்கள் யார் என்பது உயர் நீதிமன்றத்தால்தான் தீர்மானிக்கப்பட வேண்டும். அந்தவகையில் இலங்கைப் பிரஜைகள்தான் உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்படுவார்கள். அதற்கு அப்பால் வெளிநாட்டவர்கள் எவரேனும் விசாரணைகளில் முன்னிலையாவதென்றால் அதற்கு உயர்நீதிமன்றத்திடம் அனுமதி கோர வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட வெளிநாட்டுப் பிரஜை விசாரணை களில் பிரசன்னமாக முடியுமா அல்லது இல்லையா என்பதை உயர்நீதிமன்றம்தான் தீர்மானிக்கும்.

இவ்வாறான நிலையில் உதவி, ஒத்துழைப்புக்களை வழங்குவதில் எந் தத் தவறும் கிடையாது. அது மட்டுமல்லாது, உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு விடயத்திலும் தென்னாபிரிக்காவின் உதவியைப் பெறவேண்டியிருக்கும்.

ஆகவே, இலங்கையில்நிபுணத்துவம் கொண்ட அதிகமானோர் இருக்கும் நிலையில் (வெளிநாடுகளிலிருந்து) இத்தனை பேர் (அதிகமானோர்) தேவை இல்லை என்றுதான் ஜனாதிபதி கூறியிருந்தார்.

அதுமட்டுமல்லாது, இதற்கு முன்னரும்கூட வெளிநாட்டு ஒத்துழைப்புகள் பெறப்பட்டுள்ளன. பரணகம ஆணைக் குழுவுக்கு வெளிநாட்டு ஒத்துழைப்பு பெறப்பட்டது. அப்போது அதுபற்றிப் பெரிதாக பேசியிருக்காத ஊடகங்கள் தற்போது மட்டும் அக்கறை காட்டு வதேன்?– என்றார். (த-சி)

## மரண அறிவித்தல்கள்

### நல்லையா ரூபலக்கி



நல்லையா ரூபலக்கி
(கிராமசேவையாளர் J/186 உடுவில்)

கனகசபை வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நல்லையா ரூபலக்கி நேற்று (28.01.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் சற்குணவதி தம்பதியரின் அன்பு மகளும், வதனரோகினி, வசந்தா, வனயா, வருணா, வாகினி, கிரியா, கஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பஞ்சலிங்கம், கிறேசியன், கோபாலசிங்கம், கிருஸ்ணகுமார், டனீஸ்ரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் ஒரு மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி,
மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
077 936 4476

## மரண அறிவித்தல்கள்

### மாரிமுத்து பாலசுப்பிரமணியம் (பானு)



சூளாம்பதி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், நாமகள் வீதி, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து பாலசுப்பிரமணியம் (பானு) நேற்று (28.01.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் சின்னாச்சி தம்பதியரின் மகனும் அருந்தவராசா, சசிகலா, சந்திரகலா, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அசோக்குமார், விஜிகரன், தனுஷா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சிதம்பரநாதர் கணேசலிங்கம்

(ஓய்வூதியர் நில அளவைத் திணைக்களம்)



வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், வரணி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதர் கணேசலிங்கம் நேற்று (28.01.2016) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரநாதர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்புராசா - ராசலட்சுமி தம்பதியரின் மருமகனும் பஞ்சாதேவியின் பாசமிகு கணவரும் கோபிகா (ஆசிரியர்- கிளி/கிளிநொச்சி ம. கல்லூரி), அனுருத்தன் (இ.மி.சபை - பருத்தித்துறை), மேனகா (யாழ் பல்கலைக் கழக பட்டதாரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பிரதாப் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சஞ்சயன் (முகாமையாளர் - தேசியசேமிப்பு வங்கி - வவுனியா) ஆகியோரின் மாமனாரும் கிஷாவ்னாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற முருகேசு மற்றும் இராசகுலசிங்கம், சரோஜினிதேவி ஆகியோரின் சகோதரனும் ஞானாம்பிகை, கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (28.01.2016) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஐயங்கன்ட் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரணி வடக்கு, வரணி. T.P: 021 205 0865 தகவல்: குடும்பத்தினர்.

### செல்வன் வேலாயுதம் வக்ஷன் (வச்சு)



பிறப்பு: 22.06.1998 இறப்பு: 27.01.2016

செல்வன் வேலாயுதம் வக்ஷன்
(வச்சு)

அச்சுவேலி தெற்கு உலவிக்குளம் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் வக்ஷன் நேற்று முன்தினம் (27.01.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதம்-ஞானதேவி தம்பதியரின் அன்பு மகனும், எழில்வேந்தன், கவிஸ்னா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2016) வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உலவிக்குளம்
பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க வீரர் குலாமுக்கு 20 ஆண்டுகள் தடை

சூதாட்டத்தில் ஈடுபட்டதாக தென்னாபிரிக்க அணியின் வீரரான குலாமுக்கு 20 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குலாம் 2012ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரில் டெல்லி டேர்டெவில்ஸ் அணியில் இடம்பெற்றிருந்தார். இந்நிலையில் இவர் கடந்த ஆண்டு நடந்த உள்ளூர் ரி-20 தொடரில் சூதாட்டத்தில் ஈடுபடுத்த வீரர்களை அணுகியதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. இது குறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நடத்திய விசாரணையில் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதால், கிரிக்கெட் தொடர்பான நடவடிக்கைகளில் பங்கேற்க 20 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)



# சந்தர்போலுக்கு பிரியாவிடை வேண்டும் வலியுறுத்துகிறார் மே.தீவுகளின் லாரா

பிரியாவிடை உரையை நிகழ்த்தாமல் சந்தர்போலை வழியனுப்புவதென்பது உலக கிரிக்கெட்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு கறுப்புப் புள்ளியைக் கொண்டு வரும் என்றும் மேற்கிந்தியத் தீவுகள் விளையாடவுள்ள அடுத்த தொடரில் அவருக்கான பிரியாவிடை ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார் தீவுகளின் முன்னாள் வீரரான லாரா.



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக சுமார் 20 வருடங்கள் விளையாடியவர் சந்தர்போல். இவர் 164 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி 30 சதங்களுடன் 11ஆயிரத்து 867 ஓட்டங்களைக் குவித்துள்ளார். தீவுகள் சார்பாக அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் லாரா முதலிடத்தில் உள்ளார். அவர் 11ஆயிரத்து 953 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவரின் சாதனையை முறியடிக்க 86 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில் சந்தர்போல் அணியில் இருந்து ஓரங் கட்டப்பட்டார். அதன் பிறகு அணியில் அவருக்கு இடம்கொடுக்கப்படாத நிலையில் விரக்தியில் இருந்த சந்தர்போல், சில நாள்களுக்கு முன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார்.

இந்தநிலையில், சந்தர்போல் தொடர்பாக லாரா கருத்துத் தெரிவிக்கையில் , சந்தர்போலை இன்னும் சில ஆட்டங்களுக்காக அனுமதிக்காதது மிகவும் ஏமாற்றமாக இருக்கிறது. அவர் நாட்டுக்கு மிகப்பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். முறைப்படி பிரியாவிடை கொடுக்க அவர் முழுவதும் தகுதியானவர். அவர் செய்த உதவிக்கு பதிலுதவி செய்ய மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முன்வராதமை ஏமாற்றமே. இதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சந்தர்போல் விடயம் தீவுகளுக்கு உலகக் கிரிக்கெட்டில் கறுப்புப்புள்ளியை கொண்டுவந்துவிடும். தீவுகளின் அடுத்த தொடரில் அவருக்கான பிரியாவிடை நிகழ்வை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். இதே கருத்தை கிளைவ் லாயிடும் வலியுறுத்தியுள்ளார். (ம)

# நகருக்கு குறுக்கான ஓட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 29

42ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான நகருக்கு குறுக்கான ஓட்டத்தில் யாழ்.மாவட்ட மட்ட ஓட்டம் நாளை மறுதினம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஆண்களுக்கான ஓட்டம் 12 கிலோ மீற்றர் தூரம் உடையதாகவும், பெண்களுக்கான ஓட்டம் 8 கிலோ மீற்றர் தூரம் உடையதாகவும் இடம் பெறவுள்ளன. குறித்த போட்டியில் ஆண்கள் பிரிவில் 10 பேரும் பெண்கள் பிரிவில் 6 பேரும் பங்கு பற்றமுடியும் எனவும். பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்களது பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர்களிடம் தொடர்பு கொள்ளுமாறும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே.விஜிதரன் தெரிவித்துள்ளார். (ம-23)

# இறுதியில் மோகனதாஸ்

யாழ்ப்பாணம், ஜன. 29

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் மட்டுவில் மோகனதாஸ் அணி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணி மோதிக் கொண்டது. இதில் மட்டுவில் மோகனதாஸ் அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

# இந்தியா - ஆஸ்திரேலியா இரண்டாவது ரி-20 இன்று

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெற்று, தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது. தொடரில் மூன்று ஆட்டங்கள் என்பதால், அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே ஆஸ்திரேலியாவால் தொடரைக் கைப்பற்ற முடியும். மாறாக ஓர் ஆட்டத்திலேனும் இந்தியா வெற்றிபெற்று விட்டால் தொடர் இந்தியாவிடம் சென்றுவிடும். எனவே சொந்த மண்ணில் தொடர் பறிபோவதை எதிர்த்து ஆஸ்திரேலியா கடுமையாகப் போராடும். 3:0 என்ற கணக்கில் ஆஸியை வென்றால், தரப்படுத்தலில் முதலிடம் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இந்தியாவுக்கு உள்ளதால் இந்தியாவும் பலமாகப் போராடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில்எஞ்சிய இரு ஆட்டங்களிலும் விறுவிறுப்புக்குப் பஞ்சம் இருக்காது. (ம)



# சானியா - கிங்கிஸ் இணையின் வெற்றி ஆஸியிலும் தொடர்கிறது

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா – கிங்கிஸ் இணை அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. மட்டுமல்லாமல் தொடர்ச்சியாக 34ஆவது ஆட்டத்தில் வெற்றிபெற்று சாதனையையும் நிலைநாட்டியுள்ளது.

குறித்த தொடரின் காலிறுதியில் சானியா மிர்சா – கிங்கிஸ் இணையை எதிர்த்து அன்னா – சோகா இணை மோதியது. முதல் செற்றை 6:2 என்ற கணக்கில் கைப்பற்றிய மிர்சா – கிங்கிஸ் இணை, இரண்டாவது செற்றை 4:6 என்ற அடிப்படையில் இழந்தது. இதனால் வெற்றியாளரை நிர்ணயிக்கும் செற்றாக மூன்றாவது செற் மாற்றம் பெற்றது. பெரும் ஆதிக்கம் செலுத்திய சானியா – கிங்கிஸ் இணை 6:1 என்ற கணக்கில் இலகுவாக அந்த செற்றைக் கைப்பற்றி தோல்வியில்லாத வெற்றியைப் பதிவுசெய்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றது. (ம)

# முல்லை லீக் அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கான யூனியர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் அணி மோதிய இந்த ஆட்டத்தில், முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# சொந்தத் தொடரில் சம்பியனானது காரைநகர் கலாநிதி வி.கழகம்

யாழ்ப்பாணம், ஜன. 29

தைத் திருநாளை முன்னிட்டு காரைநகர் கலாநிதி விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கலாநிதி அணியே சம்பியனாகியுள்ளது.

உள்ளூர் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட விலகல் முறையிலான இந்தத் தொடரின் இறுதியாட்டம், கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் காரைநகர் கலாநிதி அணியை எதிர்த்து நல்ல நண்பர்கள் அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் தனித்து ஆதிக்கம் செலுத்திய காரைநகர் கலாநிதி அணி 6:0 என்ற கோல் கணக்கில் இலகுவில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனாதிபதியின் பணிப்பின் பெயரில் இம்மாதம் 25ஆம் திகதி முதல் நாளை வரை தொற்றா நோய்களைக் கட்டுப்ப[illegible]த்தல் திட்டத்தில் உடற்பயிற்சி வாரமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அ[illegible]லுவலகங்களில் உடற்பயிற்சி செய்தல் கட்டாயமாக் கப்பட்டுள்ளது. முல்லைக் கல்வி வலயத்திலும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப் பட்டது. (ம)



யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் துடுப்பாட்டத்துறையின் வளர்ச்சிக்காக இலங்கை கிரிக்கெட் பவுண்டேசனால் துடுப்பாட்ட உபகரணங்கள் சில வழங்கப்பட்டுள்ளன. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 29

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன். யூட். கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'சி' அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதவுள்ளது.

**ஐக்கிய வி.கழகத் தொடர்**

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய அணியை எதிர்த்து இளவாலை மத்திய அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்க ஞாபகார்த்தத் தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் குணபாலசிங்கம் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் ஆரம்பமாகின்றது. இதன்படி இன்று 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதவுள்ளது. (ம-23)



## மரதன் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 29

நெல்லியடி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மரதன் ஓட்ட போட்டியும், அதற்கான பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரி அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் நேற்று நடை பெற்றது. கல்லூரி முன்றில் இருந்து காலை 7 மணிக்கு ஆரம்பமான மரதன் ஓட்டப்போட்டி, ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு என இரு பிரிவாக நடை பெற்றது. பின்னர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி எஸ்.சேதுராஜாவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி உடற் கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர் ராஜசீலனும் கலந்துகொண்டனர். (ம-109)

## கே.கே.எஸ்., கே.ஸி.ஸி.ஸி. அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஜன. 29

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். அணியும், ஆண்கள் பிரிவில் கே.ஸி.ஸிஸி. அணியும் வெற்றிபெற்றுள்ளன. ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தப்படும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் அணியை எதிர்த்து கே.கே. எஸ். அணி மோதிக்கொண்டது. இதில் கே.கே.எஸ். அணி 47:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி அணி மோதிக்கொண்டது. இதில் கே.ஸி.ஸி.ஸி. அணி 73:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

## யங்ஸ்ரார் வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 29

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத் துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:- திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து லயன் அணி மோதிக் கொண்டது. இதில் ஈஸ்வரன் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்இக்பால் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் 'பி' அணி மோதிக் கொண்டது. இதில் அல்-இக்பால் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து கோல்டன் பிரதேர்ஸ் அணி மோதிக்கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா இரண்டு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

## மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜன. 29

**முத்துக்குமாரசுவாமி ம.வி.**

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மை திறனாய்வுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன. குறித்த வித்தியாலயத்தின் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கணக்காளர் திருமதி சி.நந்தகுமாரும் சிறப்பு விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**எருதிடல் அ.த.க. பாடசாலை**

கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. குறித்த பாடசாலையின் அதிபர் ச.ஜெயரூபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா கலந்துகொள்ளவுள்ளார்.

**சிறி சண்முகானந்தா வித்தியாலயம்**

சாவகச்சேரி கல்வயல் சிறி சண்முகானந்தா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் இ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் பீட பேராசிரியர் க.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் ஜி.விமலன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விவலய பிரதிப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார்.

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி**

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் எம்.செல்வஸ்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக குறித்த கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ஆர்.ராசவிஜயன் கலந்து கொள்ளவுள்ளார்.

**அராலி சரஸ்வதி ம.வி.**

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு குறித்த வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் அதிபர் ந.சபாரத்தினசிங்கியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார். [illegible] விருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ச.ம.யூ.பிரிகெட் கலந்துகொள்ளவுள்ளார். (ம-422-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் பறந்த இந்தியக்கொடி கோக்லியின் தீவிர ரசிகருக்கு சிறை



இந்தியா-ஆஸ்திரேலியாஇடையே நடைபெற்ற முதலாவது ரி-20 ஆட்டத்தில் கோக்லி சிறப்பாக விளையாடினார். இதனைக் கொண்டாடும் விதமாக பாகிஸ்தானைச்சேர்ந்த அவரது ரசிகர் ஒருவர் தன் வீட்டில் இந்தியக் கொடியை ஏற்றினார். பரம எதிரியான இந்தியாவின் கொடியை வீட்டில்ஏற்றி அமைதிக்குப்பங்கம் விளைவித்தமைக்காக குறித்த ரசிகருக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் 10 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துள்ளதாக அறிய வருகிறது.

இந்திய டெஸ்ட் அணியின் தலைவராக கோக்லிக்கு உலகம் முழுவதும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். பாகிஸ்தானிலும் ஏராளமான ரசிகர்கள் கோக்லிக்கு உண்டு. பாகிஸ்தான் பெண்கள் அணியைச் சேர்ந்த, பிஸ்மாவும். கோக்லியின் தீவிர ரசிகைதான். இந்த நிலையில் இந்திய அணிக்கும்,ஆஸ்திரேலிய அணிக்கும் இடையே நடைபெற்ற ரி-20 ஆட்டத்தை, பஞ்சாப் மாநிலம் ஓகாரா மாவட்டத்தில், உமர் ட்ராஸ் என்ற கோக் லியின் தீவிர ரசிகர் பார்த்துள்ளார். கோக்லியின் அதிரடியைப் பார்த்து உற்சாகமடைந்த அவர்,தனது வீட்டின் மேல் தளத்தில் இந்தியக் கொடியைப்பறக்க விட்டுள்ளார். இதனை பார்த்த அக்கம் பக்கத்தினர், உமர் வீட்டில் இந்திய தேசியக் கொடி பறப்பது குறித்து பொலிஸாரிடத்தில் முறைப்பாடு தெரிவித்தனர். தொடர்ந்து உமர் வீட்டுக்கு வந்த பொலிஸார், இந்திய தேசியக் கொடியை கீழே இறக்கிகைப்பற்றினர். அத்துடன் அவரது வீட்டில் சோதனை நடத்தினர். வீட்டில் இருந்த கோக்லியின் படங்களையும் கைப்பற்றிக் கொண்டுசென்றனர். நீதிமன்றில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## 19 வயதினருக்கான உலகக்கிண்ணம்; இந்தியா, இலங்கை அணிகள் வெற்றி

ICC UNDER19 CRICKET WORLD CUP BANGLADESH 2016

19வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ணத் தொடர் பங்களா தேசில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் ஆகிய அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

இலங்கையை எதிர்த்து மோதியது கனடா. நாணயச் சுழற்சியில்வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடி 6 இலக்குகள் இழப்புக்கு 315 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனடா 39.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் இலங்கை அணி 196 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவை எதிர்த்து அயர்லாந்து பலப்பரீட்சை நடத்தியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 9 இலக்குகளை இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து 49.1 பந்துப்பரிமாற்றங்கள் வரையில் தாக்குப்பிடித்து 189 ஓட்டங்களில் சுருண்டு 79 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்திய ஆட்டத்தில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 126 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் 31.3 பந்துப்பரிமாற்றங்களில் நான்கு இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது.

நியூசிலாந்து, நேபாளம் அணிகள் மோதிய ஆட்டத்தில் நேபாளம் நியூசிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து238ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து 206 ஓட்டங்களில் சுருண்டு 32 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. (ம)

## முர்ரே முன்னேற்றம்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்தின் முர்ரே அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளார்.

தரப்படுத்தலில் 8ஆம் நிலை வீரரான ஸ்பெய்னைச் சேர்ந்த டேவிட் பெரரை எதிர்கொண்ட, இரண்டாம் இடத்தில் உள்ள வீரரான முர்ரே முதல் செற்றை 6:3 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது செற்றை 6:7 என்ற கணக்கில் போராடி இழந்தார். இருப்பினும் மீண்டெழுந்து 6:2, 6:3 என்ற செற்கணக்கில் அடுத்தடுத்த செற்களைக் கைப்பற்றி அரையிறுதிக்குத் தகுதிபெற்றார். முர்ரே தனது அரையிறுதி ஆட்டத்தில் கனடாவின் மிலோஸ் றாவோனிக், பிரான்ஸின் காயெல் மொன்பில்ஸ் இருவரில் ஒருவரையே சந்திக்கவுள்ள நிலையில், அந்த ஆட்டத்தில் அவர் வெற்றிபெறுவார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## இந்தியா - இலங்கை ரி-20 தொடர்; அறிவிக்கப்பட்டது இலங்கை அணி

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட் டங்களைக் கொண்ட ரி-20 தொடர் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான இலங்கை அணியின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.



காயம் காரணமாக மலிங்க, மத்தியூஸ் இருவருக் கும் ஓய்வு கொடுக் கப்படுள்ளது. சந்திமல் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.வேகப்பந்து வீச்சாளரான பெர்ணான்டோ நீண்ட இடைவேளையின் பின்னர் மீண்டும் அணியில் இடம் பிடித்துள்ளார். ராஜித, பினுர பெர்ணான்டோ, குணரத்ன மூவரும் அறிமுக வீரர்களாக களமிறங்குகின்றனர்.

இரு அணிகளுக்கும் இடையி லான முதலாவது ரி-20 ஆட்டம் பெப்ரவரி 9ஆம் திகதி புனேயிலும், இரண்டாவது ஆட்டம் 12ஆம் திகதி டெல்லியிலும், மூன்றாவது ஆட்டம் 14ஆம் திகதி விசாகப்பட்டினத்திலும் நடைபெறவுள்ளன.

குறித்த தொடருக்கான இலங்கை அணி விவரம் - சந்திமல் (தலை வர்), டில்சான், பிரசன்னா, சிறிவர்த்தன, குணதிலக, பெரேரா, சாணகா, குணரத்ன, கப்புக் கெதர, சமீர, பெர்ணான்டோ, ராஜித, பினுர பெர்ணான்டோ, செனநாயக்க, வண்டர்சே. (ம)

## ஆமிரை ஏளனம் செய்த அறிவிப்பாளருக்கு நியூசிலாந்து கிரிக்கெட் கண்டனம் தெரிவிப்பு

நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக் கிடையிலான 3ஆவது ரி-20 ஆட்டத்தில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் ஆமிரை ஏளனம் செய்த மைதான அறிவிப்பாளருக்கு நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டு தனது தண்டனைக் காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர், நியூசிலாந்துத் தொடரிலேயே ஆமிர், முதன்முறையாகப் பங்குபற்றியிருந்தார். மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் ஆமிர் பந்துவீசும்போது மைதான அறிவிப்பாளர் பெட்டியில் பணம் வீழ்வது போன்றதான ஒலியை எழுப்பியிருந்தார். இதற்காக, பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முகாமைத்துவத்திடம் முதலில் மன்னிப்புக் கோரியிருந்த நியூசிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சபை, தற்போது அறிவிப்பாளருக்கு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது. (ம)

விசேட போட்டிப் பரீட்சை கருத்தரங்கு
SLAS
(Sat 9.00- 2.00 pm)
SLEAS
(Sat 9.00- 2.00 pm)
Feb-06இல் நடைபெறவுள்ள
அதிபர் சேவைக்கான போட்டிப்பரீட்சை
(Sat,Sun 9.00-3.00 pm)
Feb-07இல் நடைபெறவுள்ள
சட்டமாணி (LLB) போட்டிப்பரீட்சை
(Sat,Sun 10.00-5.00 pm)
விரிவுரையாளர்கள் P. உமாசங்கர் P. கமலதாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P: 077 469 6695

போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்
வடமாகாண அலுவலர்
சனி, ஞாயிறு, வியாழன் (காலை 9.00-4.00)
மத்திய வங்கி உதவியாளர்
வெள்ளி, சனி, (காலை 9.00-4.00)
வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்
சனி (பி.ப 2.00 மணி)
திறந்த பல்கலைக் கழக சட்டமாணி
சனி, ஞாயிறு (பி.ப 1.00 - 5.00 மணி)
SLAS, SLEAS
பிரிவு I ஞாயிறு (9.30 மணி)
பிரிவு II செவ்வாய் தொடக்கம் வெள்ளி (பி.ப 5.00-6.30)
T.P: 0766 883394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆலயத்தர் வீதி, கோயிலடிவங்கிபாதகல்)

வெளிவந்துவிட்டது
தமிழ் மொழி தரம் 1
2016 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக கு.வி. அச்சகத்தின் வெளியீடு
தமிழ் மொழி தரம் 1 பயிற்சி நூல்
தற்பொழுது சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
K.V. PRINTERS
355, Clock Tower Road, Jaffna.
T.P.No: 021 7200 237

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org